பத்மா கிரகதுரை

காதல் சகுனி

பத்மா கிரகதுரை
எழுதும்
காதல் சகுனி

Contents

1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
-நிறைவு-

1

அவன் கன்னங்கள் துடித்தன. இதழ்கள் குவிந்தன. கண்களில் காதல் வழிந்தது.குவிந்த இதழ்கள் அருகிலிருந்த பெண்ணின் முகத்தை நெருங்கியதும் மிக லேசாக விரிந்து கொள்ள, அந்தப் பெண்ணின் முகத்தில் தயக்கமும்,தடுமாற்றமும் அவற்றை மீறிய ஆர்வமும் தெரிந்தது. இரு உதடுகளும் ஒன்றை ஒன்று நெருங்கி கவ்விக் கொண்டன. எலியை கவ்வும் பூனையின் வேகத்துடன் இருந்தது அந்த இதழணைவு.

பார்த்துக் கொண்டிருந்த துளசிக்கு வாந்தி வருவது போல் ஒரு உணர்வு உண்டானது. தலையை திருப்பி பக்கம் பார்க்க அவளுக்கு இருபுறமும் அமர்ந்திருந்த ரஞ்சனியும், பிரியாவும் கண்களை சிமிட்ட கூட மனமின்றி விரிந்த விழிகளுடன் பார்த்தபடி இருந்தனர். துளசி தனது இரண்டு கைகளாலும் இரு பக்கமும்

அமர்ந்திருந்தவர்களின் தொடையில் ஓங்கி அறைந்தாள்.

"என்ன கண்றாவிடி இது? இதை போய் இப்படி பார்த்து கொண்டிருக்கிறீர்கள்?"

பிரியா அவசரமாக ரிமோட்டை எடுத்து டிவியில் ஓடிக் கொண்டிருந்த காட்சியை உறைய வைத்தாள். "அறிவு கெட்டவளே! எவ்வளவு நல்ல சீன்! சரியான நேரத்தில் கெடுத்தாயே!"

ரஞ்சனி அவள் கையிலிருந்த ரிமோட்டை பிடுங்கினாள்." எதற்காகடி நிறுத்தினாய்? கொஞ்சம் ஃபார்வேர்ட் பண்ணி திரும்ப ஓட விடு"

"என்ன திரும்பவும் முதலில் இருந்தா? என்னால முடியாதுடி! நான் கிளம்புறேன்"

எழுந்த துளசியை இரண்டு பக்கமும் கைகளைப் பிடித்து இழுத்து மீண்டும் உட்கார வைத்தனர். "இந்த படத்தை முடிச்சிட்டு தாண்டி நீ போகணும்"

" படமா இது? எப்படி இந்த மாதிரி வல்கராலாம் படம் எடுக்குறாங்க! அதையும் நீங்க இப்படி உட்கார்ந்து பாக்குறீங்களே!"

" சரிதான் கூன் பாட்டிக்கு திருவருட்செல்வர் போட்டு விடலாம்"

"ஏய் தண்டட்டி போட்டுக்கிட்டு கம்பை ஊனிட்டு படம் பாக்குற கிழவின்னு நினைச்சியா என்னை?"

"ஆமாம், ஒரு நாள் ஜீன்ஸ் போட சொன்னா ஆயிரம் தடவை யோசிப்பவளாயிற்றே நீ! எப்பொழுது பார்த்தாலும் இந்த சுடிதார். உனக்கெல்லாம் இது போன்ற உணர்ச்சி மயமான காதல் படம் பிடிக்கும் என்று எதிர்பார்த்தது எங்கள் தப்பு"

" என்ன இதில் காட்டுவதற்கு பெயர் காதலா?காதல் என்றால் கண்ணியமாக இருக்க வேண்டும். கண்கள்தான் பேச வேண்டும், இதயம் மட்டுமே துடிக்க வேண்டும், இதயத்தின் துடிப்பை கண்கள் பேச வேண்டும். இதில் காட்டுவது போல் உடல் துடித்து கைகள் பேசக்கூடாது"

"ஏய் என்னடி இவ இன்னும் 50-சிலிருந்து வெளியில் வரவே இல்ல!"

"ஏய் கே பி சுந்தராம்பாள் காலத்து சினிமாதான் உனக்கெல்லாம் லாயக்கு"

"சரிதான் நிறுத்துங்கடி. அப்படி ஒன்றும் நான் காதல் படங்களுக்கோ காதலுக்கோ எதிரி இல்லை. காதல் என்பது ஒரு கட்டுப்பாடோடு இருக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன்"

" ஒரே ஒரு லிப் கிஸ்ஸால் இந்த காதலில் கட்டுப்பாடு எங்கே இல்லாமல் போய்விட்டது?"

வாதிட்ட தோழியை உஸ் என்று பார்த்தாள் துளசி. "இதெல்லாம் வியாபார தந்திரம்டி. இது போன்ற சீன்கள் வைத்தால் தான் உங்களைப் போன்ற இளைஞர்கள் படம் பார்க்க தியேட்டருக்கு வருவார்கள்"

" துளசி தியேட்டர்ல படத்துல இந்த சீன் கிடையாது தெரியுமா? இப்போ ஓடிடில மட்டும்தான் வந்திருக்கிறது"

" சரிதான் இதிலேயே தெரிந்து கொள்ளுங்களேன் இந்த படத்தின் இலட்சணத்தை"

" என்னடி லட்சணம்! இந்த சீனை பார்ப்பதற்காகத்தான் நாங்கள் படத்தையே பார்க்க ஆரம்பித்து இருக்கிறோம். இது மட்டும் இல்லை இன்னமும் ரெண்டு மூணு சீன்..." சொன்ன தோழியின் வாயை மூடினாள்.

" போதும்டி அதுதான் படத்தோட லட்சணம் தெரிஞ்சிடுச்சே! இன்னும் எந்த சீனையும் பார்க்க நான் தயார் இல்லை"

"நீ கிளம்பு தாயே, நாங்களாவது நிம்மதியா மீதி படத்தை பார்க்கிறோம்" ரஞ்சனி கையெடுத்து கும்பிட்டு அவளை தள்ள, பிரியா உறைந்திருந்த காட்சியை மீண்டும் கொஞ்சம் முன்னால் தள்ளி ஓடவிட்டு விழிகளை வட்டமாக திறந்து கொண்டு டிவிக்குள் தலையை நுழைத்துக் கொள்வாள் போல் அமர்ந்து கொண்டாள்.

டிவி ஓடவும் ரஞ்சனியும் அவள் அருகே போய் அமர்ந்து கொள்ள துளசி லேசாக தலையில் அடித்துக் கொண்டு வெளியேறினாள்.
" நாளை ஆபீஸ்ல பாக்கலாமடி" விடைபெற்ற துளசிக்கு 'ம்' கொட்ட கூட தோழிகளுக்கு நேரம் இருக்கவில்லை. திரையில் மீண்டும் அந்த கதாநாயகன் இதழ் பிளக்க கதாநாயகியை நெருங்க துளசி வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டு வெளியே வந்து விட்டாள்.

இது போன்ற திரைப்படங்களை எடுப்பவர்களை நிற்க வைத்து சுட வேண்டும் என்ற வேகம் அப்போது அவளுள் வந்தது. மிருகம் போல் என்ன காதல் இது! ஆரம்பத்தில்

அழகான கவிதை போல் காதலை சொல்லிக் கொண்டிருந்த படம்தான். திடீரென்று இப்படி எல்லை மீறிய காட்சிகள். ஸ்கூட்டியை ஓட்டிக் கொண்டிருந்தவளின் முகம் கோபத்தில் சிவந்திருந்தது.

முக்கால் மணி நேர பயணத்திற்கு பின் தன் இருப்பிடத்தை அடைந்தவள் வீட்டின் கீழ்ப்பகுதி விளக்குகள் அணைக்கப்பட்டு இருளாக இருக்க,ஆன்ட்டி தூங்கிட்டாங்க போலவே நினைத்தபடி தான் குடியிருக்கும் மாடிப்பகுதிக்கு பக்கவாட்டு படிகள் மூலம் ஏறினாள்.

கதவை திறந்ததும் பெரிய ஹாலும் அதன் இருபுறமும் இரு அறைகளும். தனது வலது பக்க அறையை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். சின்னதாய் ஒரு ஹால்,பெட்ரூம், கிச்சன் என கச்சிதமாக இருந்தது அந்த போர்ஷன். சென்னையில் இது போன்ற இடம் தங்குவதற்கு கிடைத்தது பெரிய விஷயம்.

சென்னைக்கு வேலை கிடைத்து வந்தபோது லேடிஸ் ஹாஸ்டலில் தங்கி இருக்க துளசி மிகவுமே சிரமப்பட்டாள். அந்த நேரத்தில்தான் சுஜாதாவை ஒரு கோவிலில் சந்தித்தாள். கண்களை மூடி தூணில் சாய்ந்து அமர்ந்திருந்தவரை தோள் தொட்டு அசைத்து "என்ன ஆன்ட்டி உடம்புக்கு ஏதாவது செய்கிறதா?" என்று பரிவுடன் கேட்க, பேச முடியாமல் தண்ணீர் என ஜாடை செய்தார் அவர்.

உடனே எதிரில் இருக்கும் கடைக்கு போய் ஒரு தண்ணீர் பாட்டில் வாங்கி வந்து கொடுக்கவும், தனது பர்சில் இருந்த மாத்திரையை எடுக்க அவர் சிரமப்படுவதை கண்டு தானே பிரஷர் மாத்திரையை எடுத்து அவர் போட்டுக் கொள்ள உதவினாள்.
பத்து நிமிடங்கள் கழித்து ஆசுவாசமடைந்த அவர் நன்றி சொல்ல இருவருக்குள்ளும் வயது வித்தியாசத்தை தாண்டி ஒரு தோழமை மலர்ந்தது. பேச்சுப் போக்கில் தான் தங்க இடம் தேடிக் கொண்டிருப்பதை துளசி சொல்ல தனது வீட்டு மாடியில் தங்கிக் கொள்ள சுஜாதா அழைத்தார். மகனும் மகளும் வெளிநாட்டில் செட்டில் ஆகி விட கணவர் இறந்தபின் தனியாகவே தான் இருப்பதை தெரிவித்தார் சுஜாதா.

அவர் இருக்கும் இடம் அவளது அலுவலகத்திற்கு பக்கம் என்பதால் துளசி உடனடியாக சம்மதித்து விட்டாள். எப்போதோ வந்து போகும் மகன் மகளுக்கு என்று வசதியாக அவர் கட்டி வைத்திருக்கும் மாடி போர்சன் இது.

கடந்த மூன்று வருடங்களாக மகனோ மகளோ வருவதில்லை, அங்கிருந்து போனில் பேசுவதோடு சரி, வருத்தத்தோடு சுஜாதா சொன்னபோது துளசிக்குமே வருத்தம் தான்.

" கவலைப்படாதீர்கள் ஆன்ட்டி நாம் ஒருவருக்கொருவர் துணை" என்று தோள் அணைத்துக்கொண்டாள். சில நாட்களிலேயே நட்பை தாண்டி இருவருக்குள்ளும் ஒரு வித பாசம் உருவானது.

அடுப்பில் தோசை கல்லை வைத்து தோசை ஊற்றிய துளசி ஆன்ட்டி சாப்பிட்டார்களா என்று தெரியவில்லை, இந்த ரஞ்சனியும் பிரியாவும் நல்ல படம் பார்க்க வா! என்று தொல்லை செய்ததில் அவர்கள் வீட்டிற்கு போய் படம் பார்த்ததில் நேரம் போய்விட்டது,நினைத்தபடி சாப்பிட்டு முடித்தவள் சிறிது நேரம் அலுவலக வேலைகளை பார்த்துவிட்டு பத்தரை மணிக்கு விளக்கணைத்து படுத்து விட்டாள்.

எவ்வளவு நேரம் தூங்கினாளோ தெரியவில்லை, திடீரென்று கதவை யாரோ தட்டும் சத்தம்.. இல்லை இடிப்பது போல் ஒரு மாதிரி சத்தம் கேட்க,யாரது வீட்டிற்குள் வந்தது யோசித்தபடி போய் கதவை திறந்தவள் அதிர்ந்தாள். முழுவதும் குடிபோதையில் தள்ளாடியபடி வாசலில் நின்றிருந்தான் ஒருவன்.

பூட்டியிருந்த வீட்டிற்குள் இவன் எப்படி வந்து நிற்கிறான்! துளசியின் மூளை வேலை செய்ய மறுத்தது.

அவனுடைய முகம் முழுவதும் கொசமுசவென தாடி மண்டிக் கிடக்க, தலை மயிரும் கலைந்து முகத்தை மறைத்திருந்தது. கதவை திறந்தவளை பார்த்ததும் இரு கைகளையும் விரித்து "ஹாய் டார்லிங்" என்றபடி நெருங்கினான்.

'வீல்' என்ற அலறலுடன் பின் வாங்கிய துளசியின் மனதிற்குள் அந்த நேரத்திலும் சற்று முன் தோழிகளுடன் பார்த்த படத்தின் ஹீரோ நினைவிற்கு வந்தான். ஏனென்றால் அந்த படத்திலுடைய ஹீரோவின் மேனரிசங்கள் அப்படியே இதோ இவனைப் போன்றேதான் இருந்தது.

அதாவது இந்த இவன் அந்த படத்தை பார்த்துவிட்டு அந்த ஹீரோவை போல தன்னை உருவகப்படுத்திக் கொள்கிறான்.ஆக, நான் நினைத்தது சரியாகப் போற்று.இவனைப் போன்ற இளைஞர்களை கெடுக்க வென்றே அது போன்ற படங்கள் எல்லாம் எடுக்கப்படுகின்றன நினைத்தவள் ஆன்ட்டி என்ற

அலறலுடன் அவனைத் தாண்டி கீழே ஓடத் துவங்கினாள்.

2

மாடி வாசல் கதவு உள்பக்கமாக மேலே கீழே தாழ்பாள்கள் எல்லாம் போட்டு கச்சிதமாக பூட்டப்பட்டிருந்தது. அவசரமாக கீழ்த்தாழ்பாளை திறந்தவள் மேலிருந்த தாழ்பாளை குதித்து எக்கி கீழே இறக்கிய போது பட்டென்று அந்த தாழ்பாள் மீண்டும் போடப்பட்டது.

கை நடுங்க துளசி திரும்பிப் பார்க்க அவன் இப்போது அருகில் நின்றிருந்தான் "சாரி...சாரி...நீ..நீங்க கிருஷ்ணாவா?" குளறலாய் கேட்டான்.

இவனுக்கு எப்படி என் பெயர் தெரியும் பயமாய் அவனை பார்த்தபடி தலையசைத்தவள் "கதவை திறங்க,நான் ஆன்ட்டி கிட்ட போகணும்" என்றாள்.

" இல்லை ஆன்ட்டி மாத்திரை போட்டுக் கொண்டு தூங்கிக் கொண்டிருப்பார்கள். இந்த நேரத்தில் நாம் அவர்களை தொல்லை செய்ய வேண்டாம்.இது தெரியாமல் நடந்த குழப்பம். ப்ளீஸ் நீங்க உங்க ரூமுக்கு போங்க" நெற்றிப் பொட்டை அழுத்தி விட்டபடி துண்டு துண்டாய் பேசினான்.

துளசியுமே சுஜாதாவை பாதி தூக்கத்தில் எழுப்ப யோசித்தாள். அப்படியென்றால் ஆன்ட்டி சொல்லிக் கொண்டிருந்த உறவினன் இவன்தானா? ஆனால் ஒரு வாரம் கழித்து வருவான் என்று தானே சொல்லி இருந்தார். இவன் இப்படி திடீரென்று நடுராத்திரி அதுவும் இப்படி போதையில் வந்து நிற்கிறானே!

" இன்னைக்கு ஒரு சின்ன பார்ட்டி சந்தோஷத்துல அதிகமா..." என்று குடிப்பது போல் ஜாடை செய்தவன், "பயப்படாதீங்க கிருஷ்ணா, நீங்க போய் படுங்க. நான் இடம் மாற்றி கதவை தட்டிட்டேன். உங்கள பார்க்கவும் ஆன்ட்டின்னு
நினைச்சுத்தான்... சாரி" மீண்டும் மீண்டும் மன்னிப்பு கேட்டபடி தடுமாறிய பாதங்களுடன் இடது பக்க அறைக்கு போய் கதவை திறந்து உள்ளே போய் பூட்டிக் கொண்டான்.

மகன் மகளுக்கு ஒரே போல் இருக்குமாறு இரண்டு போர்சன்களை மாடியில் பிரித்து கட்டியிருந்தார் சுஜாதா. "உனது எதிர் போர்சனுக்கு எனது சொந்தக்கார பையன்

ஒருவன் தங்கிக் கொள்ள வருவதாக சொல்லியிருக்கிறான். கொஞ்ச நாட்கள்தான் இருப்பான். உனக்கொன்றும் ஆட்சேபம் இல்லையே", என்று இரண்டு நாட்களுக்கு முன்பே சுஜாதா இவளிடம் கேட்டிருந்தார்.

இவ்வளவு பெரிய இடத்தை குறைந்த வாடகைக்கு தனக்கு விட்டிருப்பதே பெரிய விஷயம் என்பதை உணர்ந்திருந்த துளசிக்கு அவரது கோரிக்கையை மறுக்க இயலவில்லை. மேலும் நல்ல குணமுடைய ஒருவனைத்தான் ஆன்ட்டி வீட்டிற்குள் அனுமதிப்பார் என்பதில் நம்பிக்கை இருந்ததால் "அதற்கென்ன ஆன்ட்டி தாராளமாக இருக்கட்டும்" என்று சொல்லி இருந்தாள்.

ஆனால் இவன் குணம் ? இப்படி குடித்துவிட்டு...? குழம்பியபடி தனது அறைக்குள் நுழைந்து பத்திரமாக எல்லா தாழ்பாள்களையும் போட்டுக்கொண்டு ஒருவித பயத்துடனே படுக்கையில் சரிந்தாள்.

ஆன்ட்டி இவனிடம் தன்னை பற்றி நிறைய சொல்லியிருக்க வேண்டும் என்று புரிந்தது.ஏனென்றால் அவனுடைய அழைப்பு...
கிருஷ்ணதுளசி! என்ற இவளது பெயரை பெரும்பாலும் எல்லோரும் கூப்பிடுவது துளசி என்றுதான்.

ஆனால் சுஜாதா "எனக்கு உன்னை கிருஷ்ணானு கூப்பிட பிடிக்குது. அப்படித்தான் கூப்பிடுவேன்" என்று விட்டார். இதோ இவனும் அப்படித்தானே அழைக்கிறான்! ஆன்ட்டியை போலவே...

அவனது பெயர் அழைப்பு ஒரு வகை அதிர்வலையை உள்ளுக்குள் பரப்ப கண்களை இறுக மூடிக்கொண்ட கிருஷ்ணதுளசியின் கண்களுக்குள் இரு கைகளையும் விரித்தபடி அணைக்க தயாராக இருந்தான் அவன். கூடவே அந்த திரைப்படத்தில் பார்த்த காதல் காட்சிகளும் மனதிற்குள் ஓட படக்கென்று விழிகளை திறந்து கொண்டாள் கிருஷ்ணதுளசி.

"இந்தப் படம் இப்போ யூத்துக்கு எவ்வளவு பிடிச்சிருக்கு தெரியுமா? கிட்டத்தட்ட பைத்தியம் மாதிரி இந்த படத்தை எல்லோரும் ஐந்தாறு தடவை பார்க்கிறார்கள்" பிரியா சொன்னது நினைவிற்கு வர மனதிற்குள் சலித்துக் கொண்டாள். அவர்கள் சொன்னது உண்மைதான் போலும். அந்த பாடாவதி படத்தை பார்த்துவிட்டு அப்படியே அந்த ஹீரோவை பின்பற்றும் இவனைப் போன்ற பைத்தியங்கள் இருக்கும்போது அந்த மாதிரி படங்கள் எல்லாம் ஓடுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

ஏதேதோ கலவையான எண்ணங்கள் மனதை அலைக்கழிக்க வெகு நேரம் தூக்கமின்றி புரண்டு கொண்டிருந்தாள் கிருஷ்ணதுளசி.

காலையில் தாமதமாக எழுந்தவளாய் அரக்கப்பரக்க கிளம்பி வெளியே வந்த போது எதிர் போர்சன் பூட்டியிருக்க ஒரு வகை நிம்மதியுடன் படி இறங்கினாள். ஸ்கூட்டியை ஸ்டாண்டை விடுத்து எடுக்கும் போது ஜன்னலில் சுஜாதாவின் முகம் தெரிந்தது.

" கிருஷ்ணா நைட் எப்போ வந்தாய்? நான் நன்றாக தூங்கிட்டேன் போல"

" ஒன்பது மணியாயிற்று ஆன்ட்டி. ஆபீஸ் முடிந்ததும் பிரெண்ட்ஸ் கூட அவங்க ரூமுக்கு போயிட்டு வந்தேன்" ஸ்கூட்டியில் ஏறி ஸ்டார்ட் செய்து நகத்தியவள் நின்று "ஆன்ட்டி உங்க சொந்தக்காரங்க வந்துட்டாங்க, போய் என்னன்னு பாருங்க" என்க சுஜாதா திகைத்தார்.

" யார் அச்சுவா?"

" அது எந்த அச்சுவோ பிச்சுவோ, எனக்கு தெரியாது. ராத்திரி ஃபுல் லோட்ல தடுமாறிட்டு வந்து என் ரூம் கதவை தட்டினாரு. இன்னும் தூங்கி எழலை.என்னன்னு பாருங்க" ஆன்ட்டியிடம் போட்டுக் கொடுத்த திருப்தியுடன் ஸ்கூட்டியை சீற விட்டாள்.

"நாங்கதான் படம் பார்த்து கண்ணெல்லாம் சிவந்திருக்கு. உனக்கு ஏன்டி கண் சிவந்திருக்கு?" ரஞ்சனி அலுவலகத்தில் அவளை சீண்ட, கிருஷ்ணதுளசி முறைத்தாள்.

" அந்த கண்றாவி படத்தை நினைத்தா எனக்கு தூக்கமே வரலை"

"ஏய் பிரியா பார்த்தியாடி, துளசிக்கு நைட் ஃபுல்லா அந்த படம் நினைப்பாவே இருந்ததாம்"

"ம்...அந்தப் படத்தை மறக்க முடியுமா? என்ன மாதிரி ஒரு படம், இல்ல துளசி!"

"ஏய் இனிமேல் அந்த படத்தைப் பற்றி பேசினீர்களானால் நான் மனுசியாகவே இருக்க மாட்டேன். ஒழுங்கா வேலைய பாருங்கடி"

"இப்ப மட்டும் மனுசியாவா இருக்கிற..! ஏதோ காதலே இல்லாம பிறந்த தெய்வப்பிறவி மாதிரி சீன் போட்டுட்டு இருக்கிற!ஏன்டி நான் கேட்கிறேன் உன் அம்மாவும் அப்பாவும் காதல் செய்யாமலேயே நீ பிறந்து விட்டாயா?"

தனது ரோலிங் சேரை அவள் பக்கம் நகர்த்தி நறுக்கென அவள் தலையில் கொட்டினாள் கிருஷ்ணதுளசி. "ஏய் தப்பா பேசாதடி!ஒழுங்கா வேலைய பாரு. ஹெச்.பி வர்ற நேரமாச்சு"

"வந்தாச்சு" ரஞ்சனி முணுமுணுக்க சட்டென மூன்று பெண்களும் இலகு போய் ஒருவித அட்டென்சனுக்கு மாறினர். கம்ப்யூட்டர் ஸ்கிரீனுக்குள் பார்வையை பதித்தனர்.

மிதமான பெர்ப்யூம் வாசனையுடனம் அவர்களை கடந்து சென்றவனுக்கு வேலையே நிறுத்தாமலேயே குட் மார்னிங் சொல்ல "ம்" என்றபடி கடந்தான் அந்த ஹெச்.பி.

இது அவன் பெயரோ கம்பெனி பதவிக்கான பெயரோ கிடையாது.ஹெச்.பி என்றால் ஹை பிரஷர் இப்படி அவனுக்கு பெயர் வைத்திருந்தனர் தோழிகள் மூவரும். சென்னையின் பிரபல ஐடி கம்பெனிகளுக்கு போட்டியாக வளர்ந்து வரும் ஸ்டார்ட் அப் கம்பெனி இது. அதிக போட்டிகளுக்கு இடையே தனித்து நிற்க முயற்சிக்கும் பெரிய கம்பெனியின் எம்.டி யாக சுமந்து கொண்டிருக்கும் வேலைப்பளுவின் தாக்கமோ என்னவோ எப்பொழுதும் ஹை பிரசர் வந்ததைப் போன்றே முகபாவத்துடன் இருப்பான் நிரஞ்சன்.

"என்ன நைட் பார்ட்டில ட்ரிங்க்ஸ் கொஞ்சம் அதிகமாயிடுச்சோ?" வேலை விபரங்களுக்காக அவன் அறைக்கு போன கிருஷ்ணதுளசியிடம் நிரஞ்சனம் கேட்க திடுக்கிட்டாள்.

முதல் நாள் அலுவலகம் முடிந்ததும் மாலையில் சாலை ஓரத்தில் தோழிகள் மூவரும் ஸ்கூட்டரை நிறுத்தி கிருஷ்ணதுளசியை தங்கள் அறைக்கு சினிமா பார்க்க அழைத்துக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் இவர்களை கடந்து சென்றது நிரஞ்சனின் கார்.

காருக்குள் இருந்தபடி தங்களை தவறாக கணித்திருக்கிறான் என்று உணர்ந்த கிருஷ்ணதுளசி முகம் சிவக்க படபடப்பாக அவனை பார்த்தாள்.

"என்ன சார் இப்படி இன்டீசண்டாக கேட்கிறீர்கள்?"

நிரஞ்சன் தோள்களை குலுக்கிக் கொண்டான். " இப்போது இங்கே இதெல்லாம் ரொம்பவும் சகஜம். நீ மிரளும் அளவிற்கு இதில் ஒன்றும் இல்லை"

"சாரி சார் நான் அந்த மாதிரி அல்ட்ரா மாடலம் பெண்கள் போன்றவள் இல்லை"

"ம் ...அது தெரியும்.ஏதோ ஓர் பட்டிதானே உன் ஊர்.முதன் முதலில் இங்கே வேலைக்கு வந்த போது நீ விழித்துக் கொண்டிருந்தது நினைவில் இருக்கிறது.ஆனாலும் இந்த இரண்டு வருடங்களில் நீ மாறவேயில்லை என்றால்...சாரி நம்ப முடியவில்லை"

கிருஷ்ணதுளசியின் உள்ளம் கொதித்தது. எங்கேயோ சில பெண்கள் செய்யும் தவறு எல்லா பெண்களும் இப்படித்தான் என்று இவனை போன்ற ஆண்களை நினைக்க வைக்கிறதே!

3

" விடு துளசி ,இப்படி நம்மை தவறாக நினைப்பதில் இந்த ஆண்களுக்கு ஒரு திருப்தி" பிரியா கிருஷ்ணதுளசியை சமாதானப்படுத்தினாள்.

"அப்படி இல்லடி அவர்களுக்கு போட்டியாக நாமும் மாறிக் கொண்டு வருகிறோம் என்ற பொறாமை" ரஞ்சனி சொல்ல மூவருக்குமே சிரிப்பு வந்தது.

சிரித்து பேசி நிரஞ்சனின் கேள்வியை கடந்தாலும் கிருஷ்ணதுளசியின் அடி மனது கொதித்துக் கொண்டுதான் இருந்தது.அதெப்படி கண்கள் கொஞ்சம் சிவந்து இருந்தால் இப்படி கேட்பானாமா? இவன் வீட்டுப் பெண்கள் எல்லாம் இப்படித்தான் குடித்துவிட்டு... மேலே மனதிற்குள் நினைப்பதற்கும் தயங்கி நினைவோட்டத்தை நிறுத்தினாள்.

"இந்த ஹெச் ஓக்கு ஒரு நாள் என்கிட்ட இருக்குடி, என்கிட்ட எதிலாவது மாட்டுவான்" சூளுரைத்தவளை வித்தியாசமாக பார்த்தனர் தோழிகள்.

" ஏய் அவன் நம்ம கம்பெனி எம்டி. அவன் எப்படி உன்னிடம் மாட்டுவான்?"

" எப்படியோ...? ஆனால் மாட்டுவான்.." ஏனோ கிருஷ்ணதுளசியின் மனதிற்குள் அப்படித்தான் தோன்றிக் கொண்டிருந்தது.

இந்த எண்ணத்துடனே தனது வீடு இருக்கும் தெருமுனை திரும்பியவுடன்தான் முதல் நாள் இரவு அவள் அறைக் கதவை தட்டியவன் நினைவிற்கு வந்தான். கதவு திறந்து வருபவள் யாரென்று தெரியாத அளவு தடுமாற்றத்திலும் இவர்கள் இருந்து கொண்டு பெண்களை வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் நக்கல் பண்ணுகிறார்கள், சலித்தபடி வீட்டு கதவை திறந்து நுழைந்தாள்.

அந்த தண்ணி வண்டியை காலையில் சுஜாதா ஆன்ட்டியிடம் மாட்டி வைத்து விட்டு வந்தது நினைவு வந்தது. அனேகமாக அவன் வீட்டை காலி செய்திருப்பான், இது போன்ற ஒழுக்க கேடுகளை ஆன்ட்டி அனுமதிப்பதே இல்லை நினைத்தபடி மாடிப்படியில் கால் வைத்தவள் திகைத்தாள்.

வீட்டிற்குள் இருந்து அட்டகாசமான ஆணின் சிரிப்பொலி கேட்டது. ஏனோ அது அவனுடைய சிரிப்புதான் என்றே தோன்றி விட இவனை இன்னுமா ஆன்ட்டி வீட்டிற்குள் வைத்திருக்கிறார்கள்?

மாடிக்கு போய் ரிப்ரெஷ் ஆகிவிட்டு கீழே வர வேண்டும் என்ற எண்ணத்தை மாற்றிக் கொண்டு அப்போதே ஆன்ட்டி வீட்டு கதவை தட்டினாள். "கதவு திறந்துதான் இருக்கு. உள்ள வாம்மா" சுஜாதாவின் குரல் கேட்க கதவை தள்ளித் திறந்தவள் வாசலுக்கு நேராக இருந்த ஒற்றை சோபாவில் கால் மேல் கால் போட்டு தோரணையாக அமர்ந்திருந்த அவனைத்தான் பார்த்தாள். அதே மேனரிசம் அந்த படத்து ஹீரோவின் போஸ். இவன் என்ன இப்படி ஒரு சினிமா பைத்தியமாக இருக்கிறான்!

இவளை பார்த்ததும் அவன் புன்னகைத்து "ஹலோ" என்க அப்பாவியாய் விழிகளை விரித்தாள் கிருஷ்ணதுளசி.

" இது யார் ஆன்ட்டி? "

அவன் திகைக்க சுஜாதா சிரித்தார்.

"நான்தான் உன்னிடம் சொல்லியிருந்தேனேம்மா. என்னுடைய சொந்தக்கார பையன். பெயர் அஸ்வத்"

"உங்கள் ரிலேஷன் ஒரு வாரம் கழித்து வரப்போவதாகத்தானே சொல்லியிருந்தீர்கள். இப்படி நடு இரவில் கதவைத் தட்டி தள்ளாடிக்கொண்டே டார்லிங்னு கூப்பிடுவார் என்று சொல்லவே இல்லையே!"

சுஜாதா சங்கடத்துடன் விழிக்க அவனோ கண்கள் மின்ன அவளை பார்த்திருந்தான்.

" ஏழு நாட்கள் முன்னால் வந்ததால் உனக்கு என்ன பிராப்ளம் கிருஷ்ணா?" அவன் சாதாரணமாக கேட்க கிருஷ்ணதுளசிக்கு கோபம் வந்தது.

" என்னுடைய முழு பெயரை சொல்லி கூப்பிடுங்கள்"

"அவ்வளவு நீளமாக பெயர் சொல்ல என்னால் முடியாது. உன் ஆன்ட்டி இப்படித்தானே கூப்பிடுகிறார்கள். நானும்

அப்படியேதான் கூப்பிடுவேன். அழகான பெயர் கிருஷ்ணா..." பேச்சின் முடிவில் அவன் கண்சிமிட்ட கிருஷ்ணதுளசிக்கு பற்றிக் கொண்டு வந்தது.

இதுவும் அந்த சினிமா ஹீரோவின் மேனரிசம். படத்தில் ஹீரோயினியிடம் பேசும் நிறைய சீன்களில் இப்படித்தான் அவன் கண் சிமிட்டினான். குறும்பாக பேசுகிறானாம். கிருஷ்ணதுளசிக்கு அஸ்வத் மேல் வெறுப்பு கூடிக்கொண்டே போனது.

"அர்த்த ராத்திரியில் முழு போதையில் அடுத்த அறைக்கதவை தட்டி வெளியே வந்த பெண்ணை அணைக்க வருபவனுக்கு தண்டனை கிடையாதா ஆன்ட்டி?" அதெப்படி அவனை இன்னமும் நீ வீட்டிற்குள் வைத்திருப்பாய் என மல்லுக்கு நின்றாள்.

"சுஜா நடந்த தவறுக்கு நான் நேற்று இவளிடம் மன்னிப்பு கேட்டு விட்டேன். மாடியில் தங்கிக் கொள் என்று நீ சாவி கொடுத்திருந்தாய். இடது வலது குழப்பமாகி இவள் அறைக் கதவை தட்டி விட்டேன்"

கிருஷ்ணதுளசி இடையிட்டாள் "முழு போதையில் இருந்தீர்கள்"

" ஆமாம்" தயங்காமல் ஒத்துக் கொண்டான். "இல்லாவிட்டால் சரியாக எனது அறைக்கல்லவா போயிருப்பேன்! தட்டிய கதவை ஒரு பெண் திறந்ததும் அப்போது எனக்கு சுஜாவை தவிர வேறு பெண் நினைவில் வரவில்லை. சுஜா என்று நினைத்துதான் டார்லிங் என்றேன்"

கிருஷ்ணதுளசி புருவம் சுருக்கினாள். "யார் இந்த சுஜா?"

ஒரு நிமிடம் அறைக்குள் மௌனம் நிலவ "பக்" என்று சிரித்தான் அஸ்வத். சுஜாதாவை பார்க்க அவர் புன்னகைத்தார்.

" அச்சு அப்படித்தான்மா, சின்ன பிள்ளையிலிருந்தே என்னை டார்லிங்னுதான் கூப்பிடுவான்"

கிருஷ்ணதுளசிக்கு தலையில் அடித்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. இது என்ன உறவோ!

" சுஜா டார்லிங் கிருஷ்ணாவிற்கு நம் மேல் பொறாமை போல் தெரிகிறது" அஸ்வத் மீண்டும் கண்களை சிமிட்டினான்.

கண்ணை நோண்டனும் உதடுகளுக்குள்

முணுமுணுத்தவளை கூர்ந்து பார்த்து கண்டுகொண்டு இன்னமும் அழுத்தமாக கண் சிமிட்டினான்.

"டார்லிங் உன் கிருஷ்ணா முன்னாடி கண்ணில் தூசு ஏதாவது விழுந்துட்டா...ஐயோ போச்சி! கண்ணே போயிடும் போலவே!"

"என்னடா?" சுஜாதா புரியாமல் பார்க்க, "இதோ இப்படி கண்ணை சிமிட்டினேன், அதற்கு கண்ணை நோண்டிடுவேன்னு சொல்றா" சிறு குழந்தை போல் ஆட்காட்டி விரலை அவளை நோக்கி நீட்டி புகார் சொன்னான்.

"கிருஷ்ணா அச்சு ரொம்ப நல்ல பையன்மா, இல்லாமல் அவனை உன்னுடன் மாடியில் தங்க சொல்வேனா?"

சுஜாதா பொய் சொல்ல மாட்டார் என்று தெரிந்தாலும் ஏனோ அந்த அஸ்வத்திடம் நேருக்கு நேர் நின்று சண்டையிடவே தோன்றியது கிருஷ்ணதுளசிக்கு.

போனில் மெசேஜ் டோன் வர எடுத்து பார்த்தாள்.எதிரில் அமர்ந்திருந்த அஸ்வத்தின் முகத்தில் கூர்மை வந்தது. அவளது அலுவலக ஆப்பில்(app) இருந்து ஒரு வேலைக்கான செய்தி வந்திருந்தது. இன்று இரவுக்குள் அதனை முடித்து அனுப்ப வேண்டும் என்று சொல்லி இருந்தான் நிரஞ்சன்.

சரிதான் இரவிலும் நிம்மதியாக இருக்க விட்டு விடாதீர்கள் மனதிற்குள் சலித்தபடி நிமிர்ந்தவள் அஸ்வத்தின் கூர்மையான பார்வைக்கு புருவம் சுருக்கினாள்.

" எந்த கம்பெனியில் வேலை பார்க்கிறாய்?"

ஆஹா இப்போது உனக்கு சொல்லி விட்டுத்தான் மறு வேலை பார், தனக்குள் நொடித்துக் கொண்டவள் "ஆன்ட்டி எனக்கு வேலை வந்து விட்டது. நான் மாடிக்கு போகிறேன். இரவு உங்களுக்கும் சேர்த்து தோசை செய்து விடுகிறேன். நீங்கள் எதுவும் சமைக்க வேண்டாம்" கிளம்பினாள்.
வாசல் படியை தாண்டும் போது, அவள் வேலை பார்க்கும் கம்பெனி பெயரை சுஜாதா அஸ்வத்திடம் சொல்லிக் கொண்டிருப்பது கேட்டது.

முழுதாக மூன்று மணி நேரங்கள் அங்கிங்கு அசையாமல் லேப்டாப் முன்னால் உட்கார்ந்து நிரஞ்சன் சொன்ன வேலையை அவள் குழுவினருடன் கலந்தாலோசித்து செய்து முடித்து அப்டேட் செய்துவிட்டு கிருஷ்ணதுளசி

நிமிரும்போது கடிகாரம் ஒன்பதரை காட்டியது.

ஷ்.. மறந்தே போய் விட்டேனே, ஆன்ட்டி 8 மணிக்கெல்லாம் சாப்பிட்டு மாத்திரை போட்டு படுத்து விடுவார்களே! சிறு குற்ற உணர்வுடன் வேகமாக படி இறங்கினாள்.

அவள் நினைத்ததற்கு மாறாக கீழ் வீடு விளக்கு வெளிச்சத்தில் இருக்க, "சாரி ஆன்ட்டி ஆபீஸ் ஓர்க்ல மறந்துட்டேன். இதோ தோசை மாவு கையோடு எடுத்துட்டு வந்துட்டேன். தக்காளி சட்னி இருக்குது. இங்கேயே இரண்டு தோசை ஊத்தி ரெண்டு பேருமே சாப்பிடலாம்"

சொன்னபடி வீட்டிற்குள் வந்தவள் நாசி உணர்ந்த புதுவித வாசத்தில் ஒரு நிமிடம் நின்று மூச்சை இழுத்தவள் "ஆஹா ஆன்ட்டி என்ன சமைக்கிறீங்க? வாசம் தூக்குதே!" கேட்டபடி கிச்சனுக்குள் போக அங்கே மரக் கரண்டியை பிடித்தபடி அடுப்பின் முன் நின்றிருந்தான் அஸ்வத்.

" ஹாய்! வா சாப்பிடலாம்" என்றான். அடுப்பில் புல்கா ரொட்டி புஸ் என எழும்பிக் கொண்டிருந்தது. "புல்கா ரொட்டி, நாட்டுக்கோழி மசாலா செம காம்பினேஷன். சூப்பரா இருக்கும்" தட்டில் சிக்கனையும், ரொட்டியையும் வைத்து நீட்டியவனை ஆச்சரியமாக பார்த்தாள் கிருஷ்ணதுளசி.

" உங்களுக்கு சமைக்க தெரியுமா?"

"இதை சாப்பிட்டு பார்த்துவிட்டு சொல்லு" அடுத்த ரொட்டியை அடுப்படி ஓரம் இருந்த சிறு உணவு மேஜையில் அமர்ந்திருந்த சுஜாதாவிற்கு நீட்டினான்.
"நீயும் இப்படி உட்கார்ந்து சாப்பிடம்மா" சுஜாதா சொல்ல தட்டில் இருந்த உணவின் வாசம் மூக்கைத் துளைக்க அமர்ந்து ரொட்டியை பிய்த்து வாயில் வைத்த கிருஷ்ணதுளசியின் கண்கள் உணவின் ருசிக்கு தாமாக மூடிக்கொண்டன.

" டெலிஷியஸ்" தன்னையறியாமல் அவள் சொல்ல "தேங்க்யூ" என்றான் அடுப்பை பார்த்தபடி நின்றிருந்த அஸ்வத்.

" எப்படா அச்சு இவ்வளவு டேஸ்ட்டா சமைக்க கத்துக்கிட்ட?" சுஜாதா கேட்க "டேஸ்ட்டா சாப்பிட பிடிக்கிறவங்க, தானாவே சமைக்க கத்துக்கிடுவாங்க சுஜா, எனக்கு சமைச்சு போட ஆள் இல்லைன்னு நானே சமைக்க ஆரம்பிச்சிட்டேன்" பேசிய படியே அவனும்

இவர்கள் அருகில் சாப்பிட அமர்ந்து கொண்டான்.

வாய் நிறைய உணவை அடைத்துக் கொண்டு "உங்கள் அம்மா..." விசாரித்தாள் கிருஷ்ணதுளசி.

" அம்மா இல்லை" உடனே பதில் சொன்னவனை "அச்சு" என அதட்டினாள் சுஜாதா.

" என்னுடன் இல்லை என்று சொல்ல வந்தேன். அதற்குள் என்ன கோபம் டார்லிங்?" கொஞ்சலான குரலில் சொன்னபடி சுஜாதாவின் தோளில் இடக்கையை போட்டு தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

" அம்மா கூட சண்டை போட்டுட்டு வந்துட்டீங்களாக்கும்?" கிருஷ்ணதுளசி சிறு முறைப்புடன் கேட்க அவளை நிமிர்ந்து பார்த்தவன் உதடு குவித்து மெலிதாய் விசில் அடித்தான்.

" சுஜா டார்லிங் நம்ம கிருஷ்ணாவுக்கு எவ்வளவு அறிவு பார்த்தாயா?" ஒரு நக்கலான கண் சிமிட்டல்.

கிருஷ்ணதுளசி எழுந்து விட்டாள். "நான் மாடிக்கு போகிறேன் ஆன்ட்டி"

அவள் பின்னாலேயே மாடியேறி வந்தவனை திரும்பி பார்க்கக் கூடாது என்றெண்ணியபடி கதவை பூட்டிக் கொள்ளப் போனபோது எதிர்பக்கம் அறைக்குள் நின்று அழைத்தான் அஸ்வத். "கிருஷ்ணா நான் ரொம்ப கெட்ட பையன் இல்லைதானே?"

புரியாமல் அவனைப் பார்க்க "சமைத்தெல்லாம் போட்டிருக்கிறேன்பா. கொஞ்சம் பார்த்து சொல்லு" அவன் கேட்ட விதத்தில் புன்னகைக்க துடித்த இதழ்களை இறுக்கிக் கொண்டாள்.

" சமைப்பவர்களெல்லாம் நல்லவர்களா?"

" நீங்கள்... நிறைய பெண்கள், இந்த சமையலை வைத்து தானே நல்லவர் பட்டம் வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போதெல்லாம் நாங்கள் ஆண்களும் அதையே ஃபாலோ பண்ண ஆரம்பித்து விட்டோம். சொல்லு நான் இத்தனூண்டாவது நல்லவன்தானே?"ஆட்காட்டி விரலில் விரற்கடை அளவு காட்டி கேட்டான்.

"சமைக்க தெரியாத பெண்கள் எல்லாம் கெட்டவர்களும் இல்லை, சமைக்க தெரியும் ஆண்கள் எல்லாம் நல்லவர்களும் இல்லை" சொல்லிவிட்டு கதவை மூடிக்கொண்டாள் கிருஷ்ணதுளசி.

"ஏய் கிருஷ்ணா! ஒன்றும் புரியவில்லை. திரும்பவும் சொல்லு" அஸ்வத்தின் கத்தல் கதவில் மோதி மீண்டும் அவனிடமே திரும்பியது.

4

"ஆபீஸ்ல ஓர்க் பண்றது போதாதுன்னு வீட்லயும் ஓர்க் கொடுத்து சாகடிக்கிறார்கள்" பிரியாவும் ரஞ்சனியும் புலம்ப கிருஷ்ணதுளசிக்கும் அதே எண்ணம்தான்.

முன்பு ஓர்க் ப்ரம் ஹோம் என்ற பெயரில் 24 மணி நேரமும் வேலை வாங்கிய கம்பெனிகள் இப்போது அதே பழக்கத்திற்கு அலுவலக வேலை போக வீட்டிலும் வேலை கொடுக்க ஆரம்பித்திருந்தனர்.
இதனை எப்படி தவிர்ப்பது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருக்கின்றனர் ஊழியர்கள்.

"இரவு பதினோரு மணி வரை வேலை செய்துவிட்டு சாப்பிடக் கூட தோன்றாமல் அப்படியே தூங்கி விட்டேன்" ரஞ்சனி சொல்ல பிரியா "நானும்,லேப்டாப் ஸ்கிரீனை பார்த்து பார்த்து பசியே இல்லை" என்றாள்.

கிருஷ்ணதுளசிக்கு முதல் நாள் இரவு தான் உண்ட உணவு ருசி நினைவு வந்தது " துளசி நேற்று நீ சாப்பிட்டாயா?" பிரியா அவள் தோளில் தட்ட,

" ஆங்... ஏன்டி சமைக்கிற ஆண்கள் எல்லாம் நல்லவர்களா?" என்றாள். தோழிகள் அவளை வினோதமாக பார்த்தனர்.

" என்னடி சம்பந்தம் இல்லாமல் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாய்?"

"அதில்லடி, இப்படி நாம் வேலை செய்துவிட்டு டயர்டாக இருக்கும்போது யாராவது நமக்கு சமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்தேன்"

"ஓ உன்னுடைய லவ்வர் அப்படி சமைத்துக் கொடுத்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிக் கொண்டாயா?"

"யாரடி லவ்வர்? அப்படியெல்லாம் எனக்கு கிடையாது" கிருஷ்ணதுளசிக்கு ஏனோ படபடப்பாக வந்தது.

"சரிடி லவ்வர் இல்லை, கணவன்"

"இல்லை... இல்லை கணவரெல்லாம் இல்லை" பதட்டமாக மறுத்தாள்.

"ஐயோ கடவுளே! இவளுக்கு என்ன ஆயிற்று?" பிரியா நெற்றியை பிடிக்க ரஞ்சனி "அம்மா துளசி தாயே! உன்னை பற்றி எங்களுக்கு நன்றாக தெரியும்.படத்தில் கூட காதலர்கள் லிப் கிஸ் கொடுப்பதை ஒத்துக் கொள்ள முடியாதவள் நீ. நீ யாரையாவது காதலிப்பாய் என்று நாங்கள் நினைக்கவே மாட்டோம்"

"அது தானடி நான் கணவன் என்றேன். அதற்கும் குதிக்கிறாள்"

"எதையாவது உளறாதீர்கள். எனக்கு யாரும் காதலனோ... கணவனோ... கிடையாது"

"ஓ துளசி மேடத்திற்கு அவ்வையார் ஆகும் எண்ணமா?"

"ஏய் கல்யாணம் வேண்டாமென்றா சொன்னேன்?" இருவர் தலையிலும் தலா ஒரு கொட்டு வைத்தாள்.

"இவ்வளவு நேரமாக நீ பிதற்றிக் கொண்டிருந்ததற்கு நாங்கள் வேறு என்ன அர்த்தம் எடுத்துக் கொள்ளட்டும்?"

"இதோ பாருங்கடி நான் சொல்ல வருவதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். காதலுக்கு நான் எதிரி இல்லை. கல்யாணத்திற்கு விரோதி இல்லை. எல்லாவற்றிற்கும் ஒரு வரைமுறை இருக்கிறது என்றுதான் சொல்கிறேன். கண்ணியமாய் காதலித்து சுற்றம் சூழ நிம்மதியாய் திருமணம் செய்து கொள்ள வேண்டும்"

"அடப் போடி மிளகுத்தூள் தூவாத ஆப்பாயில் மாதிரி சப்பென்று இருக்கிறது உன்னோட காதல்" ரஞ்சனி சொல்ல மற்றவர்கள் இருவருக்குமே சிரிப்பு வந்தது.

சிரித்துக் கொண்டிருந்தவர்களை முறைத்தபடி கடந்து போனான் நிரஞ்சன்.

"அட பாருடா நைட் முழுவதும் வேலை வாங்கிவிட்டு இப்போது கொஞ்சம் ரிலாக்ஸ் ஆக இருந்தால் முறைப்பதை பார். என்ன விடுங்கடி இன்னைக்கு அந்த ஹெச் பிக்கு இருக்கு" இறுக்கி பிடித்தவர்களை உதறுவது போல் பாவனை செய்த ரஞ்சனி, தோழிகள் இருவரும் அவளையே பார்த்தபடி இருக்க...

" ஓ என்னை பிடித்து நிறுத்தலையா நீங்க ?சரி விடு வேலையை பார்க்கலாம். காலையிலேயே அந்த பிரஷர் காரனோடு நமக்கு என்ன வம்பு!" ஒழுங்காய் வீட்டுப்பாடம் செய்யும் பள்ளி குழந்தையாய் மாறி கீபோர்டை தட்ட துவங்கினாள்.

மற்ற இருவரும் வேலைகளுக்குள் நுழைய

அலுவலகத்தில் கீபோர்ட் தட்டும் ஓசை தவிர வேறு எந்த ஓசையும் கேட்கவில்லை. கிட்டத்தட்ட மூன்று மணி நேரங்களுக்கு பிறகு லஞ்ச் டைம் தான் அனைவருமே ஸ்கிரீனை விட்டு பார்வையை நகரத்தினர் .

கும் என்ற வாசத்துடன் தட்டில் விழுந்த பிரியாணியை வெறுப்பாய் பார்த்தாள் பிரியா. "என்னடி சாப்பாடு இது? எப்போதும் இதையே எப்படி தின்பது?"

" ஏன் மூன்று மாதங்களுக்கு முன்னால் இந்த ஆபீஸில் சேர்ந்த புதிதில் பிரியாணி என்று அள்ளி அள்ளி விழுங்கினாயே! மறந்து போனாயா?"

" பிரியாணி என்பது எல்லோருக்கும் விருப்பமான உணவுதான்டி, அதற்காக அதையே தினமும் போட்டால்..."

"ம்.. அமிர்தம் இனிப்பாகவும் ருசியாகவும் இருக்கும்தான். ஆனால் தினமும் சாப்பிட கொடுத்தால் அதுவும் சலிக்கத்தானே செய்யும்?" என்ற கிருஷ்ணதுளசி தயிர் சாதத்தை தனது தட்டில் எடுத்துக் கொண்டிருந்தாள்.

" என்னமோடி மாடு மாதிரி இவர்களுக்கு வேலை செய்வதற்காக இதுபோல நல்ல நல்ல உணவுகளை எல்லாம் நமக்கு இலவசம் என்று பழக்கப்படுத்தி விடுகின்றனர். மூன்றே மாதத்தில் அந்த உணவுகளின் சுவை நமக்கு வெறுத்து விடுகிறது. அதோடு இப்படி வகையாக சாப்பிட்டு உட்கார்ந்த இடத்திலேயே இருந்து வேலை பார்ப்பதில் உடம்பும் வைத்து விடுகிறது" பெருமூச்சுடன் குனிந்து சற்று உப்பலாக இருந்த தனது உடலை பார்த்துக் கொண்டாள் பிரியா.

"எனக்கும் ஐந்து மாதத்தில் நான்கு கிலோ கூடிவிட்டதடி. இதோ இவளை பார்த்தாயா, விபரமாக வெறும் தயிர் சாதத்துடன் முடித்து விடுகிறாள். நம்மை போல் அள்ளி அடைப்பதில்லை" ரஞ்சனி கொஞ்சம் பொறாமையுடன் கிருஷ்ணதுளசியை பார்த்தாள்.

"ஒரே இடத்தில் அசையாமல் உட்கார்ந்தபடி வேலை பார்க்கிறோம். அதற்கு ஏற்ற சாப்பாடு தானே சாப்பிட வேண்டும். அதனால் தான் நான் எப்போதும் இப்படி சிம்பிளாகவே சாப்பிட்டுக் கொள்வேன்"

"ப்ச், வெளியே பார்க்க இந்த ஐடி கம்பெனிகள் எல்லாம் பகட்டாக தெரிகிறது.உள்ளே வந்த பிறகுதான் இதற்குள் இருக்கும் ஓட்டைகளை உணர முடிகிறது. வெளியே இரவா பகலா என்று கூட உணர முடியாத அளவில் இது என்னடி வேலை?"

ரஞ்சனி ரொம்பவே புலம்பினாள் என்றாலும் அவளுக்கு சலிப்பாகிப்போன பிரியாணியை தாண்டி சப்பென்ற தயிர் சாதத்திற்கு மாற அவளால் முடியவில்லை. அவள் தட்டில் பிரியாணியும் பாஸ்தாவும் தான் இருந்தது.

"எப்படித்தான் வாயை கட்டுறியோ" கிருஷ்ணதுளசியை பார்த்து பெருமூச்சு விட்டபடி பாஸ்தாவை வாய்க்குள் திணித்தாள்.

இங்கே இப்படி சிம்பிளாக சாப்பிட்டு விடுவதால் தான் இரவு வீட்டில் அப்படி பசித்து விடுகிறதோ, அதனால் தான் அந்த ரொட்டியையும் சிக்கனையும் அவ்வளவு சாப்பிட்டேனோ, கிருஷ்ணதுளசியின் யோசனை முதல் நாள் இரவு உணவு உண்ணலுக்கு போனது.

அப்படி அள்ளி அள்ளி சாப்பிட்டதால் தானே அவன் என்னிடம் காண்டக்ட் சர்டிபிகேட் கேட்டான், போடா நீயும் உன்னுடைய டிபனும் என்று தட்டை தள்ளியிருந்தால் வாயை மூடிக்கொண்டு இருந்திருப்பானே.

நினைவுகள் எங்கோ போக தயிர் சாதத்தின் மாதுளை முத்து அவள் தொண்டையில் சிக்கிக் கொண்டது. செருமியபடி தண்ணீரை குடித்தாள். "என்ன ஒரு பார்வை தெரியுமா! ஹீரோயின் அவனைக் கடந்து போகும்போது நேருக்கு நேராக அவளைப் பார்த்து கண்களை சிமிட்டுவான் பார்! அந்த சீனுக்காகவே இன்னமும் இரண்டு தடவை படம் பார்க்கலாம்"

ரஞ்சனியும் பிரியாவும் பேசிய பேச்சு காதில் விழ அவர்களை முறைத்தாள். "ஏண்டி உங்க ரெண்டு பேருக்கும் எப்போதும் அந்த சினிமா ஞாபகம் தானா? அந்த ஹீரோவை இமிடேட் பண்ணி எத்தனை பேர் ஊருக்குள் சுற்றிக் கொண்டிருக்கிறார்களோ எந்த அளவு இளைய சமூகத்தை அந்த படம் கெடுக்கிறது தெரியுமா?" என்றாள்.

"அந்த படத்தோட சீன்கள் தாண்டி இப்போ சோசியல் மீடியாவில் ட்ரெண்டிங்.ரீல்ஸ்,ஷார்ட்ஸ் எல்லாமே அந்த பட சீன்ஸ்தான். ம்...நீ அப்படி இமிடெட் பண்ணுகிற யாரை பார்த்தாய்?"

"அது...பக்கத்து வீட்டுக்காரன் ஒருவன் ,அப்புறம் நம் ஹெச் பி கூட ஒரு ஜாடையில் அந்த ஹீரோவை கொண்டு வருவது போல் எனக்கு தோன்றுகிறது"

"அட அப்படியா, நம்ம ஹை பிரசர் அந்த படத்தை பார்த்திருக்குமா ?அதை பார்த்த பிறகும் இவ்வளவு

பிரஷரை மூஞ்சியில் காட்டிக் கொண்டா இருக்கும்?"

"அதானே இது போன்ற படங்கள் எல்லாம் ஸ்ட்ரெஸ் பஸ்டர். அந்தப் படம் பார்த்து இரண்டு நாட்கள் வரை மைன்ட் ரொம்ப ரிலாக்ஸாக இருந்தது தெரியுமா?"

"சும்மா எதையாவது சொல்லாதீங்கடி. இதெல்லாம் உங்கள் மனதில் நீங்களே உருவகித்துக் கொள்வதுதான்"

"ஏய் நீ படமே பார்க்காதவள். நீ பேசாதே" பேசியபடியே சாப்பிட்டு முடித்து வேலைக்கு திரும்பினர்.

அன்று மாலை கிருஷ்ணதுளசி வீட்டிற்கு திரும்பி வந்த போது அவள் ரொம்பவே வெறுத்த அந்தப் படத்தின் பாடல் ஒன்று உச்ச ஸ்தானியில் வீட்டிற்குள்ளிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது..

டிவியில் ஏதாவது கேம் ஷோ அல்லது டாக் ஷோதான் ஆன்ட்டி பார்ப்பது. அதையும் மிகவும் கம்மியான சத்தத்தில்தானே வைப்பார்கள், ஆச்சரியப்பட்டபடி ஜன்னல் வழியே பார்க்க ,படத்தின் பாடலை டிவியில் ஓட விட்டுக்கொண்டு முன்னால் நின்று அந்த ஹீரோவை போலவே அபிநயத்து ஆடிக்கொண்டிருந்தான் அஸ்வத்.

பொறுக்கிப் பயல் முணுமுணத்தாள் கிருஷ்ணதுளசி.

5

கோடிங்கில் திடீரென்று வந்துவிட்ட எரர் ஒன்றினை சரி செய்வதற்காக போராடிக் கொண்டிருந்தனர் கிருஷ்ணதுளசி ,பிரியா ,ரஞ்சனி மற்றும் அவர்கள் டீம் மெம்பர்களான முரளி ,தனுஷ். நேரம் இரவு பத்து மணியை தாண்டிக் கொண்டிருந்தது. இரண்டு மணி நேரங்களுக்கு முன்பே முடிந்திருக்க வேண்டிய கோடிங். இப்படி இழுக்கிறது.

ஐந்து பேரும் தலையை பிய்த்துக் கொள்ளாத குறை, நாளை அவர்கள் டீம் லீடர் நீலவண்ணனுக்கு பதில் சொல்ல முடியாது. "எனக்கு ஒரு யோசனை..." கிருஷ்ணதுளசி ஆரம்பித்தபோது அவள் அறைக் கதவு தட்டப்பட்டது.

" என்ன குப்பையாக இருந்தாலும் கொட்டு துளசி. எதையும் விடாமல் பொறுக்கிக் கொள்ள வேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம்" விரக்தியாய் பேசினான்

தனுஷ்.

குரூப் டிஸ்கசனில் இருந்த அவர்கள் அனைவரையும் வெயிட் பண்ண சொல்லிவிட்டு போய் கதவை திறந்தாள். வெளியே உதட்டு நுனியில் தொங்கிய சிகரெட்டுடன் நின்று கொண்டிருந்தான் அஸ்வத்.

"தீப்பெட்டி கிடைக்குமா?" சாதாரணமாக கேட்டவனை கொலை பார்வை பார்த்தாள்.

"ஒரே டென்சன் கிருஷ்ணா,டிஷ்கசன் போய்க் கொண்டிருக்கிறது, மூளை வேலை செய்ய மாட்டேன்கிறது. ஒரு சிகரெட் பிடித்தால் கொஞ்சம் ரிலாக்ஸாவேன். என்னுடைய லைட்டரை எங்கே வைத்தேன் என்று தெரியவில்லை. தீப்பெட்டி கொடேன்"

"யோவ் அறிவில்லை..." அவன் முகத்திற்கு நேராக கையை நீட்டி வைதாள். "ராத்திரி பத்து மணிக்கு மேல ஒரு பொண்ணு மட்டும் இருக்கிற ரூம் கதவை தட்டி தீப்பெட்டி கேட்கிறியே, நீ எல்லாம் மனிதனா? வேறு ஏதாவது ஜந்துவா?"

அஸ்வத் வாயிலிருந்த சிகரட்டை கையில் எடுத்துக் கொண்டான். "மனிதன்தானே சிகரெட் பிடிப்பான்! அப்போது நான் மனிதன்தான். சரி போய் தீப்பெட்டி கொண்டு வா" அதிகாரம் தொனித்த குரலில் ஆங்காரமானாள்.

"எவ்வளவு தைரியம்? உன்னை எல்லாம்..."இரு கைகளையும் அவன் கழுத்தை நோக்கி கொண்டு போனாள்.

தன்னை நெருங்கிய கைகளை பார்த்துக் கொண்டிருந்தவன் திடுமென வியந்தான். "அட இந்த நெயில் பாலிஷ் கலர் அழகாக இருக்கிறது கிருஷ்ணா! இதனை நீ எங்கு வாங்கினாய்?"

அவன் கழுத்தை நெரிக்க கொண்டு போன கைகளால் தன் தலையில் அடித்துக் கொள்ள தோன்றியது கிருஷ்ணதுளசிக்கு. யாருய்யா நீ! என்னய்யா இப்படி இருக்க? மனம் வெறுத்து கேட்க வாய் திறந்த போது, அவள் லேப்டாப் சத்தமிட்டது.

" துளசி எங்கே போயிட்ட?" முரளி கத்தினான்.

லேசாக எட்டி அறைக்குள் பார்த்த அஸ்வத் "உனக்கும் மீட்டிங்கா? இந்த நேரம் வரையா? இப்படியா நேரம் காலம் இல்லாமல் வேலை வாங்குகிறார்கள்? என்ன கம்பெனி

உன்னுடையது" என்றான்.

"நாளை என் பாசிடம் சொல்கிறேன், இப்போது தயவு செய்து கிளம்பு"

"கிருஷ்ணா தீப்பெட்டி கேட்டேனே! ப்ளீஸ்பா ஒரு பப் இழுத்தால்தான் எனக்கு மூளையே வேலை செய்யும்" அஸ்வத் அசையாமல் நிற்க கிருஷ்ணதுளசி தலையில் அடித்துக் கொண்டு அடுப்படிக்கு போய் தீப்பெட்டியை எடுத்து வந்து அவன் மேல் எறிந்துவிட்டு கதவை அடித்து பூட்டினாள்.

" ரொம்ப தேங்க்ஸ் கிருஷ்ணா" கதவுக்கு மறுபக்கம் அவன் குரல் தேய்ந்து கேட்டது.

"யாருடி அது? ஜென்ட்ஸ் வாய்ஸ் மாதிரி இருந்தது" ரஞ்சனி நோண்ட "அதை விடுடி பிறகு சொல்கிறேன். எனக்கு ஒரு ஐடியா இந்த கோடிங்கை அப்படியே தலைகீழாக திருப்பி போட்டு பார்க்கலாமே.." கிருஷ்ணதுளசி சொல்ல, மற்றவர்கள் அதனை ஆமோதித்து வேகமாக டைப் செய்ய ஆரம்பித்தனர்.

பத்து நிமிடங்களில் எரர் நீங்கி சரியாக எல்லோருமாக ஒரே நேரத்தில் ஹோய் என்று கை உயர்த்தி கத்தி தங்கள் வெற்றியை கொண்டாடிவிட்டு லேப்டாப்பை ஷட்டவுன் செய்தனர்.

கொதித்து கிடந்த மூளையை சமனப்படுத்த அந்நேரத்திற்கு மேல் குளித்துவிட்டு படுக்கையில் சரிந்த கிருஷ்ணதுளசிக்கு கண்கள் சொருகியது.மூடிய அவள் இமைகளுக்குள் வந்து நின்று தீப்பெட்டி கேட்டான் அஸ்வத்.

அடப்பாவி உனக்கு சிகரெட் பிடிக்க தீப்பெட்டி கொடுத்து விட்டேனே! அரைகுறை உறக்கத்தில் தனக்குள் புலம்பியபடியே தூங்கிப் போனாள் கிருஷ்ணதுளசி.

மறுநாள் காலை அஸ்வத் கீழே இறங்கி வந்த போது சுஜாதா இரு கைகளையும் இடுப்பில் வைத்துக்கொண்டு அவனை முறைத்தபடி நின்றிருந்தார்.

"அன்றைக்கு ஏதோ பார்ட்டி அது இதுன்னு தண்ணியடித்ததை சமாளித்தாய், இன்று சிகரெட் பிடித்தால்தான் உனக்கு மூளையே வேலை செய்யுமா?" கண்களை உருட்டி அதட்டினார்.

அவருக்கு பின்னால் தூசியே இல்லாத சோபா கவர் எடுத்து உதறி விரித்துக்கொண்டிருந்தாள்

கிருஷ்ணதுளசி.

போட்டுக் கொடுத்துட்டு ஒன்னும் தெரியாத பாப்பா மாதிரி நிற்பதைப்பார் அவளை முறைப்படி "என்ன டார்லிங் இவ்வளவு கோபமாக இருக்கிறாய்?" கொஞ்சலாய் கேட்டுக்கொண்டு சுஜாதாவின் இடுப்பை அணைக்க முயல, பட்டென்று அவனை தள்ளினார். "தள்ளி நில்லுடா! உன்கிட்ட நிறைய பேசணும்"

"ஆஹா சனியன் வண்டியில ஏறிடுச்சு, இனிமே பொட்டு வச்சு பூ வைக்காம விடாதே", வடிவேலு பாணியில் அவன் பேச கிருஷ்ணதுளசி திகைப்புடன் சுஜாதாவை பார்த்தாள் அவள் நினைத்தாற் போன்றே அவர் முகம் மலர்ந்து இருந்தது.

சுஜாதாவிற்கு மிகவும் பிடித்த காமெடி நடிகர் வடிவேலு. ஆக இவனுக்கு ஆன்ட்டியை பற்றி எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கிறது. அவரை சமாதானப்படுத்த எப்படியெல்லாம் யோசிக்கிறான்!

"நீயே என்னை தள்ளி போகச் சொன்னால் எனக்கு வேறு யார் இருக்கிறார்கள் சுஜா டார்லிங்? நான் எங்கே போவேன்? தஞ்சம் என்று உன்னை தேடி வந்தவனை தள்ளி விட்டு விடாதே டார்லிங்" நடிகர் திலகத்தை காப்பியடித்து அஸ்வத் வசனம் பேச சுஜாதா பட்டென்று சிரித்து விட்டார்.

" போக்கிரிப்பயல்" செல்லமாக அவன் தலையில் கொட்டினார்."கிருஷ்ணாவிடம் போய் ஏன்டா தீப்பெட்டி கேட்டாய்?"
"இதென்ன கேள்வி டார்லிங்? எனக்கு தேவை இருந்தது. இந்தாடா என்று பாக்கெட்டில் இருந்து எடுத்து நீட்டுவாள்னு நினைத்தேன், அவள் என்னவென்றால் என்னை குற்றவாளி கூண்டில் ஏற்றி அரை மணி நேரமாக குறுக்கு விசாரணை செய்கிறாள்"

" என்னது பாக்கெட்டில் இருந்து எடுத்து கொடுப்பேனா? எவ்வளவு தைரியம் இப்படி நினைக்க...?

"ஐயோ தீப்பெட்டி மட்டும்தானே கேட்டேன் கிருஷ்ணா? நீ வைத்திருந்த பீரையும் சேர்த்து கேட்டது போல் அல்லவா கோபப்படுகிறாய்?" பயந்தாற் போல் கைகளை உயர்த்தினான் அஸ்வத்.

" ஆன்ட்டி உங்க ரிலேஷனை ஒழுங்காக பேச சொல்லுங்கள். யாரிடம் என்ன பேசுகிறாரென்று தெரியாமல் உளறுகிறார்"

"ஆமாம் அச்சு நீ கிருஷ்ணாவை பற்றி அப்படியெல்லாம் நினைக்காதே! அவள் இந்த மாதிரி எந்த பழக்கமும் இல்லாத சுத்தமான பெண்" சுஜாதா நற்சான்றிதழ் வழங்க "அப்படியா?" என்று தாடையை தேய்த்தபடி அவளை விழிகளால் மேலும் கீழும் அளந்தான்.

"நம்ப முடியவில்லையே, இந்த காலத்தில் சிகரெட் பிடிக்காத பீர் அடிக்காத பெண்கள் இந்த சிட்டியில் எங்கே இருக்கிறார்கள்?"

" நான் அப்படிப்பட்ட பெண்ணில்லை. ஆன்ட்டி இனிமேல் இந்த கண்ணோட்டத்தோடு என்னுடன் பழக வேண்டாம் என்று சொல்லி வையுங்கள் "

"அதை நீ நேரடியாக என்னிடமே சொல்லலாமே கிருஷ்ணா" சொன்னபடி புன்னகையோடு அவளுக்கு எதிரே வந்து நின்று கைகளைக் கட்டிக் கொண்டு அவளை குறுகுறுவென பார்த்தான்.

இது... இந்த பார்வை... அந்த படத்தின் ஹீரோ செய்தது.அஸ்வத்தின் ஒவ்வொரு செயலும் கிருஷ்ணதுளசியினுள் எரிந்து கொண்டிருந்த கோபத்தை விசிறி விட்டது.
" எந்நேரமும் நிழல் கதாபாத்திரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதரை நான் ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை"

"புரியவில்லை, விளக்கம் தேவை" என்றான் அஸ்வத் அமர்த்தலாக.

6

"ஒரு மூன்றாம் தர விடலை போல் எந்நேரமும் சினிமா வசனம்! அத்தோடு அந்த கேவலமான படத்தின் ஹீரோவை வேறு காப்பியடித்தாகிறது. இவரை எல்லாம் ஒரு ஆள் கணக்கில் நான் எப்படி சேர்ப்பது ஆன்ட்டி?"

"அச்சு எப்போதும் அப்படித்தான்மா. சிறுவயதிலிருந்தே அவனுக்கு சினிமா என்றால் ரொம்பவும் பிடிக்கும்..." பேசிய சுஜாதாவை கை உயர்த்தி நிறுத்திய அஸ்வத் கிருஷ்ணதுளசியை கூர்ந்தான். "எந்த படத்தைப் பற்றி பேசுகிறாய்?"

"காதல் சகுனியாம், எவனாவது காதலையும் சகுனியையும் இணைத்து பெயர் வைப்பானா? யாரோ ஒரு அறிவு கெட்டவன் இந்த படத்தை எடுத்தான் என்றால் அதனை நிறைய புத்தி கெட்டதுகள் பார்த்து

கொண்டாடிக் கொண்டிருக்கிறதுகள். இப்படிப்பட்ட ஆட்களைப் பார்த்தாலே கடுப்பாக இருக்கிறது..."

கொதித்துப் போய் கோபத்தில் கத்திக் கொண்டிருந்த கிருஷ்ணதுளசியின் தோளில் மென்மையாய் கை வைத்தார் சுஜாதா "கிருஷ்ணா கொஞ்சம் நான் சொல்வதை கேளுமா"

" ஆன்ட்டி நீங்க சும்மா இருங்க, நீங்க அந்த படத்தை பார்க்கல, பார்த்திருந்தால் அதில் இருக்கிற அச்சு பிச்சுத்தனம் எல்லாம் தெரிந்திருக்கும்.பாருங்க ஆன்ட்டி ஆறு அல்லது ஏழு வயது பையன் ஒருவன், அவனை தங்கள் காதலுக்கு தூது போக ஹீரோவும் ஹீரோயினும் யூஸ் பண்ணுகிறார்களாம். எவ்வளவு மோசமான செயல். இதனை பெரிதாக அந்த படத்தில் காட்டி இருக்கிறார்கள். இதை எல்லாம் என்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?"
அஸ்வத் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு பார்வையை கிருஷ்ணதுளசியிடமிருந்து சுஜாதாவிற்கு திருப்பினான். சுஜாதா ஒரு வித அவஸ்தையுடன் தலையை சொறிந்து கொண்டார்."அதாவது கிருஷ்ணா ஊர் உலகத்தில் நடக்காத எதையும் படமாக எடுப்பதில்லை தெரியுமா?"

கிருஷ்ணதுளசி சுஜாதா அந்த படத்திற்கு ஆதரவாக பேசுவதை இப்போதுதான் உணர்ந்தாள். " ஆன்ட்டி நீங்க அந்த படத்தை சப்போர்ட் பண்ணுகிறீர்களா? படம் பார்த்து விட்டீர்களா?"

" இல்லைம்மா இனித்தான் பார்க்க வேண்டும். பார்க்க வேண்டும் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்"

" வேண்டாம் வேண்டாம் பார்க்காதீர்கள், நானே பார்க்க முடியாமல் பாதியில் எழுந்து வந்து விட்டேன்.இவ்வளவு மோசமாக படம் எடுத்த அந்த டைரக்டர் மட்டும் என் கையில் கிடைத்தால் சப் சப் என்று கன்னத்தில் நாலு அறையாவது அறைந்து விடுவேன்"

பேசிக் கொண்டிருந்த கிருஷ்ணதுளசியின் எதிரே வந்து நின்றான் அஸ்வத். "அறைந்து விடு கிருஷ்ணா"

" என்ன?"

" உன் ஆசையை நிறைவேற்றிக் கொள் என்றேன்"

கிருஷ்ணதுளசி குழப்பத்துடன் அவனைப் பார்க்க ஆமோதிப்பது போல் இரு விழிகளையும் ஒரு முறை அழுந்த மூடி திறந்தான். "நான்தான் கிருஷ்ணா அந்தப்

படத்தின் டைரக்டர் அஸ்வத்தாமன். நீ இவ்வளவு ஆவேசமாக தண்டனை கொடுக்க துடித்துக் கொண்டிருக்கும் அந்த அதிர்ஷ்டசாலி நான்தான்.ம்... ஆரம்பி" வாகாக கன்னத்தை சாய்த்து காட்டினான்.

கிருஷ்ணதுளசி அதிர்ந்து நின்று விட்டாள். காதில் விழுந்த வார்த்தைகளை அவளால் நம்ப முடியவில்லை. லேசாக தலை சுற்றுவது போல் இருந்தது. பதட்டத்துடன் சுஜாதாவை திரும்பிப் பார்க்க அவர் தலை அசைத்து ஆமாம் என்றார்.

"இதை ஏன் ஆன்ட்டி என்னிடம் முன்பே சொல்லவில்லை? போங்க ஆன்ட்டி நீங்க என்னை ஏமாத்திட்டீங்க! ஐ ஹேட் யூ!" கம்மல் குரலில் குற்றம் சாட்டியவள் வேகமாக அங்கிருந்து மாடிக்கு ஓடினாள்.கிருஷ்ணா என்ற அஸ்வத்தின் அழைப்பை காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

—---------

கிருஷ்ணதுளசிக்கு விழிப்பு தட்டி கண் திறந்து பார்த்தபோது அறை இருளில் இருந்தது. போனை எடுத்து மணி பார்க்க இரவு ஒரு மணி காட்டியது. கிருஷ்ணதுளசியால் இன்னமும் அதிர்ச்சியிலிருந்து வெளியே வர முடியவில்லை. காரணமே தெரியாமல் லேசாக விசும்பிக் கொண்டு கூட படுக்கையில் கிடந்தவள் எப்படியோ தூங்கிப் போய் இருக்கிறாள்.

ஆனாலும் முழுதாக தூங்காத மனம் பாதி ராத்திரியில் எழுப்பி விட்டிருக்கிறது, அறைக்கு வெளியே மிக லேசாக ஏதோ குரல் கேட்க, கதவை இம்மலாக திறந்து எதிரே பார்க்க அறைக்குள் அஸ்வத் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். ஸ்டோரி டிஸ்கஷன் போலும்.

கிருஷ்ணதுளசி கதவை தாழிட்டு கொண்டாள். அஸ்வத்... அஸ்வத்தாமன். அந்த படத்தின் டைரக்டர் பெயர். ஆக மிகவும் மோசமான படம் என்று அவள் கணித்த அந்தப் படத்தின் உருவாக்கம் இவன்தானா? ம்... மிக மோசமான ஒருவனிடம் இருந்து இவ்வளவு மோசமான படம்தானே வந்திருக்க முடியும்? இதில் நான் இந்த அளவு அதிர்ச்சி அடைவதற்கு காரணம் இல்லையே!

கிருஷ்ணதுளசி பெருமூச்செறிந்தாள். என்னுடைய கோபமோ, ஏமாற்றமோ இதோ எதிர் அறையில் உட்கார்ந்திருக்கும் இவன் மீதல்ல, மிகவும் மரியாதையும் அன்பும் வைத்திருக்கும் ஆன்ட்டி என்னை ஏமாற்றியதால் வந்த விரக்தி இது. தனக்குள் தானே

கூறிக்கொண்டாள். யார் எப்படி போனால் உனக்கென்ன கிருஷ்ணா! நீ உன் வேலையை பார்த்துக் கொண்டு சிவனே என்று இரு, அவள் மனசாட்சி சொல்ல கண்களை அழுந்த மூடிக் கொண்டு உறங்க முனைந்தாள்.

மறுநாள் காலை வேகமாக கிளம்பி சுஜாதாவை சந்திக்காமலேயே வீட்டை விட்டு வெளியேறினாள். அவளது ஸ்கூட்டி சத்தம் கேட்கவும் வேகமாக வாசலுக்கு ஓடி வந்தவரை கண்டு கொள்ளாமல் கிளம்பி போனாள். முகத்தில் கவலையுடன் அவளைப் பார்த்து நின்ற சுஜாதாவின் தோளை ஆறுதலாக தட்டினான் அஸ்வத்.

" விடு டார்லிங் இரண்டு நாட்களில் சரியாகி விடுவாள்"

" இல்லை அச்சு, கிருஷ்ணாவிடம் நான் உன்னை பற்றி சொல்லியிருக்க வேண்டும். அவள் கோபம் நியாயம்தான். தப்பு செய்துவிட்டேன்..."

" சரி சரி பாதரிடம் கூட்டிப் போகிறேன். பாவமன்னிப்பு கேட்டு விடலாம். இதற்கெல்லாம் மூக்கை சிந்தி போடாதே டார்லிங்" அஸ்வத் கிண்டலாக பேசி சுஜாதாவை சமாதானப்படுத்த முயன்றான்.

அலுவலகத்தில் வந்து அமர்ந்ததுமே அஸ்வத்தாமன் என்ற பெயர் காதில் விழ கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள்."ஏன்டி சினிமாவை தவிர வேறு எதுவுமே பேச தெரியாதா உங்களுக்கு?"

"என்னடி... ஸ்ட்ரெஸான வேலை பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு சின்ன ரிலாக்சேஷன் இது போன்ற பொழுதுபோக்குகள்தானே!"

தோழிகள் சொன்னதில் உள்ள நியாயத்தில் மௌனமாக தனது சிஸ்டத்திற்கு திரும்பினாள்.

" நேற்று எங்கள் ஏரியா சினிமா தியேட்டரில் காதல் சகுனி படம் எடுத்திருந்தாங்க. திரும்பவும் ரெண்டு பேரும் போயிட்டோமே"
ரஞ்சனி சொல்ல,

கிருஷ்ணதுளசிக்கு மடேர் என்று தனது நெற்றியை முன்னிருந்த சிஸ்டத்தின் மேல் மோதிக் கொள்ளும் வேகம் வந்தது.ஆனால் உடைந்து போக போகும் சிஸ்டத்திற்கு அலுவலுகத்திற்கு பதில் அவள் அல்லவா சொல்ல வேண்டும்?

பற்களை கடித்து தன்னை அடக்கிக் கொண்டாள் 'எத்தனை தடவை தாண்டி அதை பார்ப்பீர்கள்?"

"எத்தனை தடவை வேண்டுமானாலும் பார்க்கலாம். அதை விடு, விஷயம் அது இல்லை. அந்த தியேட்டரில் வேறு ஒன்று நடந்தது. நம்ம ஹெச்.பி தியேட்டருக்கு படம் பார்க்க வந்திருந்தார்"

"சரிதான் உங்களைப் போல அவருக்கும் அந்த படத்து மேல் பைத்தியம் போல, அதனால் வந்திருப்பார்" என்றவள் மனதிற்குள் அந்த பட ஹீரோவின் மேசரிசத்தை நிரஞ்சனின் உடல் மொழியிலும் பார்த்த நினைவு வந்தது.அப்படியா அந்த படம் இவனை பாதித்தது?

"ஏய் அவர் மட்டும் தனியாக வரவில்லைடி.ஒரு பெண்ணை கூட அழைத்துக் கொண்டு வந்திருந்தார்"

அட! இது கிருஷ்ணதுளசிக்குமே ஆச்சரியமான தகவல்தான்.

"அவருடைய பிரண்டாக இருக்கலாமேடி"

"ம்... எந்த பிரெண்ட்ஸ் ஐஸ்கிரீமையும் பாப்கார்னையும் மாற்றி மாற்றி ஒருவருக்கொருவர் ஊட்டி விட்டுக் கொள்கிறார்களாம். இது லவ் மேட்டர்தான். நாங்கள் போட்டோவே எடுத்து வைத்திருக்கிறோம்"

பிரியா தனது போனை எடுத்து காட்ட தியேட்டரின் அரை இருளிலும் அது நிரஞ்சன் என்பது தெளிவாக தெரிந்தது.அருகாமையில் ஒருவரை ஒருவர் பார்த்தபடி அமர்ந்திருந்தனர்.

"என்னடி இது? அடுத்தவர்களுடைய பர்சனல். இதை போட்டோ எடுக்கலாமா?"

" இருக்கட்டும்டி இந்த ஹெச்பியை என்றாவது கார்னர் பண்ண நமக்கு உதவும்"

" லவ்வோ பிரண்ட்ஷிப்போ அவங்க பர்சனல். இதில் நாம் எப்படி தலையிட முடியும்? ஒழுங்கா வேலையை பாருங்கள்"

மூவரும் வேலைக்குள் திரும்பியபோது "என்ன செய்கிறீர்கள்?" என்ற கர்ஜிப்போடு அவர்கள் எதிரே வந்து நின்றான் டீம் லீடர் நீலவண்ணன்.

" அலுவலக நேரத்தில் வேலையை பார்க்காமல் கேலியும் கிண்டலுமாக சிரித்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எம்.டி உங்களை கடந்து போனதை கூட கவனிக்காமல் இருந்திருக்கிறீர்கள். அவர் என்னை கூப்பிட்டு லெஃப்ட் அண்ட் ரைட் வாங்குகிறார். வேறு ஆளை மாற்றி விடவா

என்கிறார். இது தேவையா எனக்கு?"அலுவலகத்தில் வேலை செய்யும் அத்தனை பேரும் திரும்பி பார்க்கும் அளவு கத்தினான் நீலவண்ணன்.

"சாரி சார்... சாரி சார்..." எழுந்து நின்று மூன்று பெண்களுமே மன்னிப்பு பலமுறை கேட்ட பிறகே அமைதியானான். "இனி மூச்சு விடுவதற்கு கூட அசைய கூடாது. ஒழுங்காக உட்கார்ந்து வேலையை பாருங்கள்" எச்சரித்து விட்டு போனான்.

" மூச்சு கூட இவங்ககிட்ட பர்மிஷன் கேட்டு விட வேண்டியிருக்கு பார்த்தாயா?"மூவரும் புலம்பியபடி கீபோர்டை தட்ட ஆரம்பித்தனர்.

அன்று முழுவதும் நீலவண்ணன் அவர்கள் இடத்திற்கு அடிக்கடி வந்து காய்ச்சி எடுக்க,நாளின் முடிவில் அவர்களுடைய வேலை ரிப்போர்ட்டை ஏற்றுக்கொள்ளாமல் இழுத்தடித்தான் நிரஞ்சன்.

" வருகிற கோபத்திற்கு உன்னுடைய யோக்கியதை எனக்கு தெரியும்டான்னு சொல்லிடவா?" ப்ரியா முணுமுணக்க அவள் கைப்பற்றி அழுத்தினாள் கிருஷ்ணதுளசி.

"வீட்டிற்கும் வேலைகள் கொடுக்காமல் ஆபீஸில் மட்டும் கொடுத்தீர்களானால், டயர்ட் ஆகாமல் எங்களால் வேலை செய்ய முடியும் சார்" தைரியமாக கிருஷ்ணதுளசி பேச நிரஞ்சன் திகைத்தான்.

"ஏய் யாரிடம் பேசுகிறாய் என்று தெரிகிறதா? ஊர் நாட்டில் இருந்து வந்து திரு திருத்துக்கொண்டிருந்தாயே, உன்னை இந்த அளவுக்கு டிரெய்னிங் கொடுத்து ஒரு பொசிசனில் உட்கார வைத்திருக்கும் நம் எம்.டியை பற்றி இப்படியா பேசுவாய்?" நீலவண்ணன் எகிறினான்.

கிருஷ்ணதுளசி கண்களை இறுக மூடினாள். இந்த நீலவண்ணனுக்கு இதே வேலை, அவள் கிராமத்தில் இருந்து வந்து இங்கே வேலை பார்ப்பதை அடிக்கடி குத்திக் காட்டுவான்.

"இவர்கள் மூவரும் இரண்டு வருடங்களுக்கு முன்பு நம் கம்பெனியில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த போது எப்படி இருந்தார்கள் என்று நினைவில் இருக்கிறதா ?" நிரஞ்சன் கேட்க அவனை நம்ப முடியாமல் பார்த்தாள்.

பெண்கள் மூவரும் இமை தாழ்த்திக் கொண்டனர்..

கிருஷ்ணதுளசி ஸ்கூட்டியை நிறுத்தும் சத்தம் கேட்டு வேகமாக உள்ளிருந்து வெளிவந்தார் சுஜாதா. "ஆன்ட்டி எனக்கு ஆபீஸ் ஓர்க் நிறைய இருக்கிறது" அவர் முகத்தை பார்க்காமலேயே சொல்லிவிட்டு படபடவென்று படியேறி விட்டாள்.

அறைக்குள் வந்தவளின் அலுவலக கோபம் தீரவில்லை. கைகளை பிசைந்தபடி குறுக்கும் நெடுக்குமாக நடந்தாள். எவ்வளவு பேசி விட்டான்?

நிரஞ்சன் சொல்வதிலும் ஓரளவு உண்மை இருந்ததுதான். தென் மாவட்டத்தின் சிறு சிறு கிராமங்களில் இருந்து சென்னைக்கு ஐடி கம்பெனி வேலைக்கு என்று வந்தவர்கள் தோழிகள் மூவரும். இந்த ஒற்றுமைதான் அவர்கள் நட்பிற்கு காரணம். அந்த அலுவலகத்தில் திக்கு தெரியாமல் திகைத்து நின்றவர்களை ஊக்கம் கொடுத்து வேலைகள் சொல்லிக் கொடுத்தது முதலில் நிரஞ்சன்தான்.

" கிராமம் என்றால் ஒன்றும் தெரியாதா என்ன? உண்மையில் கிராமத்தவர்களுக்கு இருக்கும் தெளிவு எங்களைப் போன்ற சிட்டி வாழ் மக்களுக்கு இருப்பதில்லை" என்பது போல் நிறைய ஆறுதல் வார்த்தைகளை அப்போதெல்லாம் சொல்வான்

பிறகு நீலவண்ணனிடம் அவர்களை ஒப்படைத்தான். அவ்வாறு ஒரு வருடமாக வேலையை கற்றுக் கொண்டு கடந்த ஒரு வருடமாக ரொம்பவே முன்னேறி வந்திருக்கின்றனர். எல்லாம் சரிதான் ஆனால் அதனை இப்படி எடுத்துக்காட்டி பேசுவதென்றால் இதனை ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை. ரஞ்சனியும் பிரியாவும் உடனே தழைந்து போய்விட்டனர்.

" ஆமாம் சார் எனக்காக நீங்கள் நிறைய செய்திருக்கிறீர்கள் உங்களுக்கு வேலை பார்ப்பதில் நாங்கள் நேரம் காலம் பார்க்க கூடாதுதான்" என்று விட்டனர்.

" மேடம் எப்படி?" சிறு கிண்டலுடன் நிரஞ்சன் கேட்க

" எனக்கு நன்றாகவே டிரெய்னிங் கொடுத்து விட்டீர்கள் சார். உங்கள் இடத்தில் இருந்து இந்த கம்பெனியை நிர்வகிக்க கூட இப்போது எனக்கு தெரியும்" வாய் துறுதுறுக்க வார்த்தைகளை கொட்டி விட்டு விடு விடு என்று வந்துவிட்டாள் கிருஷ்ணதுளசி.

நிச்சயம் அவன் கொதித்துக் கொண்டிருப்பான். வேலையை விட்டே எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மூன்று வருட அக்ரீமெண்ட் இருக்கிறது. இருந்தாலும் கம்பெனியின மேனேஜிங் டைரக்டர் நினைத்தால் எதையும் செய்யலாம் தானே!

ஒரு வருடத்திற்கு முன்பு போல் இப்போது, வேலை போய்விட்டால் என்ன செய்வது என்ற தடுமாற்றம் அவளிடம் இல்லைதான். ஆனாலும் இன்னொரு வேலை கிடைக்கும் வரை சமாளிக்க வேண்டுமே! குழம்பியபடி நடந்து கொண்டிருந்தவள் அறைக் கதவு தட்டும் சத்தத்திற்கு எரிச்சலானாள்.

வெளியே அஸ்வத் நின்றிருந்தான். கதவு நிலையில் சாய்ந்து கைகட்டி கொண்டு அவன் நின்றிருந்த தோரணை அந்த ஹீரோவை நினைவுபடுத்த தலையை குலுக்கி கொண்டாள். ஆக அந்த ஹீரோவை இவன் காப்பியடிக்கவில்லை. இவனுடைய பாடத்தைத்தான் அந்த ஹீரோ உள்வாங்கி நடித்து இருக்கிறான். மூலப்பொருள் இவன்தான். இந்த உண்மை தெரியாமல் அந்த ஹீரோவின் பின்னால் போய்க்கொண்டிருக்கும் பிரியா, ரஞ்சனியை நினைத்து இவளுக்கு பாவமாக இருந்தது.

"ஆபீஸில் என்ன பிரச்சனை?" அஸ்வத் கேட்ட கேள்விக்கு திகைத்தாள். இவனுக்கு எப்படி தெரியும்?

"ஒரு பிரச்சனையும் இல்லை. உங்கள் வேலையை பார்த்துக் கொண்டு போங்கள்"

தாடியை தடவியபடி யோசனையாக அவளைப் பார்த்து "ம்" என்றான். இந்த பாவனைக்கு அவனிடமிருந்து விழிகளை அவசரமாக திருப்பிக் கொண்டு "சரிதான் போடா" என வாய்க்குள் முணுமுணுத்தாள்.

" என்ன பிரச்சனை என்றாலும் சொல். சரி செய்து விடலாம்"

பெரிய உலகை காக்க வந்த பரம்பொருள், எல்லாவற்றையும் சரி செய்து விடுவார், மனதுக்குள் கடுத்தவள்,"எல்லாவற்றையும் சரி செய்து விடுவீர்களா டைரக்டர் சார்.எனக்கு ஹெல்ப் பண்ண வேண்டுமா? உங்களுக்கு c தெரியுமா? c++...Java...Python...? கோடிங் போடுவீங்களா?"

"ஐய்யய்யோ நீ என்ன பேசுகிறாய்னே புரியலையே...
சரி சரி உனக்குத்தான் எல்லாமும் தெரியும். இப்போது வா,

கீழே போகலாம்" இயல்பாக கைநீட்டி அவள் கையை பற்ற வெடுக்கென உதறினாள்.
"எவ்வளவு அநாகரீகம்? இப்படித்தான் ஒரு பெண்ணின் கையை அவள் அனுமதியில்லாமல் தொடுவீர்களா?" அஸ்வத் ஆச்சரியமாக அவளை பார்த்தான்.

"என்ன கிருஷ்ணா நீ எந்த நூற்றாண்டில் இருக்கிறாய்? ஒரு பெண்ணும் ஆணும் நட்புடன் கைத்தொடுவதில் தவறா?"

" தவறில்லை ஆனால் அதற்கு அந்தப் பெண்ணிற்கு பிடித்தம் இருக்க வேண்டுமில்லையா?"

அஸ்வத் இரு கைகளையும் உயர்த்தினான் "ஓகே நான் தொடுவது உனக்கு பிடிக்கவில்லை என்றால் தொடவில்லை. இன்று கோதுமை பரோட்டா செய்து இருக்கிறேன். வா சாப்பிடலாம்"

"அன்று நீங்கள் செய்த சமையலை அறிவில்லாமல் சாப்பிட்டுவிட்டேன். எப்போதும் அப்படியே சாப்பாடு என்றால் பின்னால் ஓடி வருவேன் என்று நினைத்தீர்களோ?"

"ஹே கிருஷ்ணா என்ன ஆயிற்று உனக்கு? என்ன பேசினாலும் தவறாகவே எடுத்துக் கொள்கிறாய். சுஜா உன்னிடம் பேசுவதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் சாப்பிட்டுக் கொண்டே பேசலாம் என்று கூப்பிட்டேன்"

"ஆன்ட்டியும் நீயும் சேர்ந்து என்னை சமாதானப்படுத்தும் எண்ணம் தானே? நான் சமாதானமாக போவதில்லை. இன்னமும் கோபமாகத்தான் இருக்கிறேன் என்று உன் டார்லிங்கிடம் போய் சொல்" படக்கென்று கதவை மூடிக்கொண்டாள்.

அதன் பிறகு வந்த நாட்களிலும் சுஜாதாவின் முகம் பார்க்காமலேயே வெளியே கிளம்பி போனாள். அஸ்வத் இருக்கும் பக்கம் கூட திரும்புவதில்லை. அலுவலகத்தில் அவள் நினைத்து பயந்தது போல் இல்லாமல் நிரஞ்சன் அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசவில்லை.

ஆனால் வீட்டிற்கு கொடுக்கப்படும் வேலைகள் அவளுக்கு தரப்படவில்லை. டீம் மெம்பர்ஸ் ஐ விசாரித்ததில் அவளுக்கு மட்டுமே வேலைகள் தரப்படவில்லை என்பது தெரிய வந்தது. வெளிப்படையாகவே அலுவலகத்தில் அவள் ஒதுக்கப்பட்டாள்.

ஆக அந்த அலுவலகத்தில் அவளுடைய நாட்கள் எண்ணப்படுவதை உணர்ந்தாள். விரைவிலேயே வேறு வேலை தேட வேண்டும் என்று எண்ணிக் கொண்டவள் அதற்கான ஏற்பாடுகளிலும் இறங்கினாள்.

அப்ளை பண்ணிய வேலை ஒன்றிற்கான இன்டர்வியூ மறுநாள் இருக்க அதற்கான தயாரிப்புகளில் இருந்தாள் கிருஷ்ணதுளசி. கதவு தட்டப்பட எல்லாம் அந்த எதிர் அறைக்காரனாகத்தான் இருக்கும். நேரம் காலம் தெரியாமல் கதவை தட்டுவான். தீப்பெட்டி கொண்டா... சிகரெட் கொண்டா... என்று. இன்னமும் கூட உட்கார்ந்து தண்ணியடிக்க கூப்பிடவில்லை, அது ஒன்று தான் மிச்சம்.

மனதிற்குள் அஸ்வத்தாமனை தாளித்து கொட்டியபடி கதவை திறந்தவள் திகைத்தாள். சுஜாதா வாசலில் நின்றிருந்தார்.மாடி ஏறி வந்த இளைப்பு அவர் மூச்சில் தெரிந்தது."ஆன்ட்டி நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்?" கவலையோடு அவரது கையை பற்றி உள்ளே அழைத்தாள்.

"என்ன செய்வது, நீதான் கீழே வருவதே இல்லை. என் முகம் பார்ப்பது கூட இல்லை. நான் என்ன செய்யட்டும்?"

" அதெல்லாம் ஒன்றும் இல்லை ஆன்ட்டி. ஆபீஸில் கொஞ்சம் பிரச்சனை. அதுதான்..."

" சும்மா மழுப்பாதே கிருஷ்ணா! எனக்கு உன்னை தெரியும்.நீ ரொம்பவும் ரோசக்காரி. அஸ்வத் பற்றி நான் உன்னிடம் மறைத்து விட்டதாக நினைக்கிறாய். அதனால் என்னை தவிர்க்கிறாய்"

உண்மையே என்றாலும் அதனை சுஜாதாவின் முன் வெளிக்காட்ட தயங்கி விழிகளை நகர்த்தியவள் எதிர் அறை வாசலில் சலனத்தை கண்டு கொண்டாள். இவன் உள்ளிருந்து கொண்டு ஆன்ட்டியை ஏவி இருக்கிறான். ராஸ்ஸ்ஸ்ஸ்க்க்கல்... கோபத்தில் கிருஷ்ணதுளசியின் மூக்கு விடைத்துக் கொண்டது.
" எனக்கு ஒரு இன்டர்வியூ இருக்கிறது ஆன்ட்டி. நீங்கள் வீட்டிற்குள் இருங்கள், நானே உங்களை வந்து சந்திக்கிறேன்" அவரைத் தாங்கி நடத்திக் கொண்டு வந்து கீழே விட்டுவிட்டு மேலே வந்தவள் சாத்தியிருந்த எதிர் அறைக் கதவை தட்டி சப்தித்தாள்.

அவனது அறை எப்போதும் வந்தார் போவார் வரும் திறந்தார் மடம் போல் விரியத்தான் கிடக்கும். இவள்தான் அறைக்குள் எந்நேரமும் பூட்டிக் கொள்வாள்.

"கற்பழிக்கனும்னு நினைக்கிறவனுக்கு இந்த கதவெல்லாம் ஒரு பொருட்டா என்ன?" ஒரு நாள் மாடிப்படியில் இறங்கிக்கொண்டிருந்தவளை கடந்து இறங்கியவன் முணுமுணுத்தபடி செல்ல, திக்கிட்டு நின்று விட்டாள் கிருஷ்ணதுளசி.

கடகடவென இறுதிப்படியை அடைந்தவன் நின்று திரும்பி இவளை பார்த்து கண் சிமிட்டி விட்டு போனான்.பாவி! என்னவெல்லாம் பேசுகிறான்? கிருஷ்ணதுளசியின் மனது கொதித்தது.

பிறகொருநாள் "இந்த ஏரியாவில் சிகரெட் எங்கே கிடைக்கும் கிருஷ்ணா?" கேட்டபடி ஒருக்களித்து சாத்தியிருந்த இவள் அறைக்கதவை திறந்து கொண்டு அவன் உள்ளே நுழைய முயல "அங்கேயே நில்" கத்தினாள்." வாசலைத் தாண்டி உள்ளே வந்தாயானால் நடப்பதே வேறு"

தூக்கிய காலை தூக்கியபடி அப்படியே ஒற்றைக் காலில் நின்றான் அவன். "இப்போது இந்த காலை கீழே வைத்துக் கொள்ளலாமா? வேண்டாமா?" பரிதாபம் போல் முகத்தை மாற்றிக் கொண்டான்.

ஆத்திரத்துடன் எழுந்து வந்தவள், அலுவலகத்திற்கு கொண்டு செல்ல வைத்திருக்கும் பட்டன் குடையை எடுத்து அவன் நெஞ்சில் வைத்து அழுத்தி அவனை வெளியே தள்ளினாள்."ஒரு எட்டு உள்ளே எடுத்து வைக்கக் கூடாது" ஒற்றை விரலாட்டி எச்சரித்தாள்.

" சரி" பணிவு போல் கைகட்டி வாய் பொத்திக் கொண்டான்.

" உங்களுக்கு என்னைப் பார்த்தால் கேனச்சி மாதிரி தெரிகிறதா? எப்போது பார்த்தாலும் தீப்பெட்டி, சிகரெட் என்று..."

" இதில் என்ன இருக்கிறது கிருஷ்ணா? ஆன்லைனில் சிகரெட் ஆர்டர் செய்யலாம் என்றால் கொண்டுவர ரொம்ப லேட் ஆகுமாம். எனக்கு, உடனே வேண்டுமே... தெரு முனையில் ஒரு பெட்டி ஷாப் பார்த்தேன். அங்கே கிடைக்குமா?"

"நான் வேண்டுமானால் போய் வாங்கி வந்து தரட்டுமா?" கிண்டலாக கேட்டாள்.

" நல்ல ஐடியா. செய்யேன். நான் வெளியே போனால் கூட்டம் கூடிவிடும்.மாஸ்க் போட்டு முகம் மறைத்து என்று நிறைய வேலைகள் பார்க்க வேண்டும்"

பெரிய செலிபிரட்டி இவன்... எவ்வளவு தைரியம் இருந்தால் என்னை சிகரெட்டு வாங்கி வரச் சொல்வான்! அன்று கையில் இருந்த குடையால் அவன் மண்டையை பிளக்கும் வேகம் வந்தது கிருஷ்ணதுளசிக்கு.

இன்றோ தன் இடம் தேடி வந்தவளை "நானெல்லாம் ஒன்றும் சொல்ல மாட்டேன் கிருஷ்ணா, உள்ளே வா" என்று தைரியம் சொல்லி அழைத்தான்.

ஆனால் அறைக்குள் நுழைபவளை அணைத்து கொள்ளும் நோக்கத்துடன் இரண்டு கைகளையும் விரித்தாற் போல் வைத்திருந்தான்.

8

"மீட்டிங் ஆரம்பிச்சு அரை மணி நேரம் ஆயிடுச்சும்மா" அட்டெண்டர் தகவல் தர, கிருஷ்ணதுளசி அதிர்ந்தாள். அது எப்படி அவள் இல்லாமல் மீட்டிங் நடக்கும்?

நேற்றுடன் அவர்கள் எடுத்திருந்த ப்ராஜெக்ட் முடிவடைந்திருந்தது. க்ளையன்டுக்கு அந்த ப்ராஜெக்ட் மிகவும் பிடித்து விட,ப்ராஜெக்டில் வேலை செய்தவர்களை பாராட்டி ஒரு மீட்டிங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது கம்பெனி. கடந்த இரண்டு மாதங்களாக இந்த ப்ராஜெக்ட்காக கடுமையாக உழைத்த அவள் இல்லாமலேயே அந்த மீட்டிங் நடந்து கொண்டிருக்கிறது.

இரவும் பகலுமாக பட்ட பாடு நினைவு வர கிருஷ்ணதுளசிக்கு கண்கள் கலங்கிவிட்டன.மீட்டிங் ஹாலுக்கு வெளியிலேயே தளர்ந்து அமர்ந்து விட்டாள். எவ்வளவு பெரிய அவமானம் இது! மீட்டிங் நடந்து முடிந்த ஒரு மணி நேரமும் அப்படியே அசையாமல் அமர்ந்திருந்தாள்.

அந்தப் பக்கமாக சென்ற அலுவலக ஊழியர்கள் அவளை பரிதாபமாக பார்க்க, அதனை உணரும் நிலையில் கூட அவள் இல்லை. மீட்டிங் ஹால் கதவை திறந்து க்ளைன்ட்ஸ் இருவருடன் முதலில் வெளியே வந்தவன் நிரஞ்சன். ஒரு மாதிரி கோணல் சிரிப்புடன் இகழ்ச்சியாக இவளை பார்த்து கடந்து போனான்.

பின்னாலேயே வந்த முரளி, தனுஷ், பிரியா, ரஞ்சனி இவளை பார்த்து தயங்கி நிற்க, அவர்களை அடுத்து வந்த நீலவண்ணன் "வேலையை பாருங்கள், இங்கே என்ன நிற்கிறீர்கள்?" என்று அகற்றினான்.

கிருஷ்ணதுளசி கோபத்துடன் எழுந்து நீலவண்ணனிடம்

வந்தாள். "சார் நானும்தான் இந்த ப்ராஜெக்ட்டில் ஓர்க் செய்து இருக்கிறேன். என்னை விட்டுவிட்டு மற்றவர்களை மட்டும் அறிமுகம் செய்திருக்கிறீர்கள்"

" நீதான் கடைசி ஒரு வாரமாக ப்ராஜெக்ட் இருந்து விலகிக் கொண்டாயே! உன்னை எப்படி நான் சேர்க்க முடியும்?"

இரண்டு மாதங்களாக இரவும் பகலுமாக வேலை செய்த ப்ராஜெக்ட். கடைசி ஒரு வாரம் மட்டும், அதிலும் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டுதான் இருந்தாள், வீட்டில் மட்டுமே கொஞ்சம் இவளுக்கு வேலை தரப்படவில்லை. இதிலேயே இந்த ப்ராஜெக்ட்டில் வேலை செய்யாதவள் ஆகி விடுவாளா?
" உங்களுக்கு மனசாட்சி என்று ஒன்று இருக்கிறதா சார்?" குமுறலுடன் கேட்டாள்.

" உனக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு கிடையாது .போய் எம்.டியை பாரு" நீலவண்ணன் ஒரு துள்ளலுடன் போனது போல் இவளுக்கு தோன்றியது.

இப்போது வரும் புது ப்ராஜெக்டுகளுக்கு டீம் லீடராக இருப்பதற்கு இவன் தகுதியற்றவன்.பழைய ஸ்கில்லை(skill) வைத்தே ஓட்டிக் கொண்டிருப்பவன். அந்த நிரஞ்சனுக்கு கூழைக் கும்பிடு போடுவதாலேயே இந்த பதவியில் இருந்தான்.

சரியாக சொல்வதானால் அவ்வப்போது தேவையான கோர்ஸ்களை படித்து,உடனுக்குடன் தன்னை அப்டேட் செய்து கொண்டு லீடர் பதவிக்கு தகுதியானவளாக தன்னை வளர்த்துக் கொண்டிருப்பவள் கிருஷ்ணதுளசிதான். தகுதிகளை வளர்த்துக் கொண்டதாலேயே இங்கிருந்து ஒதுக்கப்படுகிறேனோ? வருந்தினாள்.

"உங்கள் எண்ணம் என்ன சார்? நானாக இந்த வேலையை விட்டு போக வேண்டும் என்று நினைக்கிறீர்களா?" நேரடியாக நிரஞ்சன் முன் நின்று கேட்டாள்.

"உனக்கு நம் கம்பெனியில் மூன்று வருட அக்ரீமெண்ட் இருக்கிறது. அப்படியெல்லாம் திடீரென்று வேலையை விட்டு போக முடியாது. போய் உன் இடத்தில் உட்கார்ந்து வேலையை பார் .அடுத்த ப்ராஜெக்ட் வந்துவிட்டது" அதிகாரமாக பேசினான்.

கிருஷ்ணதுளசிக்கு புரிந்தது. கம்பெனியில் நன்றாக

வேலை வாங்கப்படுவாள், ஆனால் அதற்குரிய அங்கீகாரம் எதுவும் அவளுக்கு கொடுக்கப்படாது. காரணமாக வீட்டிற்கு கொடுக்கப்படும் வேலைகளை அவள் பார்ப்பதில்லை என்று சொல்லப்படும்.

சே...கொஞ்சம் முன்னேற நினைப்பவளை எப்படி காலை பிடித்து இழுக்கிறார்கள்! கலங்கிய கண்களை அவனுக்கு காட்ட மனதின்றி வேகமாக தனது இடத்தில் வந்து அமர்ந்தாள். ஆதரவாக கைப்பற்றிய தோழிகளை ஊதறினாள். தலைவலி லீவ் வேண்டும் என்று நீலவண்ணனுக்கு மெயில் அனுப்பிவிட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறினாள்.

சாலையின் உள்ளே ஒதுங்கி இருந்த அந்த உணவகத்தின் உள்ளே நுழைந்தாள். சிறு சிறு குடிலாக சாப்பிடும் இடங்களை பிரித்து கார்டனுக்குள் ஆங்காங்கே ஒளித்து வைத்திருப்பர் அந்த ஹோட்டலில். தனிமைக்காக இங்கே வந்தவள், ஒரு குடிலை தேர்ந்தெடுத்து அமர்ந்தாள்.

"பிரண்ட் வருவார் அரை மணி நேரம் கழித்து வா" என்று வந்த சர்வரை அனுப்பி விட்டு தன் அலுவலக கவலைகளில் ஆழ்ந்தாள்.

"கிருஷ்ணா யாருக்காகவும் வெயிட் செய்கிறாயா?" கேட்டபடி அவள் முன் வந்தமர்ந்த முகமூடி மனிதனைக் கண்டு முதலில் பயந்தவள், பிறகு அவன் குரலில் தெளிந்து பார்த்தாள். முகம் முழுவதும் மறைக்கும்படியான மாஸ்க் போன்ற ஒன்றை அணிந்திருந்தான் அஸ்வத். தலையில் நெற்றியை மறைக்கும்படி கருப்பு நிற தொப்பி.

அவனது துறு துறு கண்கள் மட்டுமே வெளியே தெரிந்தன. சிறு கவலையும் நிறைய ஆறுதலையும் சுமந்து அவளை பார்த்த அந்த கண்களினுள் அரை நிமிடம் தன்னை மறந்து விழுந்திருந்தவள், திடுமென சுதாரித்துக் கொண்டாள்.

"எங்கே போனாலும் என்னை விட மாட்டீர்களா? கொஞ்ச நேரம் நிம்மதியாக இருக்க விடுங்களேன்"

அவள் விழிகளை ஊடுருவியவன் மெல்ல தலையசைத்தான் "இப்போது போய் விடுகிறேன் கிருஷ்ணா, ஒரே ஒரு காபி மட்டும் குடிப்போமா?" மயிலிறகாய் மனதை வருடியது அவனுடைய மென் வார்த்தைகள். தன்னை அறியாமல் தலையசைத்திருந்தாள்

கிருஷ்ணதுளசி.

சர்வர் காபியை வைத்துவிட்டு போனதும், மாஸ்க்கை சுழற்றி வைத்துவிட்டு அவளுக்கும் சேர்த்து காபி கலந்தான். "நம் இந்தியர்கள் நிறைய பேருக்கு இந்த காபி மன அழுத்தத்தை குறைக்கும் அற்புதமான மருந்து தெரியுமா? ருசித்து ஒவ்வொரு சொட்டாக காபியை அவர்கள் குடித்து முடிக்கும் ஐந்து நிமிடங்கள் போதும்,அவர்கள் கவலை போவதற்கு" சொன்னபடி அவளுக்கு காபியை நீட்டினான்.

கப்புடன் தன்னை நோக்கி நீண்ட அவனுடைய நீள கைகள் முதல் நாள் அவளை அணைக்க தயார் போல் விரிந்திருந்தது அவள் நினைவில் வந்தது.

அப்போது அவன் நின்றிருந்த தோற்றத்திற்கு வீல் என்று கத்தும் உத்வேகத்தை கஷ்டப்பட்டு அடக்கி முறைத்தாள் கிருஷ்ணதுளசி. "என்ன செய்யப் போகிறீர்கள்?" வேக மூச்சுடன் கண்களை உருட்டினாள்.

" எப்போது பார்த்தாலும் இது என்னம்மா கண்ணகி வேஷம்? உன்னைப் போல் என் கையில் குடை எதுவும் இல்லை என்று காட்டுவதற்காக கைகளை விரித்து வைத்திருக்கிறேன்" அற்புதமான விளக்கம் ஒன்றை அப்பாவியாக சொன்னவனின் வாய்க்குள் கள்ளச் சிரிப்பு.

எத்தன்! வாய் சொல்வது ஒன்று,கை சொல்வது ஒன்று!

"ஆன்ட்டிக்கு மூட்டு வலி.படியேற எவ்வளவு கஷ்டப்படுவார்கள் தெரியுமா?"

" நன்றாக தெரியுமே, ஆனாலும் எனக்கு வேறு வழி தெரியவில்லை கிருஷ்ணா, உன்னை சமாதானம் செய்ய வேண்டுமே" இலகுவாக அவன் சொல்ல கிருஷ்ணதுளசிக்கு ஆத்திரம் வந்தது.

" உங்கள் சுயநலத்திற்காக ஒரு வயதானவர்களை கஷ்டப்படுத்துவீர்களா?"

" போதும் கிருஷ்ணா! எப்போது பார்த்தாலும் என்னை பழி சொல்லிக் கொண்டு... இப்படியும் இருக்கலாமோ என்று என்னை பற்றி கொஞ்சம் மாற்றித்தான் யோசித்துப் பாரேன்"

இவனை... இந்த வில்லனை... வேறு மாதிரி மாற்றி யோசிப்பதாவது! "உங்கள் அடுத்த படத்தில் வில்லன் வேஷம் போடுங்கள். அதுதான் உங்களுக்கு பொருந்தும்.

ஹீரோவாக நினைக்காதீர்கள்" அறைக்குள் போய் பூட்டிக் கொண்டாள்.

இதோ இப்போது அவளுடைய துயரம் புரிந்து காரணம் அறியாமலேயே மென்மையான வார்த்தைகளை கவனமாக கோர்த்து ஆறுதல் அளித்துக் கொண்டிருக்கிறானே இவன் வில்லனா? ஹீரோவா? கிருஷ்ணதுளசி அவனைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

9

அன்று ஆபீஸிற்கு லீவ் சொல்லிவிட்டு ஆன்லைனில் இன்டர்வியூ ஒன்றை அட்டென்ட் செய்து கொண்டு இருந்தாள் கிருஷ்ணதுளசி. விடாமல் கதவு தட்டப்பட எரிச்சலுடன் எழுந்தாள். யாரது? அந்த எதிர் வீட்டுக்காரனாக இருக்காது, கரடி போல் வந்து நிற்பான் என்றுதான் முதலிலேயே அவனிடம் சொல்லிவிட்டே இன்டர்வியூ அட்டென்ட் பண்ண வந்து அமர்ந்திருந்தாள்.

அவனைப் பார்க்க யாராவது வந்திருக்கலாம். கடந்த ஒரு வாரமாக அவனை பார்க்கவென்று சிலர் வந்து போக ஆரம்பித்திருந்தனர். ஒல்லியாக ஒட்டடை குச்சி போல் உயர்ந்திருக்கும் ஒருவன், அடர்ந்த மீசையை எடுத்து விட்டால் பத்தாவது படிக்கும் பையன் என்று உறுதி சொல்வது போன்ற தோற்றத்துடன் ஒருவன்.

இந்த மகா பெரிய டைரக்டர் அஸ்வத்தாமனின் அசிஸ்டென்டுகளாம். அவர்கள் ஏன் இங்கே வர வேண்டும்? கிருஷ்ணதுளசி எப்போதும் போல் அவனிடம் சண்டைக்கு போக, அடுத்த படத்தின் ஸ்டோரி டிஸ்கசன் என்றான் அவன் தன் வழக்கம் போல் கண்களை சிமிட்டி.

அந்தப் படத்தை மட்டும் உருப்படியாகவா எடுக்கப் போகிறாய்... கண்டிப்பாக அந்த படம் ஓடவே ஓடாது என்று சாபங்களை எறிந்து விட்டு வந்தாள். அதென்னவோ அவளது வசவுகளையும் கோபங்களையும் ஒரு புன்னகையுடன் எளிதாக கடந்து விடும் தன்மை அஸ்வத்தாமனிடம் இருந்தது.

ஆனால் அவனது அசிஸ்டன்ட்ஸ் பிரகாசும் சஞ்சையும் வேறு சொன்னார்கள். அவர்கள் டைரக்டர் ரொம்பவும் கோபக்காரனாம், சிறு விஷயம் கூட அவன் நினைத்தபடி நடக்கவில்லை என்றால் அன்று ஷூட்டிங்கில் எல்லோரையும் ஒரு வழி பண்ணி விடுவானாம். அஸ்வத்தாமனை பார்த்தவுடன் பவ்யமாகிவிடம் அவர்களது உடல் மொழி அவர்கள் கூற்று உண்மை என்று சொன்னது.

கிருஷ்ணதுளசிக்கு என்னவோ அஸ்வத்தாமனின் கோபமான முகத்தை கற்பனையில் கூட பார்க்க முடியவில்லை, எந்நேரமும் குறும்பும், சிரிப்பும், கொஞ்சலுமாகவே அவன் முகம் கற்பனையிலும் அவளிடம் கனிந்தது.

அவனின் வற்புறுத்தலுக்காகவே சுஜாதாவுடன் சமாதானமாகிக் கொண்டவளினம் மனதில் இன்னமும் நெருடல் இருந்து கொண்டேதான் இருந்தது.அதெப்படி இப்படி ஒரு கூத்தாடியை அவளுக்கு பக்கத்தில் தங்க வைப்பார்?

எனக்கு உன் இடம் வேண்டாம் என்று போய்விடலாம். ஆனால் அதனால் ஆன்ட்டி ரொம்பவும் கஷ்டப்படுவாரே, என்ற தயக்கத்துடன்தான் அங்கேயே தொடர்ந்து தங்கி இருந்தாள். முன்பு போல் அவளால் வெளிப்படையாக சகஜமாக சுஜாதாவுடன் பழக முடியவில்லை.

இதோ இப்படி சரியான நேரத்தில் இடைஞ்சல் வரும் சூழ்நிலையில் அவளை நிறுத்திவிட்டாரே! இன்டர்வியூவிற்கு இடையே ஐந்து நிமிடம் இடைவெளி விடப்பட வேகமாக எழுந்து கதவை திறந்தவள் திகைத்தாள். மிக அழகான பெண் ஒருத்தி சிக்கனமான உடையுடன் வெளியே நின்றிருந்தாள்.

அடர்த்தியாய் சாயம் ஏற்றிய தடித்த உதடுகளை குவித்து "ஹாய்" என்றால் ஹஸ்கியான குரலில்.

"யார் நீ?" என்று இவளும் "ஹூ ஆர் யூ?" என்ற அவளும் ஒரே நேரத்தில் கேட்டனர். என் இடம் தேடி வந்துவிட்டு என்னையே யார் என்கிறாளே முறைத்தபடி "வந்திருக்கும் நீங்கள்தான் சொல்ல வேண்டும்" என்றாள்.

" அஸ்வா இல்லையா?" கேள்வி கேட்டுவிட்டு ஓயிலாய் முன்னால் லேசாக குனிந்தாள். இந்த கேள்விக்கு என்ன கருமத்திற்கு குனிந்து தொலைகிறாள்! கண்ணை குத்தி குருடாக்கிக்கிடலாம் போல இருக்கு.

"சாரி அப்படி யாரும் இங்கே இல்லை"

"ஏய் மறைக்க நினைக்காதே, அஸ்வா இங்கேதான் தங்கி இருக்கிறார்.எவ்வளவு கஷ்டப்பட்டு கண்டுபிடித்தேன் தெரியுமா? அவரை இன்று விடப் போவதில்லை" சட்டமாக போய் ஹால் சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

கிருஷ்ணதுளசிக்கு உள்ளம் கொதித்தது. எட்டிப் பார்க்க கதவைத் திறந்து உள்ளே வருபவர் கண்களுக்கு ஏடாகூடமாக தெரியுமாறு ஒரு வகையான நிலையில் தன்னை அமர்த்திக் கொண்டு கையில் போனை எடுத்து நோண்டிக் கொண்டிருந்தாள் அவள்.

கிருஷ்ணதுளசியால் மீத இன்டர்வியூவை சரியாக செய்ய முடியவில்லை.இந்த வேலை நிச்சயம் தனக்கில்லை

என்று தெரிந்ததும் அவள் மனம் மேலும் கொதித்தது. எல்லாவற்றிற்கும் காரணம் அவன்தான். கோபத்துடன் தன் போனை எடுத்து அவனுக்கு அழைத்தாள்.

" கடைசியில் உன்னுடைய மட்டமான புத்தியை காட்டி விட்டாய்தானே? குடும்பம் நடத்தும் வீட்டிற்குள் ஒரு கூத்தாடியை கொண்டு வந்து உட்கார வைத்திருக்கிறாயே? இந்த வீடு விளங்குமா! நீ விளங்குவாயா? இனி என் மூஞ்சியிலேயே விழிக்காதே! நீ இங்கே இருந்தால் நான் இங்கே வரமாட்டேன்" கத்திவிட்டு அவன் பதிலை கேட்காமல் போனை கட் செய்தாள்.

அதே வேகத்துடன் கீழே இறங்கிப் போனவள் சுஜாதாவிடம் "மேலே உங்கள் அச்சுவை தேடி ஒரு பெண் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் ஆன்ட்டி. இதெல்லாம் எனக்கு சரிப்படாது. ஒன்று உங்கள் அச்சு இங்கே இருக்க வேண்டும் அல்லது நான் இருக்க வேண்டும். உங்களுக்கு யார் தேவை என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்" படபடவென்று பேசிவிட்டு தனது ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு வெளியேறி விட்டாள்.

மனம் போன போக்கில் கொஞ்ச நேரம் வண்டியை ஓட்டியவள் கண்ணில் பட்ட பூங்கா ஒன்றினுள் நுழைந்து உட்கார்ந்து கொண்டாள். இதற்கிடையில் அவளது போனிற்கு அஸ்வத்திடமிருந்து மாறி மாறி அழைப்புகள் வர எல்லாவற்றையும் கட் செய்து விட்டாள். வாய்ஸ் மெசேஜ் வர அதனை திறந்து பார்க்காமல் வைத்திருந்தாள்.

ஆனால் பத்து நிமிடங்களுக்கு மேல் பொறுக்க முடியாமல் போக, மெசேஜை ஓபன் செய்தாள் . "முட்டாள் எங்கே போய் உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்? ஆன்ட்டிக்கு ஆக்சிடென்ட் ஆகிவிட்டது. சீக்கிரம் வா" கோபம் கொப்பளிக்கும் குரலில் செய்தி அனுப்பியிருந்தான். அலறியடித்து ஸ்கூட்டியை எடுத்துக்கொண்டு போனாள்.

"அவசரமாக மாடியேற வந்திருக்கிறார்கள். ஸ்லிப் ஆகி படியில் உருண்டு விட்டார்கள். நல்லவேளை நான் சரியான நேரத்தில் வந்ததால் ஆம்புலன்ஸில் இங்கே கொண்டுவந்து சேர்த்து விட்டேன்" ஆஸ்பத்திரியில் அஸ்வத் தகவல் சொன்னான்.

புருவங்களில் வலியின் சுளிப்புடன் மருந்துகளின் உதவியால் தூங்கிக் கொண்டிருந்த சுஜாதாவை கண்களில் நீரோடு பார்த்தாள். "சாரி ஆன்ட்டி"

முணுமுணுப்போடு அவர் கையை மெல்ல வருடிவிட்டாள்.

"எதையும் ஆழ்ந்து கவனிப்பதில்லை, யோசிப்பதில்லை.எல்லாவற்றிலும் அவசரம்" கடிந்து கொண்டவனை கோபமாக பார்க்க ,அவன் பிளாஸ்கிலிருந்து பேப்பர் கப்பில் காபி ஊற்றி நீட்டினான்.

"முதலில் இதை குடி. உதடெல்லாம் காய்ந்து போய் கிடக்கிறது. என்னை திட்டுவதற்கு தெம்பு வேண்டுமே"

காய்ந்து வறண்டு போய் கிடந்த தனது வாயையும் தொண்டையையும் உணர்ந்தவள் காபி கப்பை வாங்கிக் கொண்டாள். பாதி குடித்து முடித்ததுமே அவள் வாயிலிருந்து சத்தம் வெளியே வந்தது.

"டாக்டர் என்ன சொல்கிறார்?"

"ப்ராக்சர் எல்லாம் இல்லை. லேசாக கெண்டைக்காலில் சவ்வு விலகி இருக்கிறதாம்.பத்து நாட்கள் கட்டு போட்டிருந்தால் சரியாகிவிடும். இன்று மாலையே டிஸ்சார்ஜ் செய்துவிடலாம் என்றிருக்கிறார்"

"நான் ஆன்ட்டியிடம் இவ்வளவு ஹார்ஸாக பேசியிருக்கக் கூடாது" உண்மையான வருத்தத்தோடு சொன்னாள்.

"புரிந்தால் சரி. கிருஷ்ணா நீ இங்கே கொஞ்சம் பார்த்துக் கொள்கிறாயா? எனக்கு வெளியே வேலை இருக்கிறது" அஸ்வத் சொல்லவும் கொஞ்சம் தயங்கினாள். "நான் தனியாக..."

"எனக்கு வெளியே ஒரு இரண்டு மணி நேரம் வேலை இருக்கும்.டிஸ்சார்ஜ் செய்யும் போது நான் வந்து விடுவேன். அதுவரை பார்த்துக் கொள்ளேன் ப்ளீஸ்"

"ஆன்ட்டியை கவனித்துக் கொள்ள நீங்கள் ஒன்றும் எனக்கு சொல்லத் தேவையில்லை" கிருஷ்ணதுளசி தலையை சிலுப்ப சரிதான் என்ற சலிப்புடன் கிளம்பி போனான் அஸ்வத்.

சுஜாதாவின் கையை பற்றியபடி அருகில் அமர்ந்தாள். அரை மணி நேரம் கழித்து அவர் மெல்ல விழித்துப் பார்க்க "சாரி ஆன்ட்டி" என்றாள் முதலிலேயே அவசரமாக. கண் விழித்ததும் அருகிலேயே கிருஷ்ணதுளசியை பார்த்ததிலேயே சுஜாதாவின் முகம் மலர்ந்து விட்டது. "வீட்டை விட்டு போய்விட மாட்டாயே?" திணறலான குரலில் அவர் கேட்க "நிச்சயம் போகமாட்டேன் ஆன்ட்டி"

என்று வாக்கு கொடுத்தாள்.

"அந்தப் பெண்ணை விரட்டலாம் என்று வேகமாக படி ஏறினேன். கால் ஸ்லிப் ஆகி..." ஆன்ட்டி சொல்ல அவர் வாயை மெமையாக மூடினாள். "பேசாதீர்கள் ஆன்ட்டி, ஓய்வெடுங்கள்"

அவள் கையை மென்மையாக விலக்கிய சுஜாதா "அந்தப் பெண் அஸ்வத்திடம் அடுத்த படத்தில் நடிக்க சான்ஸ் கேட்டு வந்த பெண்ணாம்" தகவல் சொல்ல கிருஷ்ணதுளசியினுள் கோபம் துளிர்விட துவங்கியது.

அந்தப் பெண்ணின் தளுக்கும், குலுக்கும் நினைவில் வர அவர்களெல்லாம் குடும்பம் நடத்தும் வீட்டிற்குள் வர தகுதியானவர்கள் தானா? வார்த்தைகளை கொட்ட உதடுகள் துடித்தாலும் சுஜாதாவிற்காக வாயை மூடிக்கொண்டு அமைதியாய் அமர்ந்திருந்தாள்.

"அஸ்வத் நல்ல பையன்மா. அவன் இருக்கும் பீல்டை வைத்து அவனை தவறாக கணிக்காதே"

"ஆன்ட்டி அதையெல்லாம் பிறகு பேசிக் கொள்ளலாம். இப்பொழுது தூங்கி ஓய்வெடுங்கள்"

" தூக்கம் வரலைம்மா. ரொம்ப நாட்களாகவே அஸ்வத் பற்றி உன்னிடம் பேச நினைத்திருந்தேன். நாம் இருவரும் இப்படி சந்தித்துக் கொள்ளக்கூட நேரமில்லை"

அந்த நேரத்தை தான் உண்டாக்கிக் கொள்ளாதது நினைவில் வர "சாரி ஆன்ட்டி" என்றாள். ஒருவேளை ஆன்ட்டி சொல்வதைக் கேட்டிருந்தால் அவர்கள் இப்படி படுக்கையில் வந்து படுக்கும் அளவு வந்திருக்காதோ என்ற எண்ணம் அவள் மனதில்.

" அஸ்வத் எனது கூடப் பிறந்த அக்காவின் மகன்" சுஜாதா மெல்லிய குரலில் சொல்ல ஆச்சரியமாக பார்த்தாள்.

" நீங்கள் அவருடைய சித்தியா ஆன்ட்டி?" ஆமோதித்து தலையசைத்தவர், "அக்கா காஞ்சனா என்னை விட ஐந்து வயது முத்தவள். எங்கள் குடும்பம் வசதி படைத்த குடும்பம். அப்பா அம்மாவிற்கு நாங்கள் இரண்டு பேரும் பெண்கள். எங்கள் குடும்ப வசதி செல்வாக்கிற்கேற்ற வரன் ஒன்றை காஞ்சனாவிற்கு மணமுடித்து வைத்தார் அப்பா. அக்காவின் மகன் அஸ்வத் அக்காவை விட என்னிடம் வளர்ந்ததுதான் அதிகம். நாங்கள் இருவரும் சேர்ந்து வீட்டையே கலக்குவோம். அப்பா எனக்கு திருமணத்திற்கு வரன் பார்க்க ஆரம்பித்தார். ஆனால் நான் எங்கள் அலுவலக மேனேஜர் ஜெயராமை

காதலித்தேன். என் காதலை வீட்டில் எல்லோரும் எதிர்த்தனர். அவர்களின் அந்தஸ்துக்கு பொருத்தமற்ற ஒருவனை திருமணம் செய்து கொடுக்க முடியாது என்று பிடிவாதமாக இருந்தனர். வேறு வழியின்றி நான் வீட்டை விட்டு வெளியேறிப் போய் ஜெய்யை மணம் முடித்து கொண்டேன்"

கிருஷ்ணதுளசி சுஜாதாவை ஆச்சரியமாக பார்த்தாள். மிக மென்மையாக குரல் உயர்த்தி பேசக் கூடத் தெரியாத சுஜாதா ஆன்ட்டியின் பின்னால் இப்படி ஒரு காதல் கதையா? இவ்வளவு தைரியமான பெண்மணியா அவர்? அவள் பார்வை புரிந்த சுஜாதா புன்னகைத்தார்.

" காதல் அவ்வளவு வலிமையை எனக்கு கொடுத்தது. அத்தோடு என் அஸ்வத்தின் சப்போர்ட் வேறு"

" அஸ்வத்தா? அவருக்கு அப்போது ஆறு வயது இருக்குமா?"

" எட்டு வயது. ஒரு வருடமாக எங்கள் காதலுக்கு தூதே அஸ்வத்தான். கடிதங்கள் பரிசுகள் என்று அஸ்வத் மூலமாகத்தான் நாங்கள் பரிமாறிக் கொண்டோம்"

கிருஷ்ணதுளசி சுஜாதாவை ஒரு விதமாக பார்க்க "தப்புதாம்மா இப்பொழுது யோசித்துப் பார்த்தால் தவறு என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அப்போது எங்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. அத்தோடு அஸ்வத்தை நான் என்றும் மகனாக பார்த்ததில்லை.சிறிய வயதென்றாலும் சிறந்த தோழனாகத்தான் எனக்கு இருந்தான். ஜெய்யை நான் திருமணம் செய்து கொள்வதில் அவனுக்கும் மிகுந்த விருப்பம் இருக்கவே அவன் உதவியோடு நாங்கள் வீட்டை விட்டு வெளியே போய் மணம் முடித்துக் கொண்டோம். அன்றிலிருந்து எங்கள் குடும்பத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்டோம்"

"அம்மாவிற்கு உடம்பு சரியில்லை என்று ஒரு முறை நான் பார்க்கச் சென்ற போது பணத்திற்காக வந்தாயா? என்று அக்காவும் அத்தானும் என்னைக் கேட்க அன்றிலிருந்து அவர்கள் பக்கமே போகாமல் ஒதுங்கி இருந்து கொண்டேன். அஸ்வத்தும் படிப்பதற்கு ஹாஸ்டலுக்கு போய்விட,எங்கள் நட்பும் பிரிந்துவிட்டது. அதற்கு பிறகு மூன்று மாதங்களுக்கு முன்புதான் அஸ்வத்தை பார்த்தேன். சாலையில் என்னை பார்த்து அவனாகவேதான் அடையாளம் கண்டு கொண்டு வந்து பேசினான்.சினி பீல்டு அப்பாவிற்கு பிடிக்காததால் தனியாகத்தான் தங்கியிருப்பதாக

சொன்னான்.என்னுடன் தங்க அழைக்க சம்மதித்து வந்திருக்கிறான்".

" பல வருடங்களாக பிறந்த வீட்டு சொந்தங்களை ஒதுக்கி இருந்தவள், இப்போதும் கணவரின்றி பிள்ளைகளும் அருகிலின்றி தனிமையான வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பவளுக்கு அஸ்வத் வரப்பிரசாதம் போல் வந்திருக்கிறான்" சொல்லிவிட்டு சுஜாதா கண்கலங்க கிருஷ்ணதுளசியை பார்த்தார்.

எங்களை பிரித்து விட மாட்டாயே என்ற யாசகம் அவர் கண்களில் தெரிய ,அவர் கைகளை பற்றிக் கொண்டாள் கிருஷ்ணதுளசி.

"உங்க அச்சுவை உங்களிடமிருந்து பிரிக்கும் அளவு கொடுமைக்காரியா நான் ?" என புன்னகைத்தாள்.

சுஜாதாவின் முகம் மலர்ந்தது.இரண்டு மணி நேரங்கள் கழித்து வந்த அஸ்வத் கிருஷ்ணதுளசியின் முகத்தை கூர்ந்து பார்த்தான். "என்ன சுஜா நம்ம வாழ்க்கை வரலாற்றை பூராவும் சொல்லியாயிற்று போல, மேடம் முகத்தில் டன்டனாக இரக்கம் வழிகிறது" என்றான் கொஞ்சம் கோபமான குரலில்.

10

"ம்மா... ஆ..." என்ற முனகல் சத்தம் கேட்டு உறக்கம் களைந்தாள் கிருஷ்ணதுளசி. சுஜாதாதான் வலி தாங்காமல் முனகிக் கொண்டிருந்தார். சுஜாதாவிற்கு உதவியாக இருக்கட்டும் அவர் அருகிலேயே படுத்திருந்தாள்.

"ஆன்ட்டி என்னாச்சு?"

"கால் வலி தாங்க முடியலைம்மா. தூக்கமே வரலை" படுக்கையில் புரண்டார். பெயின் கில்லர் கொடுத்துத்தான் படுக்க வைத்திருந்தனர். ஆனாலும் வலி என்றால் என்ன செய்வது?

மென்மையாக அவர் காலை வருடி விட்டாள். ஆனால் நேரம் செல்லச் செல்ல சுஜாதாவின் முனகல் அதிகமாக மாடியில் இருந்த அஸ்வத்திற்கு போன் செய்தாள். உடனே கீழே இறங்கி வந்தவன் டாக்டரை போனில் தொடர்பு கொண்டான்.

"வயதானவர்கள் என்பதால் பெயின் கில்லர் ஒரு அளவிற்குத்தான் கொடுக்க முடியுமாம். இன்று ஓர் இரவு

வலியை தாங்கிக் கொள்ள சொல்கிறார்"

"இருவரும் சுஜாதா அருகில் அமர்ந்து வலி மறப்பதற்காக பேச்சுக் கொடுக்க... வருடி கொடுக்க என்று ஏதேதோ செய்தும் சுஜாதாவால் வலியை தாங்க முடியவில்லை.கண்களில் நீர் வழிய அனத்த தொடங்கினார்.

" இதோ வருகிறேன்" என்று மாடிக்குச் சென்ற அஸ்வத், கண்ணாடி டம்ளரில் செந்நிற திரவம் ஒன்றுடன் வந்தான்."சுஜா இந்த டானிக்கை குடித்து விடு.வலி குறையும்"

அவளும் சுஜாதாவின் உதடுகளை பிரித்து ஊற்ற உதவி செய்தாள்.
முழு டம்ளரும் காலியான பிறகே அந்த சந்தேகம் வர கிளாஸை எடுத்து முகர்ந்து பார்த்தவள் கோபத்தில் கண்கள் சிவக்க அஸ்வத்தை முறைத்தாள். "என்ன இது?" கடித்த பற்களிடையே வார்த்தைகளை துப்பினாள்.

சிறு முனங்கலுடன் சுஜாதா கண்களை மூடி தூங்க ஆரம்பித்திருக்க, அவருக்கு போர்வையை சரி செய்து விட்டபடி "ரெட் ஒயின்" என்றான் சாதாரணமாக.

" அடப்பாவி குடிகாரா! இப்படி வயதானவர்களுக்கு ஒயின் ஊற்றி கொடுத்திருக்கிறாயே! நீயெல்லாம் உருப்படுவாயா?" படபடத்தாள்.

அவள் கைப்பற்றி அறைக்கு வெளியே இழுத்து வந்தான் "மெல்ல பேசு, ஆன்ட்டி தூங்கட்டும்"

"தூக்கமா! போதையில் அவர்களை தன்னிலை மறக்க வைத்து விட்டு, தூக்கம் என்கிறாயே!"

" எனக்கு வேறு வழி தெரியவில்லை கிருஷ்ணா! ரெட் ஒயின் நீ நினைப்பது போல் பெரிய அளவிற்கு உடம்பை பாதிக்காது. சொல்லப்போனால் அது அளவாக எடுத்துக் கொண்டால் உடம்பிற்கு நல்லதும் கூட"

" போடா நீயும் உன் விளக்கமும்,நீயே உன் சித்தி கூட படுத்துக்கோ, நான் என் ரூம் போகிறேன்" கோபித்துக் கொண்டு மாடி ஏறி தன் அறைக்கு வந்து விட்டாள்.

"எப்படி இருக்கிறீர்கள் ஆன்ட்டி?" மறுநாள் காலை இறங்கி வந்து விசாரித்த போது சுஜாதா மிக தெளிவான முகத்துடன் இருந்தார்.

" இப்பொழுது வலியே இல்லைம்மா. உடம்பும் ரொம்ப லேசாக இருக்கிறது"

"எல்லாம் நான் கொடுத்த டானிக்கினாலாக்கும்" அஸ்வத் காலரை உயர்த்திக் கொள்ள அவனை முறைத்தாள்.

"ஆமாம்டா, அது ரொம்ப நல்லா கேட்டுச்சு. இன்னைக்கு நைட்டு கூட அதையே எனக்கு கொடேன்"

"அதற்கென்ன டார்லிங்! கொடுத்துட்டா போச்சு!" அஸ்வத் சொல்லவும் பட்டென்று அவன் தோள்களில் அடித்தாளꣳ கிருஷ்ணதுளசி. "என்ன பேசுகிறீர்கள்?"

"சுஜா டார்லிங் கேட்டால் நான் எப்படி மறுக்க முடியும் கிருஷ்ணா? உனக்கு வேண்டுமென்றால் நீயும் கேட்டு வாங்கிக்கொள். டார்லிங் மேல் பொறாமை படாதே"

" இவனை..." பெட்டில் கிடந்த தலையணையை எடுத்து அவன் முதலில் மொத்தினாள்.

சுஜாதா இவர்கள் செல்ல சண்டையை ரசித்துப் பார்த்தபடி இருந்தார்.குனிந்து அவள் அடிகளை வாங்கியவன் "போதும்,கை வலிக்குமே, வா சாப்பிடலாம்" என்றபடி அடுப்படிக்குள் சென்றான்.

மினி இட்லிகளின் மேல் ஊற்றிய ரோட்டு கடை தண்ணீர் சட்னி. எப்படி இதுபோல் விதவிதமாக சமைக்கிறான்... கிருஷ்ணத்துளசி ஆச்சரியமாக பார்க்க "வாழ்க்கையை ருசித்து வாழ்பவர்கள் உணவையும் ருசிக்க ஆரம்பித்து விடுவார்கள். உணவில் ருசி எதிர்பார்ப்பவர்கள் அருமையாக சமைக்கவும் ஆரம்பித்து விடுவார்கள். உன்னை போல் எந்நேரமும் லேப்டாப்பிற்குள் தலையை நுழைத்துக் கொண்டிருந்தால் எதிலும் மனம் செல்லாது. வாழ்க்கையே மரத்து உணர்ச்சிகளின்றி போய்விடும்"

"ஆஹா உன் உணர்ச்சிதான் நீ எடுக்கும் படங்களில் தெரிகிறதே!" அஸ்வத் கொடுத்த விளக்கங்கள் பிடிக்காமல் குத்தினாள்.

"ஸ்... அப்பா உன்னோட சண்டை போட எனக்கு நேரம் இல்லை. கொஞ்சம் வேலைகள் இருக்கிறது. மதியம் மஸ்ரூம் ரைசும், சிக்கன் ரைத்தாவும் செய்து வைத்திருக்கிறேன்.இரண்டு பேரும் சூடு பண்ணி சாப்பிடுங்கள்.நான் வெளியே கிளம்புகிறேன்"

"எனக்கு ஆபீஸ் இருக்கிறதே..."

" உன் ஓட்டை ஆபீசுக்கு இன்னும் நான்கு நாட்கள் லீவு போடு.உன் ஆன்ட்டியை பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா?" லேப்டாப் பேக்கை முதுகில் மாட்டிக் கொண்டவன் "உன்னுடைய ஸ்கூட்டி சாவி வேண்டுமே

கிருஷ்ணா" என்றான்.

"ஏன் உங்கள் கார் என்னவாயிற்று?"

"பிரகாஷ் ஒரு லொகேஷன் சொல்லியிருக்கிறான். அங்கே காரெல்லாம் போகாதாம். அத்தோடு டூ வீலரென்றால் ஹெல்மெட்டால் முகத்தை மறைத்துக் கொள்ளலாம்"

"என் ஸ்கூட்டி பத்திரம்" சாவியை நீட்டியபடி எச்சரித்தாள்.

" முழுதாக கொண்டு வந்து விடுவேன்.பயப்படாதே..." சொல்லிவிட்டு ஹெல்மெட்டை மாட்டிக் கொண்டு ஆக்சிலேட்டரை திருகி அவன் கிளம்பிய வேகத்தில், தன் ஸ்கூட்டி மீது பெருங்கவலை வந்தது கிருஷ்ணதுளசிக்கு.

"கடங்காரன்,ஒரு ஸ்கூட்டியை என்ன வேகத்தில் எடுக்கிறான் பார்" முணுமுணுத்தவளின் பின்னிருந்து குரல் கொடுத்தார் சுஜாதா.

"அவன் சிறு வயதில் இருந்தே அப்படித்தான்மா. எல்லாவற்றிலும் வேகம்...எதிலும் துறுதுறுப்பு.ஒரு நிமிடம் எங்கேயும் உட்கார மாட்டான்," பெருமையாக அறிவித்தார்.

சரியான ரவுடிப்பயல், இவனிடம் இப்படி பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது... தனக்குள் எண்ணிக் கொண்டவள் "ஏன் ஆன்ட்டி உங்கள் மகன் முதல் படத்தில் உங்கள் காதலை கதையை எடுத்தார். இரண்டாவது படத்தின் கதைக்கு என்ன செய்கிறார்? யாரிடமிருந்து திருடியிருக்கிறார்?"
" காதல் உலகம் முழுவதும் கொட்டிக் கிடக்கிறது. அதை கதையாக எடுக்க திருட வேண்டிய அவசியம் இல்லை. அத்தோடு அவனுக்கு கற்பனை திறன் அதிகம். அப்படி ஒன்றும் எங்கள் காதல் கதையை மட்டுமே எடுக்கவில்லை. சின்ன சீன் மட்டும் தான் வைத்ததாக சொன்னான்.கிருஷ்ணா நாம் அந்த படத்தை பார்க்கலாமா?"

" எந்த படத்தை?" கலவரமாக கேட்டாள்.

"அஸ்வத்தின் காதல் சகுனி படத்தை"

" ஐயோ ஆன்ட்டி அதெல்லாம் குடும்பத்தோடு பார்க்க வேண்டிய படமா?"

" ரொம்ப பேசுகிறாய்! சாதாரண லவ் ஸ்டோரி என்றுதானே கேள்விப்பட்டேன். படத்தை போடேன் பார்க்கலாம்" சுஜாதா கட்டாயப்படுத்த வேறு வழியின்றி டிவியில்

படத்தை போட்டுக் கொண்டு இருவரும் அமர்ந்தனர்.

படத்தில் வரும் சில நெருக்கமான காட்சிகளை ஆன்ட்டியுடன் சேர்ந்து எப்படி பார்க்க போகிறோம் என்று யோசித்தபடி கிருஷ்ணதுளசி இருக்க,சுஜாதா எந்த தடங்கலும் இல்லாமல் படத்துக்குள் ஆழ்ந்து போனார்.அவரை ஆச்சரியமாக பார்த்தபடி தானும் கவனத்தை திரைப்படத்தில் செலுத்தினாள்.

கொஞ்சம் கொஞ்சமாக படம் தன்னை உள்ளுக்குள் எடுத்துக் கொள்வதை உணர்ந்தாள். நிறைய ஜாலி,கொஞ்சம் சென்டிமென்ட், அழகான காதல், திருப்தியான ரொமான்ஸ். படத்தை பற்றி இப்படித்தான் விமர்சனம் சொல்ல தோன்றியது அவளுக்கு.

அன்று எப்படி இந்த படத்தை இவ்வளவு கவனிக்காமல் விட்டோம்? குழம்பினாள்.

" என்ன கிருஷ்ணா படம் பிடித்திருக்கிறதா?" சுஜாதா கேட்க தலையசைத்து ஆமோதித்தாள்.

" பொதுவாக இந்த மாதிரி காதல் படங்கள் எல்லோருக்கும் பிடிப்பதில்லை. காதல் பிடித்தவர்களுக்கும், காதலிப்பவர்களுக்கும் மட்டும்தான் பிடிக்கும்.அன்று நீ எந்த மனநிலையில் இருந்தாயோ... படம் பிடிக்காமல் போய்விட்டது"

சுஜாதா புன்சிரிப்போடு சொல்ல கிருஷ்ணதுளசியின் குழப்பம் அதிகமானது.அன்று பிடிக்காத காதல் இன்று பிடிக்க ஆரம்பித்திருக்கிறதா எனக்கு?

"அன்று ஏதாவது ஆபீஸ் டென்ஷனில் இருந்திருப்பேன். இன்று ஓய்வோடு படம் பார்க்கும் மூடு இருந்தது போல, சாப்பிடலாம் வாங்க ஆன்ட்டி" உணவை சூடு செய்தவளின் மனதிற்குள் காதல் சகுனி அழுத்தமாக அமர்ந்திருந்தான்.

" இன்னமும் உன் ஸ்கூட்டி ஓடுகிறது. அதிசயம் பாரேன்"என்றபடி மாலை இவளிடம் சாவியை கொடுத்தவன் நிறைய களைப்புடன் இருந்தான்.

"உட்காரப்பா ரொம்ப அசந்து தெரிகிறாய்" சுஜாதா சொல்ல, "அந்த தலைமுடியையும் தாடியையும் உங்கள் மகனை குறைக்கச் சொல்லுங்கள். அப்பொழுதுதான் கண்ணைக் கொண்டு பார்க்க முடியும்"உதட்டை சுழித்து அவனுக்கு பழிப்பு காட்டியவள் "நான் என் பிரண்ட்ஸை பார்த்துவிட்டு வருகிறேன் ஆன்ட்டி" என்று வெளியேறினாள்.

அவளுக்கு ஏனோ காதல் சகுனி பார்த்து முடித்ததிலிருந்து அஸ்வத்தை நேருக்கு நேராக எதிர்கொள்ள தயக்கமாக இருந்தது. அவள் கிளம்பிப் போன ஐந்தாவது நிமிடம் வீட்டு கதவு தட்டப்பட கதவை திறந்த அஸ்வத் முகம் கறுத்தான். "நீயா இங்கே ஏன் வந்தாய்?" கோபத்துடன் கேட்டான்.

தோழிகளை பார்த்துவிட்டு திரும்பியவள், வாசலில் ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு தட் தட்டென படியேறி உள்ளே வந்து சோபாவில் அமர்ந்திருந்த அஸ்வத்தின் முன்னால் கோபமாக நின்றாள். "யோவ் உனக்கு கொஞ்சமாவது அறிவு இருக்கிறதா? ஸ்கூட்டியை வாங்கிக் கொண்டு போனாயே, பெட்ரோல் போட வேண்டும் என்று தெரியாதா? பாதியில் நின்று ஒரு கிலோமீட்டர் ஸ்கூட்டியை உருட்டியிருக்கிறேன்" கைகளை அவன் முகத்திற்கு நேராக வீசி கத்தினாள்.

"படித்தவள் தானே நீ? பெட்ரோல் இருக்கிறதா என்று பார்க்காமலேயே வண்டியை எடுத்துப் போவாயா?" அஸ்வத்தும் அவளிடம் சண்டை போடுவதற்கு தயாரானான்.

எதிரில் அமர்ந்திருந்தவன் இவர்களை விழி பிதுங்க பார்க்க, அஸ்வத் கொஞ்சம் தர்ம சங்கடத்துடன் விழித்தான். அவன் பார்வை போன திசையில் திரும்பிப் பார்த்த கிருஷ்ணதுளசி "ஆ" என உண்மையிலேயே வாயைப் பிளந்து அதிர்ந்தாள்.

எதிர் சோபாவில் அமர்ந்து இவர்களை விழி பிதுங்க பார்த்திருந்தவன் நிரஞ்சன்.

11

எவ்வளவு முயற்சித்தும் தூக்கம் வராமல் போக கிருஷ்ணதுளசி படுக்கையில் எழுந்த அமர்ந்தாள். அவள் கேள்விப்பட்ட விஷயங்கள் உள்ளுக்குள் நெருஞ்சியாய் உறுத்திக் கொண்டிருக்க இமைகள் மூட மறுத்தன. சற்று நேரம் காற்றாட நின்று கொண்டிருக்கலாம் என அறைக்கதவை திறந்து கொண்டு பால்கனிப்பக்கம் வந்தவள் புருவங்களை உயர்த்தினாள். அங்கு முன்பே வந்து நின்றிருந்தான் அஸ்வத்.வாயில் சிகரெட் புகைந்து கொண்டிருந்தது.

"இப்போது என்ன காரணமோ?" பின்னிருந்து அவள் கேட்ட கேள்விக்கு புகையை வானை நோக்கி ஊதியவன் "மனபாரம்" என்றான்.

சிகரெட் பிடிக்கும் ஒவ்வொரு முறையும் டென்ஷன்,அலைச்சல், வேலை என்று ஏதாவது காரணம் கண்டுபிடித்து சொல்லிக் கொள்வான்.இப்போது மன பாரமாம்.

"ஏதாவது ஒரு சாக்கு..."

* இல்லை இப்போது உண்மையிலேயே தலை மேல் பாறாங்கல்லை சுமந்தது போல் உணர்கிறேன்"

பால்கனியின் குட்டை கைப்பிடி சுவர் மேல் லேசாக சாய்ந்தாற் போல் அமர்ந்து கொண்டான்.

"கூடப்பிறந்த தம்பியை பார்த்ததில் எதற்காக இவ்வளவு பாரம்?"

"சித்தி எல்லாவற்றையும் சொல்லிவிட்டார்கள் போல" கொஞ்சம் எரிச்சல் தெரிந்தது அவன் குரலில்.

"உங்கள் விஷயத்தில் என்னிடம் எதையும் மறைப்பதில்லை என்று ஆன்ட்டி முடிவு செய்து விட்டார்கள். அம்மா அப்பா உடன்பிறந்தவன் எல்லோரையும் விட்டுவிட்டு இது என்ன வீம்பு?"

"ப்ச்....அவர்களுக்கும் எனக்கும் ஒத்துவரவில்லை.தனியாக பிரிந்து வந்து விட்டேன்"

"பொறுப்பற்ற விடலை போல் இதென்ன பேச்சு? எவ்வளவு தொழில்கள், சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு சினிமா அது இதுவென வெளியே வந்தால் அவர்களுக்கும் கோபம் வரும்தானே? அதில் ஏதாவது பேசினால் பெரிதாக எடுத்துக் கொள்வதா?"

"தொழில்களை விட்டுவிட்டு வரவில்லை. புதிதாக ஒரு தொழிலை உருவாக்கி அதனை என் தம்பியிடம் கொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறேன்"

" என்ன?"

"ஆமாம். எஸ்.ஜே சொல்யூஷன்ஸ், நீ வேலை பார்க்கும் கம்பெனியின் ஒவ்வொரு பகுதியும் நான் பார்த்து பார்த்து உருவாக்கியது. அப்பா அம்மாவின் திருப்திக்காக அதனை செய்து விட்டுத்தான் என்னுடைய விருப்ப வேலைக்கு திரும்பியிருக்கிறேன். எஸ்.ஜே சொல்யூஷன்ஸ் கம்பெனி ஆப்பில் (app) வருமே ஒரு மெசேஜ் டோன். அது கூட என்னுடைய வடிவமைப்புதான்.அந்த அளவு அந்த கம்பெனியில் என் உழைப்பு இருக்கிறது"

அன்று ஆப் மெசேஜ் டோனுக்கு அவன் திடுக்கிட்டது நினைவு வந்தது. "என்ன படித்திருக்கிறீர்கள்?" தடுமாற்றமாய் விசாரித்தாள்.

" கம்ப்யூட்டரில் எம்.எஸ். அமெரிக்காவில் படித்தேன். இதெல்லாம் அப்பாவின் விருப்பத்திற்காக செய்தது. இப்போது என் ஆசையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்?"

பெரிய ஐடி கம்பெனி ஒன்றை உருவாக்கியவனிடம்தான் அவள் கோடிங் தெரியுமா என்று கேட்டிருக்கிறாள். ஒருவித அவமானம் முகத்தை சூடாக்க தலை குனிந்து கொண்டாள்.

"ஆனாலும் பெற்றவர்களை தவிர்ப்பது நியாயம் இல்லை. உங்களுக்கு சினிமா மேல் இருக்கும் இன்ட்ரஸ்ட்டை அவர்களுக்கு புரிய வையுங்கள்"

அஸ்வத் கையில் இருந்த சிகரெட்டை வெளியே சுண்டினான். திரும்பி கிருஷ்ணதுளசியை நேருக்கு நேர் பார்த்தான். "கிருஷ்ணா உனக்கு ஒன்று தெரியுமா? எனக்கு யாரும் அட்வைஸ் செய்தால் பிடிக்காது. எனக்கு தேவையான அறிவை மூளையில் சேர்த்து வைத்திருக்கிறேன். அதனை நானே உபயோகித்துக் கொள்வேன். அதனால் நீ..." என்றவன் கையால் வாயை மூடி பிறகு புறங்கையை வீசினான்... வாயை மூடிக்கொண்டு போ என்பதாக.

"திமிர் பிடித்தவன், உன் கர்வம் தெரிந்தும் பாவப்பட்டு ஆறுதல் சொல்ல வந்தேன் பார்! என்னை சொல்ல வேண்டும், நீ இப்படியே தலைக்கனம் பிடித்து ஆடி,சொந்தங்கள் இல்லாமல் தனிமையில் சிகரெட் பிடித்து பிடித்து கேன்சர் வந்து சீக்கிரமே...." கோபத்தில் நெஞ்சம் ஏறி இறங்க வார்த்தைகளை கொட்டியவள்,இறுதியில் முடிக்க முடியாமல் நாத் தழுதழுக்க அங்கிருந்து ஓடி விட்டாள்.

" ஆவ்...கிருஷ்ணா! சிகரெட் பிடிக்கிறங்க எல்லோருக்கும் கண்டிப்பா கேன்சர் வந்துடுமா?" முதுகில் கிண்டலாக ஒலித்த அவன் குரலில், அழுகை கூட அவசரமாக அறைக்கதவை பூட்டிக் கொண்டாள்.

மறுநாள் காலை ஒருவருக்கொருவர் முகம் திருப்பி நின்ற இருவரையும் கவலையாக பார்த்தார் சுஜாதா. "திரும்பவும் ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கிட்டீங்களா?"

" நான் இல்லை டார்லிங். அவள்தான் எப்போதும்

என்னிடம் வம்பு வளர்க்கிறாள்" அஸ்வத் சொல்ல அவனை முறைத்தாள்.

" என்னம்மா கிருஷ்ணா! நான் நேற்று அந்த பிள்ளையை பற்றி உன்கிட்ட அவ்வளவு தூரம் பேசினேனே!"

" ஆஹா! உங்க அணில் பிள்ளையை தூக்கி நீங்களே இடுப்புல வச்சுக்கோங்க.இதுவெல்லாம் கட்டுக்கு சேராத ஒத்தச்சுள்ளி, இத வச்சி யாராலயும் குடும்பம் பண்ண முடியாது" என்றவள் விடுவிடுவென்று மாடியேறிப் போய் அவனது அறைக்குள் இருந்த சிகரெட் பாக்கெட்டுகளை எடுத்து வந்து அவன் முன்னால் எறிந்தாள்.

" இந்தா எல்லாத்தையும் இன்னைக்கு குடிச்சு தீர்த்திடு. பத்தலைன்னா சொல்லு ஆபீஸ்ல இருந்து வர்றப்ப இன்னும் பத்து பாக்கெட் வாங்கிட்டு வர்றேன்"

அஸ்வத் உயர்ந்த குரலில் சீட்டியடித்தான். "சுஜா டார்லிங் எனக்கு சிகரெட் வாங்கி வரும் அளவுக்கு எங்க பிரண்ட்ஷிப் ஸ்ட்ராங்காயிடுச்சு பார்த்தாயா?"

"ஆன்ட்டி எனக்கு யாரும் பிரெண்ட் கிடையாது. என்னோட முதல் எதிரி உங்க அணில்பிள்ளைதான். இனிமே என்கிட்ட பேச கூடாதுன்னு சொல்லி வையுங்க" ஆத்திரத்துடன் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து பறந்தாள்.

"உங்களை ப்ராஜெக்ட் மாத்தியாச்சு" ஆபிஸில் நீலவண்ணன் சொல்லிச் செல்ல ஆத்திரம் கூடியது.
"யாரைக் கேட்டுடி நம்ம ப்ராஜெக்ட்டை அடிக்கடி மாத்தி விடுறாங்க? இதை நான் என்னன்னு கேட்கிறேன்" பிரியாவும் ரஞ்சனியும் தடுக்க தடுக்க எழுந்து நிரஞ்சனின் முன்னால் போய் நின்றாள்.

"ஏன் எப்போது பார்த்தாலும் என்னை இடம் மாற்றிக் கொண்டே இருக்கிறீர்கள்?"

நிரஞ்சன் இன்று மிக அமைதியாக இருந்தான்."முதலில் உங்களுக்கு கொடுத்த ப்ராஜெக்ட் கொஞ்சம் கஷ்டமாக இருக்கும். இந்த ப்ராஜெக்ட் ரொம்ப டென்ஷன் தராது. நீங்கள் இதிலேயே ஒர்க் பண்ணுங்கள்" நிறைய பவ்யமும் பணிவும் தெரிந்த அவன் குரலில் ஆச்சரியப்பட்டாள்.

காரணம் யாரோ அல்லது எதுவோ, அதன் பிறகு நிரஞ்சன் கிருஷ்ணத்துளசியிடம் மிகவும் பரிவாகவும்,பக்குவமாகவும் நடந்து கொண்டான். அவள் முகம் பார்த்து வேலை சொன்னான்.

அலுவலகம் பற்றிய மனக்கவலை முற்றிலும் அகன்று

விட கிருஷ்ணத்துளசி உற்சாகமாக வளைய வர துவங்கினாள். அந்த உற்சாகத்திற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது.

சில நாட்களாக அவள் அஸ்வத்தை சந்திக்கவே இல்லை. லொகேஷன் பார்க்க என்று அவன் வெளியே அலைந்து கொண்டே இருந்தான். பாதி ராத்திரிக்கு மேல் எதிர் அறையில் அவனுடைய நடமாட்டம் கேட்கும்.மேல் கீழ் என்று ஒன்றுக்கு இரண்டு தாழ்ப்பாளாக போட்டுக் கொண்டு உள்ளேயே இருந்து கொள்வாள்.

அடடா! இவன் ஒருவனை பார்க்காமல் இருப்பது மனசுக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது. இனி ஜென்மத்திற்கும் இவனை பார்க்கவே கூடாது தனக்குள் தானே கூறிக் கொண்டாள்.

அந்த ஞாயிறன்று தோழிகளுடன் சிரித்து பேசியபடி காபி ஷாப்பில் அமர்ந்திருந்த போது நிரஞ்சன் அவர்களை நோக்கி வந்தான். பிரியாவும் ,ரஞ்சனியும் வேகமாக எழுந்து கொள்ள "எதுக்குப்பா எழுத்துக்குறிங்க? ஆர்டர் போட்டு வாங்கிய காபியை வேஸ்ட் பண்ணாமல் குடித்து விட்டே போவோம்" கிருஷ்ணதுளசி அழுத்தமாக அமர்ந்திருக்க, நிரஞ்சன் நெருங்க நெருங்க தயங்கி நகர்ந்தனர் தோழிகள்.

புன்னகையோடு கிருஷ்ணதுளசி எதிரே வந்து அமர்ந்தான் "ஹாய் எப்போது ஓர்க் எல்லாம் எப்படி போய்க்கொண்டிருக்கிறது? ஒன்றும் கஷ்டமாக இல்லையே?"

"பரவாயில்லை" கெத்தலாக மோவாய் உயர்த்திக் கொண்டாள்.

"வேறேதும் குறை இருந்தால் சொல்லிடுங்க, உடனே சரி பண்ணிடலாம்"

"குறை...ம்.. இந்த ஹோம் ஓர்க் கொடுக்கிறதை கொஞ்சம் நிறுத்திட்டீங்கன்னா நல்லாயிருக்கும்"

"அது...உங்களுக்கு இப்போதெல்லாம் தரதில்லையே"

" நான் இப்போது இங்கே வேலை செய்பவர்கள் எல்லோருடைய சார்பிலும் பேசுகிறேன் சார்"

நிரஞ்சனின் தாடை இறுகியது. கோபத்தை அடக்கிக் கொண்டான். வேண்டாம் நிரஞ்சா... பொறுமை! இவளால் நிறைய காரியம் ஆக வேண்டியிருக்கிறது.

"இந்த எஸ்.ஜே என்பதன் அர்த்தம் சுஜாதா ஜெயராமன்

தானே சார்?" அப்பாவி போல் கேட்டாள்.

" சுஜா சித்தி சொன்னார்களா?" பற்களை நறநறத்தான்.

"அவர்கள் ஏன் சார் சொல்லப் போகிறார்கள்? கம்பெனியை ஆரம்பித்தவர்தான் சொன்னார்"

"அஸ்வத்...முட்டாள்,எல்லா விஷயத்தையும் அப்படியே இறக்கியாக வேண்டுமா?"முணுமுணுத்து கை முஷ்டியை இறுக்கினான்.
"என்ன சார் சொன்னீர்கள்?" கிருஷ்ணதுளசி தலையை அழகாக சாய்த்து அவன் பக்கம் காதுகளை திருப்பினாள்.

"அஸ்வத் அவனது பிரிய சித்தியின் பெயரில் ஆரம்பித்த கம்பெனிதான் இது.கொஞ்சம் வளர்ந்ததும் என்னிடம் கொடுத்து விட்டு சினி பீல்டிற்கு போய்விட்டான்"மனமின்றி குடும்ப விபரம் சொன்னான்.

" அஸ்வத்தா...அண்ணன் சார்.வயதிற்கு கொடுத்த சொத்திற்கு மரியாதை கொடுங்கள் சார்.ஆக லட்டு மாதிரி கம்பெனியை வாங்கிக்கொண்டு அண்ணனை கழட்டி விட்டுட்டீங்களா?"

"ஐயோ துளசி என்னங்க இப்படி சொல்றீங்க? இப்பவும் இந்த கம்பெனி சிஇஓ அண்ணன்தாங்க. நான் வெறும் மேனேஜிங் டைரக்டர்தான். சினிமா அண்ணனோட பேஷன், அதில் ஏதாவது சாதனை செய்ய வேண்டும் என்றுதான் அண்ணன் கம்பெனியை விட்டுவிட்டு அங்கே போய்விட்டார்"

"உங்களுக்கும் விள்ளாமல் விரியாமல் ஒரு கம்பெனி கிடைத்தது. சரி சொல்லுங்க இப்போ என்ன வேண்டும்?"

"வந்து... நீங்க அஸ்வத்கிட்ட ..."

"அண்ணன்..."

"ம்... அண்ணனிடம் ஒரு ரெகமென்ட்... வந்து அவனை... அவரை கல்யாணம் பண்ணிக்க சொல்லனும்"

"என்ன?"

"ஆமாம் துளசி அஸ்வத்துக்கு பெண் பார்த்து ரெடியாக இருக்கிறாள். அவர் கல்யாணம் பண்ண மாட்டேன்னு அம்மா அப்பா கூட சண்டை போட்டுட்டு வீட்டை விட்டு வெளியில வந்துட்டாரு. எங்க யாருக்கும் தெரியாம இவ்வளவு நாளா சுஜாதா சித்தி வீட்ல தங்கியிருந்திருக்காரு. நான் தற்செயலாக சித்தியையும்

அஸ்வினையும் வழியில் பார்த்து பின்னாலேயே வந்து அவர்கள் வீட்டை தெரிந்து கொண்டேன். நீங்களும் அஸ்வினும் ரொம்ப பிரெண்ட்ஸ்னு சித்தி சொன்னார்கள். சித்தியால் அஸ்வினை கன்வின்ஸ் பண்ண முடியாதாம். நீங்கள்தான் அஸ்வினை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்து எங்கள் குடும்பத்தை திரும்பவும் சேர்த்து வைக்க வேண்டும். ப்ளீஸ் துளசி..."

நிரஞ்சன் கெஞ்ச கிருஷ்ணதுளசி அயர்ந்து போய் அமர்ந்திருந்தாள்.

அந்த அஸ்வத்துக்கு திருமணமாவது... அதனை நானே பேசி முடிப்பதாவது... அவளுக்கு தலை சுழல்வது போல் இருந்தது.

12

எதிர் அறையில் எப்பொழுது அசைவு கேட்கும் என்று காத்திருந்தாள் கிருஷ்ணதுளசி.இரவு 12 மணிக்கு மேல்தான் அஸ்வத் வந்ததற்கான சத்தம் கேட்க எழுந்தாள். காலையில் கதவை அடைத்துக் கொண்டு நன்றாக தூங்கிக் கொண்டிருப்பான் அல்லது இவள் எழுவதற்கு முன்பு எழுந்து வெளியே போயிருப்பான். அடுத்த படத்திற்கான வேலைகள் துவங்கி விட்டதால் மிகவும் பிசியாக இருப்பதாக சுஜாதா சொன்னார்.

"ஹாய் என்ன ரொம்ப பிசியா?" கேட்டபடி அறை வாயிலில் வந்து நின்ற கிருஷ்ணதுளசியை நம்ப முடியாமல் பார்த்தான் அஸ்வத்.

"அட பூமி பக்கம் மாறி சுத்தப் போகுதா என்ன?" கிண்டலாக கேட்டபடி கால் ஷூவை சுழற்றிவிட்டு சாக்ஸை உறுவினான்.

"கொஞ்ச நாட்களாகவே உங்களை பார்க்கவே முடியவில்லை.அதனால்தான் இப்போது பேசலாம் என்று வந்தேன்"

" அடுத்த படம் ஆரம்பித்துவிட்டேன் கிருஷ்ணா.நிறைய வேலைகள் இருக்கிறது. இங்கே சித்தி வீட்டில் வந்து தங்கியதால் நிறைய டென்ஷன் குறைந்து மனம் ரிலாக்ஸாக இருக்கிறது. அடுத்த படத்திற்காக நிறைய புதுப்புது ஐடியாக்கள் வந்திருக்கிறது. ஆறே மாதத்தில் படத்தை முடிக்க திட்டமிட்டிருக்கிறேன்" படபடவென்று பேசியவனின் வாயை கூர்ந்து பார்த்தாள்.

அவன் சட்டென எழுந்து அவள் அருகே வந்து முகத்திற்கு நேராக ஊதினான்."குடிக்கவில்லை போதுமா?"

ஒருவேளை குடித்துவிட்டு வந்திருந்தானானால் போதையில் இருப்பவனிடம் எப்படி பேசுவது என்ற எண்ணம் அவளுக்கு இருந்தது. ஆனால் அதனை யோசித்து அவன் சந்தேகத்தை போக்கியதில் முகம் கன்றினாள்.

"என்ன விஷயம்?" புருவத்தை உயர்த்தி அவன் கேட்ட விதத்தில் லேசாக நிரஞ்சன் ஜாடை தெரிய, தன் தலையில் மானசீகமாக கொட்டிக் கொண்டாள். அண்ணனின் ஜாடை தம்பிக்கும்.இவன் மேனரிசத்தை பின்பற்றும் ஹீரோவிடமும் அதே ஜாடை. ஆக எல்லோருக்கும் ஆதி மூலம் இதோ இந்த அஸ்வத்தாமன்தான்.

லேசாக தொண்டையை செருமிக் கொண்டு "உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்" என்றாள். உள்ளே வா என்பதாக அவன் கை ஜாடை காட்ட தயக்கத்துடன் மெல்ல அறைக்குள் நுழைந்தாள்.

"பயப்படாதே கூட உட்கார்ந்து தண்ணியடிக்கெல்லாம் கூப்பிட மாட்டேன்" திக்கிட்டு அவனைப் பார்த்தாள். "ஏனென்றால்..." அவன் சஸ்பென்ஸ் கொடுத்து நிறுத்த, ஆவலுடன் அவனைப் பார்த்தாள்.

" நீ அப்படிப்பட்ட பெண் இல்லை... மிகவும் சுத்தமானவள்...உத்தமி... உன்னை எனக்கு தெரியும்" இந்த ரீதியில் அவனுடைய பதிலை எதிர்பார்த்து காத்திருக்க,பெரும் குறையோடு ஒலித்தது அவன் குரல்.

" நீதான் ஓயின் கூட குடிக்க மாட்டேன் என்கிறாயே! போர்ஸ் பண்ணுவதும் எனக்கு பிடிக்காது! சரி விடு எனக்கு கம்பெனிக்கு வேறு ஆள் இருக்கிறது. ஆனால் என்றாவது கொஞ்சமாக டேஸ்ட் பண்ணியாவது பார்க்கலாம் என்ற ஐடியா வந்தால் முதலில் என்னிடம்தான் சொல்ல வேண்டும் கிருஷ்ணா. நானே உனக்கு பக்கத்திலிருந்து மெத்தட் சொல்லித் தந்து ஹெல்ப் பண்ணுவேன்" என்று முடித்தான்.

கிருஷ்ணத்துளசிக்கு வந்த ஆத்திரத்திற்கு போடா குடிகாரப்பயலே என்று வைது விட்டு அறைக்குள் ஓடி பூட்டிக்கொள்ள தோன்றியது.ஆனால் பல்லை கடித்தை அடக்கிக் கொண்டு அவனை முறைத்தபடி நின்றாள்.

" அட இன்னமும் இங்கேயே நின்று கொண்டிருக்கிறாயா?

அப்போ நிஜமாகவே என்னிடம் ஏதோ பேச வேண்டும் போல, அங்கே உட்கார்ந்து சொல் கிருஷ்ணா" எதிர் சோபாவை காட்டினான்.

"நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளக் கூடாது?" நேரடியாக விஷயத்திற்கே வந்தாள்.

" என்ன...?"

" வந்து உங்கள் தம்பி... நிரஞ்சன் சார்... ரொம்ப வருத்தப்பட்டார். திருமணம் செய்து கொண்டால் அம்மா அப்பா குடும்பம் என்று ஒன்றாக வாழ ஆரம்பித்து விடலாம் தானே?"

அவன் சுற்றும் முற்றும் தலையை உடலை திருப்பி எதையோ தேட, கிருஷ்ணதுளசி திரு திருவென விழித்தபடி பார்த்திருந்தாள்.

"என்றிலிருந்து புரோக்கர் வேலை பார்க்க ஆரம்பித்தாய்? எவ்வளவு தைரியமிருந்தால் எனக்கே பெண்பார்த்துக் கொண்டு வந்திருப்பாய்? உன்னை..." கைக்கு எதுவும் அகப்படாமல் போக, சற்று முன் அவன் கழட்டி வைத்த ஷூவில் ஒன்றை கையில் எடுத்தான்.

அவளை அடிப்பதற்கு தோதாக உயர்த்தியபடி "ஏய் ஓடிடுடி, இல்ல மூஞ்சி மொகரை பார்க்காம இதாலேயே அடிப்பேன்" ஷூவை அசைத்தான்.

"என்னது டீயா?" இடுப்பில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு கத்தினாள்.
"ஆமாண்டி நீலி! இனி ஒரு தடவை இது மாதிரி உளறிட்டு என் முன்னால் வந்து நின்றாயானால் நிச்சயம் செருப்படிதான்" வேகத்துடன் அவன் எழுந்து வர,பிறகும் ஏன் அவள் அங்கேயே நிற்கப் போகிறாள்!

அறைக்கு வெளியே நின்றபடி இரு கைகளையும் உயர்த்தி அவனுக்கு சாபமிட்டாள். "மனுசனாடா நீ ? உன்னையெல்லாம் எவடா கல்யாணம் பண்ணிக்குவா? இந்த காலத்துல, ஒரு மனுசன கல்யாணம் பண்ணிக்கிட்டு வாழ்வதே பெரிய விஷயமா இருக்கு. உன்ன மாதிரி அரக்கன் கூடெல்லாம் குடும்ப நடத்த முடியுமா? நீயெல்லாம் கம்பூன்ற வரைக்கும் கல்யாணம் ஆகாம இப்படியேதான் திரிஞ்சிட்டு இருக்க...."

"அடிங்ங்ங...." அஸ்வத் குறி வைத்து சுழற்றி விட்ட ஷூ இலக்கு தவறாமல் இவளை தொட வர, சபதத்தின் கடைசி வார்த்தையை முடிக்காமல் வேகமாக தன் அறைக்குள் நுழைந்து கதவை பூட்டிக் கொண்டாள்.

மறுநாள் ஆபீஸில் அவளை ஆவலாக பார்த்த நிரஞ்சனிடம் எரிந்து விழுந்தாள். "கல்யாண பேச்சு பேசினால் உன் அண்ணன் செருப்பை தூக்கிட்டு என்னை அடிக்க வருகிறான். என்ன குடும்பம் உங்கள் குடும்பம்...?"

நிரஞ்சன் திக்கென விழித்து தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் "போச்சு இனிமேல் என்ன செய்வேன்?"

"என்னவோ பண்ணிக்கோங்க, இன்னொரு தடவை என்னை மட்டும் அந்த ராட்சசன் கிட்ட பேச அனுப்பாதீங்க"

கிருஷ்ணதுளசி தெளிவாக பேசிய பிறகும் நிரஞ்சன் அவளை தேடி வீட்டிற்கே வந்து நின்றான்."நீங்கள் பேசவில்லை என்றாலும் ஏதாவது ஐடியாவாது கொடுங்களேன் துளசி"

"அப்படி என்ன உங்களுக்கு அண்ணன் திருமணத்தில் ஆர்வம்?"

" அது...வந்து...இதனால் எங்கள் குடும்பம் ஒன்று சேருமே"

"அப்படி என்றால் ஒன்று செய்யுங்கள். முதலில் உங்கள் அம்மாவை அப்பாவையும் கூட்டி வந்து சுஜாதா ஆன்ட்டியிடம் பேசுங்கள்.எனக்கு தெரிந்து உங்கள் அண்ணனின் வீக் பாயிண்ட ஆன்ட்டிதான்.அவரை சமாதானப்படுத்தி விட்டீர்களானால் மற்ற எல்லாம் சரியாக நடக்கும்"

நிரஞ்சன் மறுநாளே அவன் அம்மா காஞ்சனாவை அழைத்துக் கொண்டு வந்து விட்டான். அக்காவும் தங்கையும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி சில நிமிடங்கள் நின்றிருக்க "நாங்கள் வேண்டுமானால் வெளியே போய் விடவா?" என்றான் நிரஞ்சன் கிண்டலாக.

"சொல்லிக் கொண்டே நிற்காமல் போயேன்டா" காஞ்சனா சொல்ல கிருஷ்ணதுளசியும் நிரஞ்சனும் வெளியே வந்து விட்டனர்.

"இன்னமும் அப்படியே அம்மன் போல் அதே அழகுடன் இருக்கிறாய் அக்கா" சுஜாதா காஞ்சனாவின் கைகளை பற்றிக்கொள்ள காஞ்சனா ஆச்சரியமாக தங்கையை அளந்தார்.

" என்ன சுஜா இப்படி மாறிவிட்டாய்? சுடிதார் பாப் பட்... எப்படி இவ்வளவு மாடர்னாக மாறினாய்?"

காஞ்சனா கழுத்தில் கொத்து நகைகளும் காது, மூக்கில் மின்னும் வைரங்களுமாக இருந்தார்.சுஜாதா லாங் ஸ்கர்ட் டாப்பும்,பாட்டியாலா பேன்டும்,கழுத்தில் மெல்லிய சங்கிலி,காதுகளில் பொட்டாக தோடுமாக இருந்தார்.

குனிந்து தன் தோற்றத்தை பார்த்துக்கொண்ட சுஜாதா பெருமையாக புன்னகைத்தார். "இதெல்லாம் அச்சுவால்தான். அவன் இங்கே வந்து தங்கிய இந்த மூன்று மாதத்தில் என்னை இப்படி மாற்றியிருக்கிறான். நான் யோகா கிளாஸ் போகிறேன், ஸ்விம்மிங் போகிறேன் செஸ் கூட கற்றுக் கொள்கிறேன். அடுத்த வாரம் பியானோ கிளாஸ் சேர்த்து விடுவதாக சொல்லியிருக்கிறான்.போன மாதம் எனக்கு ஒரு சின்ன ஆக்சிடென்ட்.அந்த கால் வலி கூட ஒரே வாரத்தில் போய்விட்டது. வீட்டிற்குள்ளேயே இருக்கக் கூடாது வெளியே போ என்று என்னை அச்சுவும்,கிருஷ்ணாவும் விரட்டிக் கொண்டே இருப்பார்கள். இப்போதெல்லாம் எனக்கு இடுப்பு வலி, மூட்டு வலில்லாம் வருவதே கிடையாது தெரியுமா!"

காஞ்சனாவின் கண்கள் பனித்தது. இவற்றையெல்லாம் அஸ்வத் அவருக்கும் சொல்லியிருக்கிறான். ஆனால் சிறுபிள்ளை பேச்சென்று அவற்றை நிராகரித்து பரம்பரை கௌரவம் என்று பட்டையும் வைரத்தையும் சுமந்து கொண்டு கழுத்து வலி முதுகு வலி என்று ஓய்ந்து போய் கிடக்கிறார்.

"சுஜா நீ ஏன் இங்கே தனியாக இருக்க வேண்டும்? எங்களோடு வந்துவிடேன்"

சுஜாதா சிரித்தார் "உங்கள் வீட்டில் இருந்து பியானோ கிளாஸ் போக முடியுமா அக்கா?"

காஞ்சனா வெடித்த விம்மலுடன் தங்கையை கட்டிக்கொண்டு அழுதுவிட்டார்.

13

"எனக்கு ஒண்ணு புரியல, உங்களுக்கு அண்ணன் மேல ஏன் இவ்வளவு அக்கறை?" வெளியே நின்றிருந்தபோது நிரஞ்சனிடம் மெல்ல துருவினாள் கிருஷ்ணதுளசி.

"ஆமாம் அண்ணன் மீது, எங்கள் குடும்பத்தின் மீது எனக்கு எப்போதுமே ரொம்ப அக்கறைதான்" நிரஞ்சன் பெருமையாக அறிவித்துக் கொண்டான்.

"ஓ...உங்கள் அண்ணனுக்கு திருமணம் முடிந்ததும் நல்ல பிள்ளையாக கம்பெனியை அவரிடம் ஒப்படைத்து விட்டு நீங்கள் ஒதுங்கிக் கொள்வீர்கள் அப்படித்தானே?"

நிரஞ்சன் விழித்தான் "அது... வந்து அண்ணன், இந்த ஐடி ஃபீல்டில் இன்ட்ரஸ்ட் இல்லை என்று சொல்லிவிட்டார்"

" சரி நாளைக்கு இன்ட்ரஸ்ட் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்"

"அண்ணன் கொடுத்ததை திரும்ப வாங்கிக் கொள்ள மாட்டார்"

" அவ்வளவு நம்பிக்கை, ஆனால் சார் திருமணம் முடிந்து குடும்பமாக சேர்ந்து விட்டால் உங்கள் அண்ணன் நிச்சயம் தொழிலுக்குள்தான் வருவார் என்று எனக்குத் தோன்றுகிறது"

நிரஞ்சனின் கண்களில் பீதி தெரிந்தது "அப்படியா சொல்கிறீர்கள்?" மண்டையை சொறிந்தான்.

அப்பாடா! குழப்பி விட்டாச்சு! இனி மீன் பிடிக்க வேண்டியதுதான், என்று நினைத்த கிருஷ்ணதுளசி "இப்போது சொல்லுங்கள் சார். உங்கள் அண்ணனின் திருமணத்தின் மீது எதற்காக இவ்வளவு அக்கறை?"

" அது... வந்து அப்பா அண்ணனுக்கு திருமணம் முடிந்த பிறகுதான் என் திருமணத்தைப் பற்றி பேசுவதாக சொல்லிவிட்டார்..."

"அதனால்தான் உங்கள் அண்ணனுக்கு மணம் முடித்து வைக்க துடிக்கிறீர்களாக்கும்? எல்லாம் இதோ இந்த பெண்ணிற்காகத்தானே?" தனது ஃபோனில் இருந்த போட்டோவை காட்டினாள்.

" சிந்துஜா இவள் போட்டோ உங்களிடம் எப்படி...?"

" இங்கே பாருங்களேன், உங்கள் போட்டோ கூட இருக்கிறதே..." போன் ஸ்கிரீனை நகர்த்தி அருகில் இருந்த நிரஞ்சனையும் காட்டினாள்.

நிரஞ்சன் கலவரமானான். "இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?" கொஞ்சம் பயமாக கிருஷ்ணதுளசியை பார்த்தான்.

" எனக்கு எல்லாம் தெரியும். என்னால் முடிந்த ஒரு அட்வைஸ் தருகிறேன்.இந்த காதல் விவகாரத்தை மட்டும் உங்கள் அண்ணன் காதில் போட்டு விடாதீர்கள்.அந்த ஆள் சரியான சகுனி.காதலுக்கு தூது போய் சேர்த்து

வைப்பார் என்றா நினைக்கிறீர்கள்? சிந்துஜாவிடமே போய் உங்களைப் பற்றி பேசி காதலையே கலைத்து விட்டாலும் விட்டுவிடுவார். ரொம்ப டேஞ்சரான ஆள்.ஜாக்கிரதை..."

" அஸ்வத் எதற்காக அப்படி செய்ய வேண்டும்?"

" இந்தக் காதல் இருப்பதால் தானே நீங்கள் அவரை திருமணம் செய்து கொள்ள சொல்லி பிரஷர் கொடுக்கிறீர்கள். அந்த காதலே இல்லாமல் செய்து விட்டால்..." இப்படித்தான் சார் அவருடைய புத்தி குறுக்குவாட்டில் யோசிக்கும்.

நிரஞ்சன் நெற்றிப் பொட்டை பிடித்தபடி அமர்ந்துவிட கிருஷ்ணதுளசியின் மனதிற்குள் நிம்மதி.ம்...ஒரு வழியாக அண்ணன் தம்பியை பிரித்தாயிற்று. அவனுக்கு இவன் கல்யாணம் செய்து வைப்பானாம்... இவனுக்கு அவன் காதலை சேர்த்து வைப்பானாம்...நடுவில் எனக்கு அனுமார் வேலை. அலுவலகத்தில், வீட்டில் என்று என்னை நிம்மதி இல்லாமல் இருக்க வைத்த நீங்கள் இருவரும் எப்படி நிம்மதியாக இருக்கிறீர்கள் என்று பார்க்கிறேன்.சகோதரர்கள் மேல் வஞ்சம் வைத்தாள்.

"அதாவது உன் அச்சுவுக்கு திருமணம் என்றால்தான் நீ வருவாய்.அப்படியா?" கேட்டபடியே வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தார் காஞ்சனா.

"நம் அப்பா இறந்தபோது வந்தேன். பிறகு அம்மா இறந்த போதும் வந்தேன். ஆனால் அங்கே இருக்க பிடிக்காமல் இங்கே வந்து முடங்கிக் கொண்டேன்" சுஜாதாவின் இதழ்களில் ஒரு கசந்த முறுவல்.

காஞ்சனாவின் முகம் சும்பியது. அப்பா இறப்பிற்கு வந்தபோது காஞ்சனாவின் கணவர் நல்லதம்பி சுஜாதாவை வாசல் படி ஏற விடவில்லை. நீ உள்ளே வந்தால் மாமாவின் ஆத்மா சாந்தியடையாது என்று பேசி வெளியே அனுப்பி விட்டார்.அம்மாவின் சாவிற்கு வந்த போது யாரும் காஞ்சனா உட்பட சுஜாதாவிடம் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. திரும்பியும் பார்க்கவில்லை.அஸ்வின் மட்டுமே சுஜாதா அருகிலேயே அமர்ந்திருந்தவன்.

தங்கையின் நினைவுறுத்தலில் காஞ்சனா அழுதுவிட்டார். "என் மனதார நான் உன்னை ஒதுக்கவில்லை சுஜா.உன் அத்தான் அப்படி என்னை நிர்பந்தித்து விட்டார். இத்தனை வருடங்கள் கழித்து

இப்போதுதான் உன் அத்தானை மீறும் தைரியம் எனக்கு வந்திருக்கிறது"

"சரி விடு பழையதை பேச வேண்டாம்" சுஜாதா அக்காவை சமாதானம் செய்ய "அதெப்படி ஆன்ட்டி முடியும்? உங்கள் சொத்துக்களையும் சேர்த்து இத்தனை வருடங்களாக இவர்களும் தானே அனுபவித்து வந்திருக்கிறார்கள்? உங்கள் அத்தானே தப்பு செய்தவராக இருக்கட்டும் .அப்போது அவர் தானே உங்களிடம் பேச வந்திருக்க வேண்டும்"

வீட்டின் வெளிப்புறம் அமைந்த சிறு திண்ணையில் இருந்து சத்தம் வர காஞ்சனா வெடுக்கென திரும்பி பார்த்தார்.கிருஷ்ணதுளசியும் நிரஞ்சனும் அங்கே அமர்ந்திருந்தனர்.

" யார் இந்த பெண்?" காஞ்சனா கேட்க, "நம் கம்பெனி ஸ்டாப் அம்மா" நிரஞ்சன் சொன்னதை கையசைத்து நிறுத்தினார் சுஜாதா.

" இவள் என்னுடைய தோழி. சொந்த பந்தங்கள் எல்லாம் என்னை கைவிட்டு ஒதுக்கி வைத்து விட்ட நிலையில் இவள் தயவால்தான் கடந்த இரண்டு வருடங்களாக நான் பிழைத்திருக்கிறேன். இவளது அறிமுகம் உன் கம்பெனியில் வேலையாள் என்பதல்ல நிரஞ்சா உன் சித்தியின் கம்பேனியன்"

சுஜாதா அழுத்தமாக பேச காஞ்சனா கிருஷ்ணதுளசியை பார்த்து புன்னகைத்தார். "என் தங்கையை நன்றாக கவனித்துக் கொண்டதற்கு ரொம்ப நன்றிமா. சீக்கிரமே எங்க அஸ்வத்துக்கு திருமணம் நடைபெறப் போகிறது .உனக்கும் அழைப்பு அனுப்புகிறோம்.தவறாமல் வந்துவிடு"

"அவள் இல்லாமல் அச்சுவின் திருமணம் நடக்காது அக்கா" சுஜாதா சொல்ல காஞ்சனா அக்காவை கூர்ந்து பார்த்தார்.

"உன்னைப் பார்த்தால் பேரன் பேத்தி எடுத்த பாட்டி மாதிரி தெரியவே இல்லை சுஜா. ரொம்பவும் இளமையாக தெரிகிறாய்" என்று பேச்சை மாற்றினார் காஞ்சனா.

" எல்லாம் என்ன அச்சுவின் வேலை" சுஜாதா பெருமையோடு சொல்ல, "சுடிதார் ஸ்விம்மிங் மட்டும் இல்லை. சித்திக்கு ஓயின் கூட வாங்கி கொடுப்பான்" கிருஷ்ணதுளசி முணுமுணுக்க அருகில் இருந்து கேட்டுவிட்ட நிரஞ்சன் ஒரு மாதிரி விழித்தான்.

" சித்தி ஓயின் சாப்பிடுவார்களா?" என்றான் குறைந்த குரலில்.

"அதோ அந்த மரத்திலிருந்து கள் கூட இறக்கி குடிப்பார்கள்" கிருஷ்ணதுளசி தென்னை மரத்தை காண்பிக்க, நிரஞ்சன் அவசரமாக எழுந்து கொண்டான்.

" நாம் போகலாம்மா"

காஞ்சனா யோசனையுடனம் கிருஷ்ணதுளசியை திரும்பி பார்த்தபடியே போனார்.

"இதென்ன ஆன்ட்டி எய்தவர் இல்லாமல் அம்பு மட்டும் வந்து சமாதானம் பேசுகிறது"

"அதுதான் நீ எய்தவரை வரச் சொல்லி விட்டாயே! அவரே வந்தாலும் வரலாம்" சுஜாதா புன்னகைத்தார்.அவர் சொன்னது போலத்தான் நடந்தது .

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை கிருஷ்ணதுளசி தாமதமாக எழுந்து நிதானமாக தலை குளித்து முடியை கோதி காய வைத்துக் கொண்டிருந்தாள். பாதி ராத்திரிக்கு மேல்தான் அஸ்வத் வீடு திரும்பியிருந்தான். அவன் அறைக்கதவு பூட்டப்பட்டிருக்க தூங்குகிறான் போலும் என அவள் நினைத்துக் கொண்டிருந்தபோது, அறைக்கதவு தட்டப்பட்டது.

'அரக்கன்' மனதிற்குள் நினைத்தால் கூட போதும்,உடனே வந்து நிற்பான்.முணுமுணுத்தபடி போய் கதவை திறக்க எதிரே இன்னமும் முழுவதும் தூக்கம் கலையாத நிலையில் தாடியும் தலைமுடியும் பரட்டையாக கிடக்க நலுங்கிய தோற்றத்துடன் தளர்வாய் நின்றிருந்தான் அஸ்வத்.

அன்று சுஜாதாவிடம் தாடியை குறைக்கச் சொல்லுங்கள் என்று இவள் சொன்ன நாளிலிருந்து வீம்பிற்காகவே இன்னமும் அதிகமாக வளர்த்து வழிய விட்டுக் கொண்டு திரிகிறான்.

"கிருஷ்ணா! எனக்கு உன்னுடைய ரூமிற்குள் ஒரு மணி நேரம் மட்டும் தங்கிக்கொள்ள இடம் தாயேன்" கெஞ்சுதலாய் கேட்டான்.

புரியாமல் பார்த்தாள்."எதற்கு?"

"ப்ளீஸ், கீழே யார் யாரோ வந்திருக்கிறார்கள். எனக்கு அவர்களை சந்திக்க பிரியமில்லை. இங்கே வந்து கேட்டால் நான் இல்லை. எங்கேயோ போய் விட்டேன் என்று சொல்லிவிடு" என்றவன் அவள் தோள் தொட்டு

தள்ளி விட்டு அறைக்குள் நுழைந்து கொண்டான்.

கிருஷ்ணதுளசி புரியாமல் பாதி படிகளில் இறங்கி மெல்ல வீட்டிற்குள் எட்டிப் பார்க்க, அங்கே காஞ்சனாவும் நல்லதம்பியும் அமர்ந்திருந்தனர்.

ஓ.. அம்மா அப்பாவை சந்திக்கத்தான் சாருக்கு இவ்வளவு தயக்கமா?

இதோ இங்கேதான் ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று இவர்களிடம் போட்டுக் கொடுக்கலாமா? யோசிக்க ஆரம்பித்தாள்.

"உன் பங்கு சொத்துக்களை அப்படியே வைத்திருக்கிறேன்மா. நீ வந்து ஒரு கையெழுத்து போட்டால் எல்லாம் உன் பெயருக்கே மாற்றி விடலாம்" நல்லதம்பி சுஜாதாவிடம் குழைவாக பேசிக் கொண்டிருக்க, கிருஷ்ணதுளசிக்கு கோபம் வந்தது.

இங்கே இவன் அப்பா சொத்துக்களை ஏலம் விட்டுக் கொண்டிருக்கிறார்... இவனானால், வேகமாக மாறி ஏறி வந்தவளின் ஆத்திரம் இன்னமும் அதிகமானது. அங்கே அவளுடைய அறைக்குள் பெட்டில் குப்புறப்படுத்து உறக்கத்தை தொடர்ந்திருந்தான் அஸ்வத்.கட்டில் மேல் கிடந்த அவளது ஷாலை போர்வையாக மேலே மூடிக் கொண்டிருந்தான்.

இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் இவனுக்கு எப்படி தூக்கம் வருகிறது? பெட்டில் இருந்த தலையணையை எடுத்து அவன் முதுகில் மொத்தினாள்."கும்பகர்ணனா நீ ? எழுந்திரு"

"ஏய் கிருஷ்ணா! சும்மாயிரு, நேற்று ஓரே ஒரு மணி நேரம்தான் தூங்கினேன். தூக்கம் வருகிறது." குப்புறபடுத்தபடியே கத்தியவன், கையை பின்னால் நீட்டி தலையணையை பிடித்து இழுத்தான். இறுக்கமாக தலையணையை பற்றியிருந்தவள் அப்படியே அவன் மேல் வந்து விழுந்தாள்.

"குட், அப்படியே இரு. நான் தூங்குறேன்" மேலே வந்து விழுந்தவளை சுகமாய் சுமந்தபடி அவன் தூக்கத்தை தொடர ஆரம்பிக்க, "சை...சை..." என்றபடி எழுந்தவள் ஸ்தம்பித்தாள்.அறை வாசலில் நல்லதம்பியும் காஞ்சனாவும் நின்றிருந்தனர்.

"வ... வ... வந்து" அவள் திக்கி கொண்டிருக்கும் போதே அவர்கள் வெளியே போய்விட்டனர்.

"ஏய் என்ன ஆச்சு?" அஸ்வத் கேட்க, "உ...உங்க அ...ம்மா... அ...அப்பா..." திணறினாள்.

வேகமாக எழுந்து அமர்ந்தவன் "பாத்துட்டாங்களா?" என்றான்.

குரல் வெளியே வராமல் தலையை மட்டும் அசைத்தாள். "ரொம்ப நல்லது. எனக்கு ஒரு வேலை மிச்சம். நீ கொஞ்சம் எந்திரிச்சு அப்படி சோபாவில் உட்கார்ந்தால் நான் நன்றாக தூங்கி விழிப்பேன்.நிறைய வேலை இருக்கிறது" மீண்டும் படுத்துக் கொண்டான்.

" சை..நீயெல்லாம் ஒரு மனிதன்..." அறையை விட்டு வெளியே வந்து ஹால் ஷோபாவில் உட்கார்ந்து கொண்டாள். அவள் உடல் முழுவதும் அஸ்வத்தின் ஸ்பரிசம் கதகதப்பாய் நிரம்பியிருந்தது.

அடுத்து எதையும் நினைக்க கூட பயந்து ,இன்னமும் சிலிர்த்த தன் உடலை கடிந்தபடி யோசனையுடன் அமர்ந்திருந்தாள்.

இரண்டு மணி நேரங்கள் அஸ்வத் நன்றாக தூங்கி எழுந்து வந்து பார்த்தபோது கிருஷ்ணதுளசி அங்கே இல்லை.சென்னையிலேயே அவள் இல்லை என்பது விசாரித்ததில் தெரிய வந்தது.

14

இறுக்கமான முகத்துடன் அருகில் அமர்ந்து வந்த அஸ்வத்தை பயத்துடன் பார்த்தான் நிரஞ்சன்.

"அஸ்வ.. அண்ணா..." இரண்டு மூன்று முறை அழைத்தும் அஸ்வத் திரும்பாமல் போக, இடது கையால் அவன் கைப்பற்றி அழைத்தான். "அண்ணா"

"என்னையா கூப்பிட்டாய்?"

"ஆமாம். வந்து... இப்போது நாம் அங்கே போகத்தான் வேண்டுமா?"

"அதற்குத்தான் லொகேஷன் அனுப்பியிருக்கிறாள்..."

நிரஞ்சனின் முகம் கலவரமானது. "எனக்கு திருமணம் நடக்கப்போகிறது. நீங்கள் அவசியம் வர வேண்டும் சார்" என்று அவனுக்கு லொகேஷன் அனுப்பி இருந்தாள் கிருஷ்ணதுளசி.

போகலாம் வா என்று கையோடு இழுத்துக் கொண்டு

வந்திருக்கிறான் அஸ்வத்.

"எம்.டி என்ற ஃபார்மாலிட்டிக்காக எனக்கு சொல்லி இருக்கிறாள் அண்ணா.உடனே எப்படி போய் நிற்பது?"

"பார்மாலிட்டிக்கு சொல்பவள் லொகேஷனெல்லாம் அனுப்புவாளா?"

நிரஞ்சனுக்கும் அந்த சந்தேகம் இருந்தது. அவன் கம்பெனியில் வேலை செய்யும் ஒரு ஸ்டாப்பின் திருமணத்திற்கு அவன் வந்து நிற்பான் என்று எப்படி எதிர்பார்க்கிறாள், என்றுதான் நினைத்தான். ஆனாலும் இதோ அடித்து பிடித்து அவள் ஊரை நோக்கி போய்க் கொண்டிருக்கிறான்.

"அண்ணா நீங்களும் துளசியும் லவ் பண்ணுகிறீர்களா?" திணறி கேட்டான்.

" ஏய் என்னடா அண்ணா அண்ணான்னு... யாரையோ கூப்பிடுவது போல் தெரிகிறது. எப்போதும் போல் அஸ்வத்னே கூப்பிடு"

" இல்லைண்ணா நீங்களம் பெரியவராம் மரியாதையாக அண்ணா என்றுதான் கூப்பிட வேண்டுமாம் துளசி சொல்லியிருக்கிறாள்"

அஸ்வத்தின் முகத்தில் ஒரு முறுவல் மலர்ந்தது.

"அட..டா உன்னையும் வைத்து செய்கிறாள் போலவே..." காரின் பின் சீட்டிலிருந்த சுஜாதா சிரித்தார்.

ம்க்குமம் சித்தி பெயரில் கம்பெனி. சி.இ.ஓ அஸ்வத்.உன்னை விட கிருஷ்ணா ரொம்ப நன்றாக ஓர்க் பண்ணுகிறாளே என்று இரண்டு பேரும் என்னை மறைமுகமாக மிரட்டும் போது, என் இடத்தை தக்க வைத்துக் கொள்ள அவளுக்கும் தலையாட்டத்தானே வேண்டியிருக்கிறது.அத்தோடு என் சிந்துஜா வேறு இருக்கிறாள்.இந்த துளசி உதவி செய்யாவிட்டால் என் காதலும் டமால் போலல்லவா தெரிகிறது...தனக்குள் பேசிக் கொண்டான் நிரஞ்சன்.
"அங்கே போனதும் எதற்கும் கிருஷ்ணா உன்னை காதலிக்கிறாளா என்று உறுதிப்படுத்திக் கொள் அச்சு" சுஜாதா சொல்ல நிரஞ்சனுக்கு தூக்கி வாரிப் போட்டது.

" அண்ணா... அஸ்வத்... அண்ணா துளசி உன்னை காதலிக்கவில்லையா?"

"ம்...எனக்கு சரியாக தெரியவில்லை" அஸ்வத் சொல்ல நிரஞ்சன் "ஐயோ" என்று கத்தினான்.

" அண்ணா துளசியின் ஊர் சரியான பட்டிக்காடு. அவள் சொந்தக்காரங்க எல்லாம் கடா மீசையும் அரிவாளுமாக திரிபவர்கள். உங்களை காதலிக்காத பெண்ணின் திருமணத்தை நிறுத்த வந்திருக்கிறோம் என்று தெரிந்தால் அங்கேயே நம்மை வெட்டி புதைத்து விடுவார்கள். எதுவானாலும் கொஞ்சம் யோசித்து செய்யுங்கள் அண்ணா.ப்ளீஸ்..."

"இந்த இடத்தில் தான் நீ எனக்கு ஹெல்ப் பண்ண போகிறாய் தம்பி, கிருஷ்ணாவின் காதலை தெரிந்து கொண்டு நீ தான் என்னிடம் வந்து சொல்ல வேண்டும்"

நிரஞ்சனின் கண் முன் அரிவாளை சுழட்டியபடி ஒரு முரட்டு உருவம் நெருங்கியது. "நான் இல்லை அண்ணா, சித்தியை அனுப்புங்கள்"

"டேய் சித்தியையும் என்னையும் உள்ளேயே விட மாட்டார்கள்டா. அவளுடைய கம்பெனி பாஸ் என்ற முறையில் உன்னால் மட்டும்தான் உள்ளே போக முடியும்.நீதான் போகப் போகிறாய்"

பலிக்கு இழுத்துச் செல்லப்படும் ஆட்டுக் குட்டி மனோபாவத்துடன் நடுங்கிய கரங்களுடன் கார் ஓட்டினான் நிரஞ்சன்.

—----------

அவர்கள் வெளியேறிய சிறிது நேரத்திலேயே சுஜாதாவின் வீட்டின் முன் வந்து நின்ற காரில் இருந்து இறங்கிய டிரைவர்,பக்கத்தில் அவர்களை விசாரித்தான்.

"அவர்கள் கிளம்பி அரை மணி நேரம் ஆயிற்றாம்" காருக்குள் அமர்ந்திருந்த பெண்ணிடம் தகவல் சொன்னான்.

"டைரக்டர் சார் அரை மணி நேரத்தில் உங்களை நெருங்கி விடுவேன்" என்று விட்டு காரை விரட்ட டிரைவருக்கு உத்தரவிட்டாள். அவள் அஸ்வத்தாமனின் காதல் சகுனி திரைப்படத்தின் ஹீரோயின் மோனிஷா.

—----------

"என்ன துளசி இது அநியாயம்? அம்மாவிற்கு உடம்பு சரியில்லை என்று உன்னை இங்கே வரவழைத்து இப்படி திருமண ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்களே? இது எப்படி சாத்தியம்?"

கிருஷ்ணதுளசி கண்ணாடி முன் நின்று தனது காதோர கூந்தலை சரி செய்து கொண்டிருந்தாள். "எனக்குத்தான்

இரண்டு வருடங்களுக்கு முன்பே என்னுடைய முறை மாப்பிள்ளையுடன் திருமணம் பேசி வைத்து விட்டார்களே, அதனால் இது உடனே சாத்தியமாயிற்று" என்றாள் நிதானமாக.

"என்ன உனக்கு திருமணம் நிச்சயம் ஆகிவிட்டதா?"

"ஆமாம்! அந்த முறை மாமனுக்கு பயந்துதான் சென்னையில் வேலை தேடிக் கொண்டு நான் அங்கே ஓடி வந்தது. மூன்று வருடங்கள் வேலை, பிறகு திருமணம் என்ற கண்டிசனுடன்தான் என்னை வீட்டில் சென்னைக்கு அனுப்பி வைத்தனர்"

"பிறகு இப்போது ஏன் திடீரென்று திருமணம் செய்கின்றனர்?"

" ஏனென்றால் என்னுடைய காதல் விவகாரம் இவர்களுக்கு தெரிந்து விட்டது. யாரோ ஒரு புண்ணியவான் போட்டுக் கொடுத்து விட்டார் அதனால் இந்த அதிரடி திருமணம்.

" என்ன நீ காதலித்தாயா?" இருவரும் வாயை பிளந்தனர்.

"ஏன் நான் காதலிக்க கூடாதா?"

"யாரை?"

"ம்...உங்கள் ஃபேவரைட் டைரக்டர் காதல் சகுனி அஸ்வத்தாமனை" சொல்லிவிட்டு கிருஷ்ணதுளசி தோளில் துண்டை எடுத்து போட்டுக்கொண்டு பாத்ரூமிற்குள் நுழைந்து கொண்டாள்.

"என்னடி இவள் உளறுகிறாள்?" தோழிகள் இருவரும் தலையை பிய்த்துக் கொண்டனர்.

—----------

"ஏய் செண்பகம் உன் மகள் கூட யார் இருக்கிறார்கள்? கவனித்தாயா?" மாடசாமி மீசையை முறுக்கியபடி கேட்டார்..

" டவுன்ல இருந்து அவள் பிரெண்ட்ஸ் வந்து இருக்காங்கல்லங்க, அவங்க கூடத் தான் ரூமுக்குள்ள பேசிக்கிட்டு இருக்கிறா"

" என்ன செய்றா? யார் கூட பேசுறான்னு அவள் மேலே முழு கவனம் வச்சுட்டே இரு, நீ ரொம்ப சொன்னன்னுதான் அவள் ஆபீஸில் வேலை செய்றவுகளுக்கு மட்டும் கல்யாண தகவல் கொடுக்க

சம்மதிச்சேன். அங்கே அவ வீடெடுத்து தங்கி இருந்தாளே, அங்கருந்து யாரும் இங்கே வந்துடக் கூடாது. ஞாபகத்தில் வச்சுக்கோ..." அசரீரியாய் முழங்கிவிட்டு "இந்த வேலனை எங்கேடா?" கேட்டபடி நடந்தார் மாடசாமி.

"எனணண்ணா இன்னமும் பெயர் சொல்லி கூப்பிடுகிறீர்கள்? நேற்று வரை அவன் என் மகன், இன்றிலிருந்து உங்கள் மருமகன். மாப்பிள்ளையை மரியாதையாக கூப்பிட வேண்டுமில்லையா?" என்றபடி வந்தாள் நவநீதம் மாடசாமியின் தங்கை.

" சரி... சரி பொண்ணு கழுத்துல தாலி ஏறட்டும் மரியாதை தானா வரும். உன் மகன மாப்பிள்ளை பொறுப்போடு இன்னைக்காவது ஒரு இடத்தில் இருக்கச் சொல்லு"

"தென்னந்தோப்புல லோடு ஏறுதுணா, அத ஒரு பார்வ பாத்துட்டு வரேன்னுட்டு போனான். இப்ப வந்துடுவான்"

—----------

குண்டும் குழியமாக தூக்கி தூக்கி போட்ட ரோடு நல்லதம்பியின் முகத்தை சுளிக்க வைத்தது. "எவ்வளவு மோசமான ரோடு, இதையெல்லாம் தாண்டி இப்போது கண்டிப்பாக உன் குலதெய்வம் கோவிலுக்கு போய்த்தான் ஆகனுமா?" காஞ்சனாவிடம் எரிச்சல் பட்டார்.

" நம்ம அஸ்வத்துக்காகத்தாங்க வேண்டுதல் வைத்திருக்கிறேன். இந்த வேண்டுதலை முடித்து விட்டால் நிச்சயம் அஸ்வத் நம்மிடம் திரும்ப வந்து விடுவான்"

"அஸ்வத் மட்டும் அல்ல, உன் தங்கை சுஜாதாவும் வரவேண்டும். அதற்கும் சேர்த்து வேண்டிக் கொள்"

உங்கள் தொழிலுக்கு இவர்கள் இருவரின் கையெழுத்தும் வேண்டியிருக்கிறது,அதற்காகத்தான் நீங்கள் இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்கிறீர்கள் என்று எனக்கு தெரியும். எல்லாவற்றையும்
மாலையம்மன் நல்லபடியாக நடத்திக் கொடுப்பாள் என்ற நம்பிக்கையோடு தான் இதில் இறங்கி இருக்கிறேன், மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் காஞ்சனா.

—----------

"நிரஞ் நீ இறங்கி போய் கிருஷ்ணாவைப் பார்த்து பேசிவிட்டு வா, காரை இந்த மரத்திற்கு பின்னால் மறைவாக நிறுத்திவிடு"

"அண்ணா என்னை உள்ளே விடுவார்களா?" குரல் நடுங்க கேட்டான் நிரஞ்சன்.

" அவள் கம்பெனி முதலாளி என்று சொல். திருமணத்திற்கு வந்திருப்பதாக சொல். உள்ளே விடுவார்கள்"

" அட என்னடா இப்படி பயப்படுகிறாய்? உன் இடத்தில் நான் இருந்தால் இந்நேரம் உள்ளே போய் கிருஷ்ணாவை தூக்கிக் கொண்டே வந்திருப்பேன்" சுஜாதா சொல்ல, வயதுக்கேற்ற பேச்சா பேசுகிறாய் சரியான வில்லி நீ,என்று அவரை முறைத்துக் கொண்டே கீழிறங்கி கோவிலை நோக்கி நடக்கத் துவங்கினான் நிரஞ்சன்.

—----------

"டிரைவர் அண்ணா அந்த தோப்பில் ஆட்கள் தெரிகிறார்கள். அங்கே விசாரியுங்கள்" மோனிஷா சொல்ல டிரைவர் காரை நிறுத்தி இறங்கி போனார்.

தோப்பிற்குள் வேலையாட்களுக்கு ஏதோ வேலை சொன்னபடி முதுகு காட்டி நின்றிருந்தவனை பார்த்ததும் மோனிஷா காரிலிருந்து இறங்கினாள். "ஹலோ சார் எனக்கு ஒரு அட்ரஸ் வேண்டுமே"

திரும்பியவன் மோனிஷாவை பார்த்ததும் கண்கள் தெறித்து விடுகிறார் போல் விழித்தான். "நீ...நீ...நீங்கள்"

" நான் மோனிஷா சார். இங்கே மாலையம்மன் கோவிலில் ஒரு திருமணத்திற்கு வந்தேன்.உங்கள் பெயர் என்ன சார்?"

"என் பெயர் வேலன். நீங்களா் காதல் சகுனி..."

" அதே தான் சார். அந்தப் பட ஹீரோயின்தான்" மோனிஷா சொல்ல வேலன் பிரமிப்பில் விழுந்தான்.
"சார் நீங்கள் ரொம்பவும் ஹேன்ட்ஸம்மாக இருக்கிறீர்கள். உங்களால் எனக்கு ஒரு உதவியாக வேண்டுமே" இனிமையான குரலில் மிழற்றினாள் மோனிஷா.

15

"வணக்கம் சார். நான் நிரஞ்சன். உங்கள் மகள் கிருஷ்ணதுளசியோட கம்பெனி எம்.டி. அவங்களைப் பார்த்து வாழ்த்து சொல்ல வேண்டும். எங்கே இருக்கிறார்கள்?"

மீசையை முறுக்கியபடி ஏற இறங்க நிரஞ்சனைப் பார்த்த மாடசாமி "அதோ அந்த கோவிலுக்கு பின்னாடி சின்ன மண்டபம் இருக்கு. அங்க இருக்கிறா. போய் பார்த்து பேசிட்டு சட்டுனு வாங்க. கல்யாணம் முடிகிற வரைக்கும்

இருந்து சாப்புட்டுத்தான் போகணும்"நிரஞ்சன் மண்டபத்தை நோக்கி நடந்தான்.

" என்னடி ஏதேதோ உளறிக் கொண்டிருக்கிறாய்? அஸ்வத்தாமனை நீ காதலிக்கிறாயா?"

" நான் இல்லை. அவர் தான் என்னை காதலிக்கிறார்"

நிரஞ்சன் இந்த பேச்சில் திக்கித்து வெளியே நின்றான்.

"அவரா? அவரை நீ எப்போது பார்த்தாய்? எப்படி உன்னை அவர் பார்த்தார்? எப்படி காதலித்தார்?"
பிரியாவும் ரஞ்சனியும் மாறி மாறி கேள்விகளால் துளைத்தனர்.

"நான்கு மாதங்களாக சுஜாதா ஆன்ட்டியின் வீட்டில் நான் தங்கியிருக்கும் அறைக்கு எதிரேதான் அவரும் தங்கி இருக்கிறார்"

"அடிப்பாவி எங்களிடம் ஒரு வார்த்தை சொன்னாயா? அவரிடம் ஒரு ஆட்டோகிராபாவது வாங்கியிருப்போமே! ஏன்டி உண்மையிலேயே அவர் உன்னை காதலிக்கிறாரா?"

" அப்படித்தான் நினைக்கிறேன். இதோ என் கல்யாண விஷயத்தை கூட அவருக்கு தெரியப்படுத்தி விட்டுத்தான் வந்தேன். அநேகமாக இந்நேரத்திற்கு அவர் இங்கே செவல்பட்டிக்குள்தான் இருக்க வேண்டும்"

" ஏய் எனக்கு புரியவில்லை. அவர்தான் உன்னை காதலிக்கிறார்... உனக்கு உன் முறை மாமாவோடு திருமணம் நடக்கப்போகிறது. உனக்கு முன்பே உன் மாமாவை பிடிக்காது... இதில் எங்கேயோ எதுவோ மிஸ்ஸாகிறதே" பிரியா மண்டையை சொறிந்த போது...

" இந்த துளசியும் அந்த அஸ்வத்தாமனை காதலிப்பதாக நினைத்துப் பாருங்கள். எல்லாம் சரியாக வரும்" என்றபடி உள்ளே வந்தான் நிரஞ்சன்.

அடித்து பிடித்த எழுந்தனர் இரு பெண்களும். "சார் நீங்க எப்படி ...?"

"நானும் கல்யாணத்திற்குதான்மா வந்தேன்"

" உங்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தாளா? என்னடியிது உனக்கு பிடிக்காத திருமணத்திற்கு எல்லோருக்கும் அழைப்பு கொடுப்பாயா?"

"இவர் இல்லாமல் என் கல்யாணம் எப்படியடி நடக்கும்?"

"இவர் எதற்கு முக்கியம்?"

" ஏனென்றால் என்னுடைய அண்ணன்தான் கல்யாண மாப்பிள்ளை.இந்த முறைமாமன் திருமணத்தை நிறுத்த போவது நான்தான். பிறகு நான் முக்கியம் இல்லையா?"நிரஞ்சன் சொல்ல...

" காட் இட்" கத்தினாள் ரஞ்சனி. "நம்ம எம்.டி சாரோட அண்ணன் அஸ்வத்தாமன். அஸ்வத்தாமனும் கிருஷ்ணதுளசியும் லவ் பண்ணுகிறார்கள்.லவ்வுக்கு நம்ம சார் ஹெல்ப் பண்ணுகிறார். கரெக்டா சார்?"

" அடடா அறிவாளிம்மா நீ..." நிரஞ்சன் சலிப்பாய் பேச, "என்ன சலிப்பு சார்? இப்போது துளசி கல்யாணத்தை எப்படி முடிக்க போகிறீர்கள்?" அதட்டலாய் கேட்டாள் பிரியா.

"அதை ஏன்டி இவரிடம் கேட்கிறாய்? இவர் பாவம் அப்பாவி. பிளான் எல்லாம் டைரக்டர் சார் தான்" கண்கள் சிமிட்டினாளꣳ கிருஷ்ணதுளசி.

—------

"ஏங்க கோவில்ல ஏதோ கல்யாணம் போல,வாங்களேன் நாமளும் நாலு அட்சதையை மணமக்கள் தலையில் தூவி விட்டு வருவோம். நம்முடைய பிள்ளைகளின் கல்யாணமும் நன்றாக நடக்க வேண்டுமல்லவா?" காஞ்சனா சொல்ல நல்லதம்பியும் தலையசைத்து உடன் நடந்தார்.

—----------
"என்ன பெரிய திட்டம்? அப்பா அம்மா இல்லாமல் ஒரு கல்யாணமா ?"நிரஞ்சன் முகத்தை சுளித்தான்.

" அதானே துளசி நீ கூட அடிக்கடி சொல்வாய்தானே? சொந்த பந்தங்கள் எல்லோர் முன்னிலையில்தான் திருமணம் செய்து கொள்வேன் என்று..." பிரியா நினைவுபடுத்த,கிருஷ்ணதுளசியின் முகம் வாடியது.

" ஆமாம் அதுதான் என் ஆசை..." குறைந்த குரலில் சொன்னவளின் விழிகள் அறைக்கு வெளிப்பக்கம் பார்த்ததும் வியப்பில் விரிந்தது. "இதோ என் ஆசைதான் நிறைவேற போகிறதே" உற்சாகமாக கத்தினாள்.

"உங்கள் அம்மாவும் அப்பாவும், அதோ பாருங்கள் கல்யாணத்திற்கு வந்து விட்டார்கள்"

நிரஞ்சன் திரும்பிப் பார்த்து அதிர்ந்தான்."அய்யய்யோ இந்த அஸ்வத் என்ன பிளான்தான் போடுறான்

தெரியலையே" என்றபடி கிருஷ்ணதுளசியை பார்க்க அவள் தோள்களை குலுக்கினாள்.
" எனக்கும் தெரியாது, வெயிட் பண்ணி பார்க்கத்தான் வேண்டும்"

அப்போது "அம்மா, அப்பா, மாமா" என்று கத்தியபடி ஒருவன் மண்டபத்திற்குள் ஓடி வந்தான்.

" ஏய் ஏன்டா கத்துற?உன் அண்ணனை எங்கேடா?" நவநீதம் கேட்க,"அண்ணன் ஓடிப்போயிடுச்சு" என்றான் அவன்.

" என்னடா உளர்ற?"

" அண்ணனோட போன உங்ககிட்ட காட்ட சொல்லுச்சு"

மாடசாமி வேகமாக வந்து போனை பிடுங்கி பார்த்தார். அதில் ஒரு வீடியோ ஓடியது.வேலன் தென்னந்தோப்பு பின்னணியில் நின்றிருந்தான். கை கூப்பினான். "சொந்தக்காரங்க எல்லோரும் என்னை மன்னிச்சிடுங்க, எனக்கு இந்த கல்யாணம் பிடிக்கல. ஏன்னா இதைவிட மிக சிறப்பான வாழ்க்க எனக்கு கிடச்சிருக்கு. நான் கனவிலும் நினைச்சு பார்த்திராத ஒரு பொண்ணை என்ன காதலிக்கிறா, நான் அவளோட போறேன். இந்த கல்யாணத்தை நிறுத்திடுங்க. என்னை யாரும் தேட வேண்டாம்"

மாடசாமி போனை தூக்கி எறிய அது சுக்கல் சுக்கலாக சிதறியது.

" எனக்கு ஒன்றும் தெரியாதுண்ணா நவநீதம் பதற அந்த இடமே கலவர பூமியானது.

"கொஞ்சம் எல்லோரும் அமைதியாக இருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள்" கையில் மைக்கை வைத்துக் கொண்டு கத்தினான் நிரஞ்சன்.

" நான் கிருஷ்ணதுளசியின் கம்பெனி முதலாளி. துளசி மிகவும் நல்ல பெண். அவளுக்கு இந்த மாதிரி ஒரு நிலைமை வரக்கூடாது. என்னுடைய அண்ணனுக்கு அவர்களை திருமணம் முடித்து வைக்க கேட்டுக் கொள்கிறேன்"

அவ்வளவு நேரமாக ஒரு மூலையில் அமர்ந்து நடந்த கலாட்டாக்களை சுவாரசியமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த நல்லதம்பி மேடையில் நிரஞ்சனை பார்க்கவும் "என்ன?" என்று வீறு கொண்டு எழுந்து மேடைக்கு வந்தார்.

அவரின் கைப்பற்றி அழுத்தியவன் "அப்பா, அண்ணன் சித்தி கையெழுத்து இல்லாமல் உங்களால் தொழிலை தொடர்ந்து நடத்த முடியாதுதானே? பேசாமல் இருங்கள். நமக்கு காரியம் முக்கியம். வீரியம் அல்ல"

" அதெப்படிடா நம் கம்பெனியில் வேலை பார்ப்பவளுடன் என் மகனுக்கு திருமணமா?"எகிறினார் நல்லதம்பி.

"பெரிய மனிதனாக இல்லாமல் சின்னத்தனமாக கிருஷ்ணதுளசியை பற்றி அவள் அப்பா அம்மாவிடம் தவறாகச் சொல்லி அவள் திடீர் திருமணத்தை ஏற்பாடு செய்தவர் தானே நீங்கள்? இப்போது என்ன நடந்தாலும் பொறுத்துதான் போக வேண்டும்.ஒழுங்காக இருந்தால் மகனின் திருமணத்தை பார்க்கலாம். இல்லையென்றால் கையை காலை கட்டி ரோட்டில் உருட்டி விடுவோம்" சொன்னது சுஜாதா.

நல்ல தம்பி பயத்துடன் அவளை பார்த்தார். "என்ன அத்தான் பார்க்கிறீர்கள்? இவ்வளவு நாட்களாக என்னுடைய பங்கு சொத்துக்களையும் சேர்த்து அனுபவித்து வந்தீர்கள் தானே? அன்று நானும் என் கணவரும் பிள்ளைகளும் ஒதுங்கி விட்டோம். இப்போது என் அச்சுவின் வாழ்க்கையிலேயே விளையாடுகிறீர்கள். இதனை நான் அனுமதிக்க மாட்டேன். அச்சுவிற்கு கிருஷ்ணாதான்.ஒழுங்காக இந்த திருமணத்தை முடித்து வையுங்கள்" நல்லதம்பி தலை குனிந்து அமர்ந்து விட்டார்.

ஜீபூம்பா பூதம் போல் திடீரென்று மேடையில் தோன்றி விட்டான் அஸ்வத்தாமன். மணமகள் அறையிலிருந்து குடுகுடுவென்று ஓடி வந்து மணமேடையில் அமர்ந்து கொண்டாள் கிருஷ்ணதுளசி.

அருகில் அமர்ந்தவனை திரும்பிப் பார்க்க அஸ்வத்தாமன் அவள் ஆசைப்பட்டது போல், மீசையையும் தாடியையும் தலைமுடியையும் அளவாக ட்ரிம் செய்து பட்டு வேட்டி சட்டையில் அழகாக இருந்தான். கிருஷ்ணதுளசியை பார்த்ததும் வசீகரமாக கண் சிமிட்டினான்.

பாவி! இப்படி கண்சிமிட்டியே என்னை கவுத்துட்டான், நினைத்தபடி தலை குனிந்து கொண்டாள் கிருஷ்ணதுளசி.

மாடசாமி திருமணத்திற்கு சம்மதிக்கலாமா? வேண்டாமா? என்ற யோசனையில் இருந்த போதே அஸ்வத்தாமன்

கிருஷ்ணதுளசியின் கழுத்தில் தாலி கட்டி விட்டான்.

—----------

மலர் தூவப்பட்ட படுக்கையில் அஸ்வத்தாமன் காத்திருக்க கிருஷ்ணதுளசி வெளியே அனைவருடனும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தாள்.

"காதல்னாலே ஆகாது, பிடிக்காதுன்னு என்னமா சீன் போட்ட?அந்த காதல் படத்தையே எப்படி ஓட்டுன? இப்போ அந்த டைரக்டரையே காதல் பண்ணி கல்யாணம் பண்ணிட்டியேடி"

"காதல் பிடிக்காதுன்னு நான் எப்போடி சொன்னேன். நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்கன்னா நான் என்ன செய்ய முடியும்? நீங்க ஆச்சரியப்பட வேண்டியது என்னை பார்த்து இல்ல, இவ்வளவு பிளான் போட்டாரே அந்த சகுனியை பார்த்து..."

"அவர்தான் காதல் சகுனியாச்சே! பிளான் போட மாட்டாரா என்ன?"

"காதலிலும் சகுனி வேலை முக்கியம்னு இப்ப புரியுதா?" சுஜாதா கேட்க கிருஷ்ணதுளசி ஆமோதித்து தலையசைத்தாள்.

"என் விஷயம் வீட்ல எப்ப பேச போறீங்க அண்ணி?" நிரஞ்சன் பவ்யமாக கேட்க "இரண்டு வருடம் போகட்டும்" அலட்சியமாக கையை அசைத்துவிட்டு எழுந்தாள்.

—-------

அறைக்குள் அஸ்வத் போனில் பேசிக் கொண்டிருந்தான். "சரி சரி உன் வேலை முடிந்தது. அவனை வழியில் எங்காவது கழட்டி விட்டு விட்டு உன் வீடு போய் சேர், உனக்கு பணம் அக்கவுண்டில் வந்துவிடும்"

"யாரிடம் பேசுகிறீர்கள்?"

"மோனிஷா... என் தேவதை" கண்சிமிட்டினான்.

"உங்கள் பட ஹீரோயின் தானே? அவளைப் பற்றி இப்போது என்ன பேச்சு?" கிருஷ்ணதுளசி முறைக்க,

" ஏய் கிருஷ்ணா அவள் இல்லாமல் நம் திருமணமே நடந்திருக்காது. அந்த வேலனை திசை திருப்பி கூட்டிப் போனதே அவள்தான்"

"அவளா? ஆனால் அவள் ஏன் இதை செய்ய வேண்டும்?"

"ஏனென்றால் அவள் ஹீரோயின். நான் டைரக்டர்.என் டைரக்சன்படி நடந்தால் அவளுக்கு பணம். அவ்வளவுதான்"

"அவ்வளவுதானே....வேறு ஒன்றும் இல்லையே?"

"உன்னையெல்லாம் கல்யாணம் செய்துகொண்டு நான் வேறு எதற்காவது ஆசைப்பட முடியுமா? அவ்வளவுதான் தாயே!பார் கிருஷ்ணா நான் நல்ல மூடில் இருக்கிறேன்.மூடை கெடுக்காதே, இங்கே வா" அவள் கைப்பற்றி அருகே இழுத்துக் கொண்டான்.

அஸ்வத்தாமனின் கன்னங்கள் துடித்தன. இதழ்கள் குவிந்தன. கண்களில் காதல் வழிந்தது.குவிந்த இதழ்கள் கிருஷ்ணதுளசியின் முகத்தை நெருங்கியதும் மிக லேசாக விரிந்து கொள்ள, அவள் முகத்தில் தயக்கமும்,தடுமாற்றமும் அவற்றை மீறிய ஆர்வமும் தெரிந்தது. இரு உதடுகளும் ஒன்றை ஒன்று நெருங்கி கவ்விக் கொண்டன. எலியை கவ்வும் பூனையின் வேகத்துடன் இருந்தது அந்த இதழணைவு.

கிருஷ்ணதுளசிக்கு இப்போது இந்த முத்தத்தை... காதலை...காதல் சகுனியை மிகவும் பிடித்துப் போனது.

-நிறைவு-